பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | தை 10 | செவ்வாய்க்கிழமை 23.01.2018 | கதிர் 79

## ஆணைக்குழுக்களின் இரு அறிக்கைகளும் இன்று சபையில்!

கொழும்பு, ஜன.23

மத்திய வங்கியின் பிணைமுறி தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக் குழு அறிக்கை மற்றும் பாரிய ஊழல் மோசடிகள் தொடர்பி லான ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை ஆகி பக்கம் 18

## சிவசக்தி ஆனந்தனின் குற்றச்சாட்டை எண்ணிக் கண்ணீர் விட்டாராம் மாவை



### நேற்றைய கூட்டத்தில் அவரே தெரிவிப்பு

- எஸ்.நிதர்ஷன் -

வரவு - செலவுத்திட்டத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரித்த தற்காக அரசாங்கத் தால் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் நாடாளுமன்ற உறுப் பினர்களுக்குத் தலா இரண்டு கோடி ரூபா பக்கம் 03

## இடைக்கால அறிக்கைக்கு ஆணை வழங்கும் தேர்தல் அல்ல இது!

### நிலைப்பாட்டை விளக்குகின்றார் சிறிதரன் எம்.பி.

நாங்கள் இந்தத் தேர்தலில் இடைக் கால அறிக்கைக்கு ஆணை வழங்குகள் என்று மக்களிடம் கோரவில்லை. இது அதற்கான தேர்தலும் அல்ல. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எங்காவது இடைக்கால அறிக்கைக்கு ஆணை கோரி இந்த தேர் தலில் வாக்களியுங்கள் என்று கோரியுள் ளனரா? அதனை உறுதிப்படுத்த முடி யுமா?

– இவ்வாறு கேட்கின் றார் தமிழ்த் தேசியக் கூட் டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன்.

நேற்று முன்தினம் கிளி நொச்சி–வட்டக்கச்சி பொதுச் சந்தை பக்கம் 18



## கூட்டமைப்பு மீது குற்றம் சுமத்தியமையால் சிவசக்தி ஆனந்தனுக்கு விரைவில் சிக்கல்

### சராவணபவன் எம்.பி. தெரிவிப்பு



- எஸ்.நிதர்ஷன் -

தமிழ்த் தேசியக் கூட் டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் விலை போயுள்ளனர் என விமர் சித்துள்ளசகநாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனுக்கு தற்போது சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன எனவும் அச்சிக்கல்கள் பக்கம் 03

# கூட்டமைப்பு வீழ்ந்தால் தமிழரின் பலமும் வீழும்!

### கூறுகிறார் சித்தார்த்தன்

- எஸ்.நிதர்ஷன் -

யாழ்ப்பாணம், ஜனவரி 23

தமிழீழ விடுதலைப் புலிகளின் காலத்திற் குப் பின்னர் தமிழ் மக்களின் பலம் எவ்வாறு குறைந்ததோ அதேபோன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பலமும் குறைந்தால் தமிழ் மக் களின் பலம் மீளவும் வீழ்ச்சி அடைந்துவிடும் எனத் தெரிவித்திருக்கின்ற கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் புளொட் அமைப் பின் தலைவருமான தர்மலிங்கம் சித்தார்த் தன்கூட்டமைப்பின் பலம்தான் தமிழ் மக்களின் பலமும் என்றும் கூறினார். பக்கம் 18

## அன்னப்பட்சி போன்று மக்கள் சரியாகப் பிரித்துக் கையாள்வர்

### அவைத் தலைவர் சிவஞானம் நம்பிக்கை

- எஸ்.நிதர்ஷன் -

அன்னப்பட்சிகள் போன்றேதமிழ் மக்களும் செயற்படுவார்கள் என்று நம்பிக்கை வெளியிட் டுள்ள வடக்கு மாகாண பக்கம் 18



## ஏ.இ.மனோகரன் காலமானார்



புகழ் பெற்றபொப் இசைப்பாட கரும்திரைப் பட நடிகரு மான ஏ.இ. பக்கம் 18

## யாழ். மாநகரசபைத் தேர்தலுக்கான கூட்டமைப்பு விஞ்ஞாபனம் வெளியீடு



- எஸ்.நிதர்ஷன் -

"நிரந்தரத் தீர்வு–நிலைத்து நிற்கும் அபிவிருத்தி– செழிப்பான வாழ்க்கை' ' என்ற கருதுகோளுடன் 'சுத்தமான பசுமை மாநகரை பக்கம் 18

## பொலிஸ், நீதித்துறை ஆகியனவும் ஜனாதிபதியின் கீழ் வரவேண்டும்

### நேர்மையான விசாரணை நடக்க அது அவசியம் என்கிறார் வாசு

பொலிஸ் மற்றும் நீதித் துறை விடயங்களைக் கையாளும் பொறுப்பை யும் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன பெற்றுக் கொள்ள வேண்டும் என கூட்டுஎதிரணியின்நாடாளு மன்றஉறுப்பினர்வாசுதேவ பக்கம் 18



## ஈ.பி.டி.பி. மீது சேறு பூசும் வேலையில் சில ஊடகங்கள்!

### டக்ளஸ் தேவானந்தா விசனம்

வவுனியா, ஜன.23

எமது கட்சிக்கு களங் கம் ஏற்படுத்தும் முகமாக வும் சேறுபூசும் வகையி லும் திட்டமிட்ட வகையில் இதர தமிழ் அரசியல்வாதி களும் சில ஊடகங்களும் செயற் பட்டு வருகின்றமை யையிட்டு நாம் மிகுந்த வேதனை அடைகின்றோம் பக்கம் 18



## இது ரகசியம் அல்ல!

சிவசக்தி ஆனந்தன் எம்.பி. உசுப்பிவிட்ட விவகாரம் இப்போது நன்றாகச் சூடு பிடித்துவிட்டது.

அதற்கு விளக்கமளிக்கும் கூட்டமைப்பு எம்.பிமார் எல்லோரும் முழுப்பூசணிக்காயை சோற்றில் மறைக் கப் படும்பாடு பெரும்பாடாக பக்கம் 03

### யாழ். பல்கலை மோதல் சம்பவம்:

## 4 சிங்கள மாணவர்களுக்கு விளக்க மறியல் உத்தரவு

- எஸ்.நிதர்ஷன் -

யாழ்ப்பாணப் பல் கலைக் கழக முகாமைத் துவ பீட 3ஆம் வருட சிங் கள மாணவர்கள் 4 பேர் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றின் உத்தரவில் விளக்க மறியலில் வைக் கப்பட்டுள்ளனர்.

பல்கலைக்கழக 4ஆம் வருட மாணவர்கள் இரு பக்கம் 18

## தேர்தல் வன்முறை, மோசமான குற்றங்களுக்கு தேர்தல் முடியும் வரையில் பிணை கிடையாது!

### நீதிபதி இளஞ்செழியன் நேற்று அதிரடி உத்தரவு

- எஸ்.நிதர்ஷன் -

உள்ளூராட்சி தேர்தல் நடத்துவதற்குத் திகதி குறிக்கப்பட்டு தேர்தல் நடவடிக்கை மேற்கொள் ளப்பட்டுள்ள தற்போதைய நிலையில், தேர்தல் தொடர் பான வன்முறையில் யாரே னும் கைதுசெய்யப்பட்டால் அவர் சந்தேகநபர்களா ராக இருந்தாலும், வாக்காள ராக இருந்தாலும் தேர்தல் முடியும் வரை அவருக்குப் பிணை வழங்கப்படமாட் டாது என யாழ்.மேல் நீதி மன்ற நீதிபதி மாணிக்க வாசகர் இளஞ்செழியன் பக்கம் 18

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவட்ட அபிவிருத்திக்கு ஒதுக்கப்படும் நிதி குறித்து சிலர் பொய்யான பரப்புரை செய்கின்றனர்

## சித்தார்த்தன் தெரிவிப்பு

வவுனியா, ஜன. 23

மாவட்ட அபிவிருத்திக்கு என ஒதுக்கப்படும் நிதி குறித்து சிலர் பொய்யான பரப்புரை செய்கின்றார்கள் என புளொட் அமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

வவுனியா திருநாவற்குளத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் உள்ளூராட்சி மன்ற வேட்பாளர் எஸ்.காண்டீபனின் தேர்தல் அலுவலகம் நேற்றுமுன்தினம் மாலை 4.30 மணிக்கு யாழ். நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தாத்தன் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இடைக்கால அறிக்கையை பற்றி இப்போது பேசப்படுகின்றது. அது இறுதி அறிக்கை அல்ல! அது முழுமையடையும் போதுதான் நாங்கள் அதை ஏற்றுக்கொள்வதா? நிராகரிப்பதா? என்பதை முடிவெடுக்க முடியும்.

மைத்திரிபால சிறிசேனாவிற்கு ஜனாதிபதியாக வருவதற்கு எண்பது வீதமான தமிழ் மக்கள் வாக்களித்துள்ளார்கள். காணாமற்போனோர், அரசியல் கைதிகள் விவகாரங்களில் அரசு மெத்தனமாக இருந்தாலும், தமிழ் மக்களின் எதிர்கால நன்மை கருதி, நாங்கள் பொறுமை காக்கின்றோம்.

அரசால் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு 'பிரதேச அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட நிதி' ஒரு சில நாடாளு மன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கவில்லை.

பட்ஜெட்டுக்கு வாக்களிப்பதற்கும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கபட்ட நிதிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்பதுடன், வன்னி மக்கள் ஒரு நாடாளுமன்ற உறுப்பினரூடாக வரும் அபிவிருத்தியை இழந்துள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் அந்தந்த மாவட்ட அபிவிருத்திக்கு என ஒதுக்கப்படும் நிதி, மாவட்ட அபிவிருத்திக்கு மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. இது அனைவருக்கும் தெரியும். இதனைத் திரித்து சிலர் பொய்யாக பரப்புரை செய்கின்றனர்.

சுரேஸ் பிறேமச்சந்திரன் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் அரசிடமிருந்து பிரத்தியேகமாக நிதியை பெற்று, அபிவிருத்தி வேலை களை செய்திருந்தார் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.



(க-100)

# கைது செய்யப்படவுள்ளார் ரவி கருணாநாயக்க?

கொழும்பு, ஜன. 23

முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கா கைது செய்யப்படவுள்ளார் என்று கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதிச் செயலக அதி காரி ஒருவரால் நடத்தப்படும் இணையம் ஒன்றை மேற்கோள் காட்டியே இந்தச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

மத்திய வங்கி பிணை முறி மோசடி குறித்து விசாரித்த அதிபர் ஆணைக்குழுவுக்கு பொய் சாட்சியம் அளித்தார் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே ரவி கருணாநாயக்க கைது செய்யப்படவுள்ளார் என்று கூறப்படுகிறது.



ஜனாதிபதி ஆணைக் குழுவுக்கு பொய்ச்சாட்சியம் அளிப்பது மோசமான குற்றம் என்றும், இந்தக் குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்படுபவர் குறைந்தது 3 மாதங்கள் பிணை யில் வெளிவர முடியாது என்றும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது. ஆணைக்குழுவின் அறிக்கையில், ரவி கருணா நாயக்க பொய்ச்சாட்சியம் அளித்தார் என்றும் அவருக்கு எதிராகக் குற்றவியல் நடவடிக்கை எடுக்குமாறும் பரிந்துரைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கையுடனான உறவுகளை பலப்படுத்தவுள்ளார் சீனத் தூதுவர்!



கொழும்பு, ஜன. 23

இலங்கைக்கான புதிய சீனத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள செங் சுவேயுவான் நேற்றுமுன்தினம் கொழும்பு வந்து சேர்ந்துள்ளார்.

அவரை கட்டுநாயக்க விமான நிலையத்தில் இலங்கை வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள், சீன- இலங்கை நட்புறவுச் சங்கப் பிரதிநிதிகள், சீன தொழிற்றுறை மற்றும் தூதரக அதிகாரிகள் வரவேற்றனர்.

இலங்கைக்கான சீனாவின் 21 ஆவது தூதுவராக செங் சுவேயுவான் பொறுப்பேற்கவுள்ளார்.

இலங்கைக்கான சீனத் தூதுவராகப் பணியாற்றிய ஷி ஷியான் லியாங் அண்மையில் தமது பணிக்காலம் முடிந்த நாடு திரும்பியமையை அடுத்து, புதிய தூதுவராக செங் சுவேயுவான் பொறுப்பேற்கவுள்ளார்.

தாம் இலங்கை – சீன உறவுகளை மேலும் பலப்படுத்துவதற்கும், பிராந்தியத்தில் அமைதி, உறுதிப்பாடு, செழிப்பு ஆகியவற்றை ஊக்குவிக்கும் வகையிலும், பணியாற்றப்போகிறாா் எனவும் செங் சுவேயுவான் தெரிவித்துள்ளார்.

# நேபாள இராணுவத் தளபதி நாடு திரும்பினார்!

கொழும்பு, ஜன. 23

இலங்கை இராணுவத் தளபதியான லெப்டினன்ட் ஜெனரல் மகேஷ் சேனாநாயக்கவின் அழைப்பை ஏற்று இலங்கைக்கு ஐந்து நாள் விஜயத்தை மேற்கொண்ட நேபாள இராணுவத் தளபதி ஜெனரல் ராஜேந்திர சேத்திரி மற்றும் அவரது பாரியார் உள்ளடங்கலான பத்து இராணுவத்தினர் மற்றும் சிவில் குழுவினர் நேற்று முன்தினம் நாடு திரும்பினர்.

கொழும்பிலுள்ள ஹோட்டலில் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மகேஷ் சேனாநாயக்க தலைமையில் இராணுவ சேவா வனிதாவின் தலைவியும் இராணுவத் தளபதியின் பாரியாருமான திருமதி சந்திரிக்கா சேனாநாயக்க நேபாள இராணுவத் தளபதியான ஜெனரல் ராஜேந்திர சேத்திரி மற்றும் அவரது பாரியாரான திருமதி ரிட்டா சேத்திரி ஆகியோருக்கிடையில் சந்திப்பு இடம்பெற்றது.

இந்த சந்திப்பின்போது இராணுவத் தளபதி இலங்கைக்கு விஜயம் செய்த நேபாள இராணுவத்தளபதியின் சுற்றுப் பயண புகைப்படக் கோவையைக் கையளித்தார்.



அதனைத்தொடர்ந்து பிரதிப் பதவி நிலை அதிகாரியான மேஜர் ஜெனரல் தம்பத் பெனாண்டோ நேபாள இராணுவத் தளபதி மற்றும் குழுவினரை விமான நிலையத்தில் வழி அனுப்பி வைத்தார்.

# கதிர்காமம் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம்; 58 பேரும் பிணையில் விடுதலை!

கொழும்பு, ஜன. 23

கதிர்காமம் பிரதேசத்தில் ஏற்பட்ட பதற்ற நிலையின் பின்னர் கைது செய்யப்பட்ட 58 பேர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் திஸ்ஸமஹாராம நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டமையை அடுத்து அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இந்த நபர்கள் 2 லட்சம் ரூபா பிணை மற்றும் நிபந்தனை களுடன் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

அதன்படி, இந்த நபர்கள் எதிர்வரும் 28 ஆம் திகதி பொலிஸ் நிலையத்திற்கு சமுகமளிக்க வேண்டும் எனவும் ஒவ்வொரு மாதத்தின் இறுதி ஞாயிற்றுக்கிழமைகளில் பொலிஸ் நிலையம் சமுகமளிக்க வேண்டும் எனவும் உயிரிழந்தவரின் இறுதிக் கிரியைகள் நிறைவடையும் வரை இவ்வாறான செயற் பாடுகள் நடைபெறாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் எனவும் அவ்வாறான சம்பவங் கள் இடம்பெற்றால் கைது செய்து விளக்கமறியலில் வைக்கப்படுவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 20 திகதி இரவு பொலிஸாரின் கட்டளையை மீறி மோட்டார் சைக்கிளை ஓட்டிச்சென்றவர் மீது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் உயிரிழந்தமைக்கு எதிர்ப்பு தெரிவித்து பிரதேச வாசிகள் நேற்று முன்தினம் கதிர்காமம் பொலிஸுக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பதற்ற நிலை ஏற்பட்டதை அடுத்து பொலிஸாரால் கண்ணீர் புகைப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டு 58 பேர் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## சிவசக்தி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கப்பட்டதாகக் கூட்டமைப்பின் சக நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் முன்வைத்துள்ள குற்றச்சாட்டு அப்பட்டமான பொய் என்றும், அவரது குற்றச்சாட்டு தமக்குக் கவலை ஏற்படுத்தியதுடன் அதனை நினைத்துத் தாம்கண்ணீசிந்தினார் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

மேற்படி குற்றச்சாட்டுக்கள் தம்மை அச்சுறுத்துவதால் அவை குறித்துத் தேர்தல்கள் ஆணையாளரிடமும் தாம் முறையிட உள்ளார் எனவும் ஆயினும் இரண்டு கோடி ரூபாவுக்கு விலைப் படுபவர்கள் தாங்கள் அல்லர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் யாழ் மாநகர சபைக்கான தேர்தல் விஞ்ஞாபன வெளியீடு நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் நேற்று நடைபெற்றபோது அங்கு உரையாற்றுகையிலேயே மாவை சேனாதிராசா மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

என்னுடைய தனிப்பட்ட வாழ்க்கையிலும் சரி, தமிழரசுக் கட்சிப் பயணத்திலும் சரி, இத்தகைய அநாகரிகமான செயற்பாடுகளை மேற்கொண்டமை கிடையாது. எமது கொள்கைகளின் தந்திரோபாயமாக மத்திய அரசுடனும் பேச்சுக்களை நடத்திவருகின்றோம். அதனடிப்படையில் தான் எமதுமக்களின் பிரச்சினைகள், தேவைகளை நிறைவேற்றுவதற்காக அரசுடன் பேசி இந்த ஒதுக் கீடுகளைப் பெற்றுக் கொண்டோம்.

நாம் எமது தேர்தல் அறிக்கைகளிலும் அரசியற் தீர்வு மற்றும் பாதிக்கப்பட்ட மக்களின் பொருளாதார மேம்பாட்டுடன் இணைந்த எமது மக்களையும் எமது தேசத்தையும் மீளக்கட்டியெழுப்ப வேண்டுமென்ற பிரதான விடயங்களை உள்ளடக்கி வந்திருக்கின்றோம். இதற்கே எமது மக்களும் தமதுஆணையை எமக்கு வழங்கி வந்திருக்கின்றார்.

இவ்வாறு நாம் மக்களுக்காக செய்கின்ற விடயங்களை வைத்து நாம் லஞ்சம் வாங்கினோம் எனக் கூறுவது எமக்கு மிக வேதனையாக உள்ளது. மேலும் இவ்வாறான செய்திகள் வருகின்ற போது அவை பற்றிய விளக்கங்கள் ஊடகங்களுக்குத் தெரியாதா? அதற்கான ஆதரங்கள் இருக்கின்றனவா என்று பார்க்க வேண்டாமா? அவ்வாறான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் எம்மிடம் கேட்க வேண்டுமென்ற தார்மீக கடமை இல்லையா என்றும் ஊடகங்களிடம் கேள்வியெழுப்புகிறேன்.

மக்களுக்காக நாங்கள் செயற்படுகின்ற போதுதமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ன செய்கின்றது என்று தெரியாதவர்கள் கேட்பதில் நியாயம் இருந்தாலும் தெரிந்தவர்கள் ஏன் அவ்வாறு கேட்கின்றனர்? நாம் மக்களுக்கானஅரசியல் தீர்வுடன் இணைந்ததாக மக்களின் வாழ்வையும் வளப்படுத்தும் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றோம்

நாம் அரசிடம் இரண்டு கோடி ரூபா அல்ல, பல ஆயிரம் கோடி ரூபாவைப் பெற்று மக்களுக்குச் சேவையாற்றியிருக்கின்றோம். இவ்வாறு நாம் செயற்படுகின்ற போது தான் இவ்வாறான குற்றச் சாட்டுக்களும் முன்வைக்கப்படுகின்றன. இவ்வாறு இரண்டு கோடி ரூபாவுக்கு விலை போபவர்கள் நாங்கள் அல்லர். எம்மை விலை போனவர்கள் என்று சொல்பவர்களுக்கு அது பொருந்தினாலும், எமக்கு அது பொருந்தாது.

ஆயினும் இந்தக் குற்றச்சாட் டுக்கள் எமக்கு மிகக் கவலையை ஏற்படுத்தியுள்ளமையுடன் அது எம்மை அச்சுறுத்தும் செயல் என்பதால் தேர்தல்கள் ஆணையாளரிடமும் முறையிடஉள் ளோம்.நாங்கள் கொலையாளிகளோ, கொள்ளையடிப்பவர்களோ, மோசடியாளர்களோ அல்லர். நாங்கள் எப்போதும் பொய் சொல்லியதில்லை. மக்களுக்கு உண்மையையே சொல்லி வருகின்றோம்.இந் நிலையில் மக்களை ஏமாற்றி வாக்குப் பெறுவதற்காகத் தான் நாடாளுமன்ற உறுப்பினர் பொய்யான குற்றச்சாட்டை முன்வைத்திருக்கின்றார்.

தமிழ்த் தலைமையை மாற்ற வேண்டும். தமிழரசுக் கட்சியை வேரறுக்க வேண்டும். என்றெல்லாம் பேசி வருகின்றனர். இதே போன்று தான் கடந்த தேர்தலிலும் சம்பந்தனை, சுமந்திரனைத் தோற்கடிக்கவேண்டுமென்று கூறினார்கள்.உண்மையில் நடந்தது என்ன? அவர்கள் என்ன ஆனார்கள் என்பது தெரியும்.

அன்றுஅவ்வாறு கூறியவர் கள் தான் இன்றும் அதனையே கூறுகின்றனர். ஆயினும் அவ் வாறு கூறி வருபவர்களது கொள்கைகள், கோட்பாடுகள் என்ன, தங்கள் திட்டங்கள் என்ன என்றாவது அவர்கள் சொல்லவும் இல்லை. ஆனால் நாம் எமது கொள்கை கோட்பாடுகளை முன் வைத்தே வருகின்றோம்.

நாம் நிதானமாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற இந்தச் சந்தர்ப்பத்தில் பொய்களைப் பேசி மக்களைத் திசை திருப்பாது உண்மையைப் பேசவேண்டும்.

தெற்கிலே இந்த அரசாங்கத்தை தோற்கடிக்க வேண்டு மென்றும் இங்கே வடக்கு கிழக்கிலேதமிழரசுக் கட்சியை தோற் கடிக்கவேண்டுமென்றும் பலரும் போராடுகின்றனர். – என்றார்.

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கின்றது.

தம்மைத் தவிர்ந்த கூட்டமைப்பு எம்.பிக்கள்தலா இரண்டுகோடி ரூபாவை அரசிடமிருந்து லஞ்சப் பணமாகப் பெற்றனர்என்றசாரப்பட சிவசக்தி ஆனந்தன் குற்றம் சுமத்தியுள்ளார் என்பது போலத்தான் – என்ற தோரணையில் தான்–கூட்டமைப்புத்தரப்பினர் இப்போது கதையை அவிழ்த்து விட்டிருக் கின்றனர்.

சிவசக்தி ஆனந்தன் அப்படி எம்.பிக்கள் இரண்டு கோடி ரூபா லஞ்சப் பணம் பெற்றனர்என்று கூறவேயில்லை. சத்தம் சந்தடியின்றி, மற்றையஎம்.பிக்களுக்குக் கிடைக்காத மேலதிக இரண்டு கோடி ரூபா ஒதுக்கீட்டை அவர்கள் பெற்றிருக்கின்றனர் என்றும் அது ‘அரசியல் லஞ்சம்’ ஆகக்கருதக்கூடியதுஎன்றும்சாரப்படவே அவர் குற்றம் சுமத்தியிருந்தார்.

“கூட்டமைப்பின் 16 எம்.பிக்களில் என்னைத்தவிர்ந்தஏனைய15பேருக்கும் பிரதமர் தலைமையிலான பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஊடா கத் தலா 2 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.” – என்று தான் சிவசக்தி ஆனந்தன் கூறினார் என ‘காலைக்கதிர்’ செய்தி வெளியிட்டிருந்தது.

கூட்டமைப்பு எம்.பிக்களின் விருப்பத்துக்கு அமைவான ஒவ்வொன்றும் ரூ.5லட்சத்துக்குக்குறையாதஅதேநேரம் ரூ. 15 லட்சத்துக்குக் கூடாத – மேலதிக திட்டங்களுக்கு இந்த நிதியை அவர்கள் பயன்படுத்த வசதி செய்யப்பட்டது.

இந்த வசதி ஏனைய எம்.பிக்க ளுக்கு வழங்கப்படவில்லை. தமக்கு இந்த வாய்ப்புத் தரப்பட வில்லை என்பதை யாழ்.மாவட்டத்தின்மற்றொருஎம்.பியான டக்ளஸ் தேவானந்தா நேற்றிரவு உறுதிப்படுத்தினார்.

01. கூட்டமைப்பு எம்.பிக்களுக்கு மட்டும் இந்த வசதி, வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

02. ஆளும் தரப்பில் இல்லாத எதிரணி எம்.பிக்களுக்கு இந்த வசதி அரசால் வழங்கப்பட்டுள்ளது.

03. அதுவும் மற்றைய தரப்பு எம்.பிக்களுக்கு வெளிப்படுத்தப் படாமல் – பகிரங்கப்படுத்தப்படாமல் – அது ஒப்பேற்றப்பட்டிருக் கின்றது.

04. வழமையான எம்.பிக் களுக்கு உரிய ஒதுக்கீட்டுக்கு மேலதிகமான – சத்தம் சந்தடியற்று வழங்கப்பட்ட – ஒதுக்கீடு இது.

05. அவ்வாறாயின், இது அரசுத்தரப்பால், ஒரு குறிப்பிட்ட நோக்கை இலக்கு வைத்து, ஒரு குறிப்பிட்ட கட்சி எம்.பிக்களுக்கு மட்டும் வழங்கப்பட்ட ‘அரசியல் லஞ்சம்’ அல்லாமல் வேறு யாது?

-மின்னல்-

## கூட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்ன என்பது பற்றி இன்னமும் ஒரு மாதத்தில் தெரிய வருமென்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்துள்ளார்.

கூட்டமைப்பு அரசியற் தீர்விற்கும், அபிவிருத்திக்கும்தனித்தனிகுழுக்களாகவே நாடாளுமன்றத்தில் செயற்பட்டு வருவதைத் தாங்கள் இதுவரையில் வெளிப்படுத்தாது இருந்து வந்தனர் எனவும் இனியும் அவ்வாறு இருக்கமுடியாதென்பதால் ஊடக சந்திப்புக்களை நடத்தி அவற்றைத் தாம் வெளிப்படுத்த உள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

யாழ். மாநகர சபைக்கான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபன வெளியீட்டு நிகழ்வு நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் நேற்று நடைபெற்ற போது அங்கு உரையாற்றுகையிலையே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில் –

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கூட்டமைப்பு 80 வீதமான வாக்குகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அதனூடாகவே முழுமையான பலத்தைப் பெற்று பல்வேறு செயற்பாடுகளை விரைவாக முன்னெடுக்க முடியும்.

ஏனெனில் முன்னெப்போதும் இல்லாத வகையில் போட்டி நிலைமைகள் தேர்தல் அறிவிக்கப்பட்டது முதல் காணப்பட்டன. ஆனால் அப்போது இருந்த போட்டி நிலைமைகள் தற்போது இல்லை. ஏனெனில் வேறு கட்சிகளுக்குச் சென்றவர்களும் தற்போது எம்மோடு வந்த இணைந்துள்ளனர்.

அரசியற் தீர்விற்கு குழுவொன்று எமது கட்சியில் செயற்பட்டு வருகின்ற அதேநேரத்தில், அபிவிருத்திக்கும் ஒரு குழு செயற்படுகின்றது. அவ்வாறு அபிவிருத்திக்குச் செயற்படுகின்ற குழு, தான் செய்கின்ற விடயங்களை பெரிதாக வெளியில் சொல்வதில்லை. ஆகையினால் தான் பல்வேறு கருத்துக்களைப் பலரும் வெளியிடுகின்றன.

இதனால் இதுவரைகாலமும் ஊடக சந்திப்புக்களை நடத்துவதில்லை என்று இருந்த நான், இனி ஊடக சந்திப்புகளை நடத்த வேண்டுமென்ற நிலைக்கு வந்துள்ளேன். நாடாளுமன்றத்தில் எங்கள் எல்லோருக்கும் இருபது மில்லியன் ரூபா கிடைத்தது. அதற்கு நாங்கள் பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை முன்மொழிந்து கொடுத்திருந்தோம். இதற்கான வேலைகளும் நடைபெற்று வருகின்றன.

அதனையே சிலர் விமர்சிக்கின்றனர். நாடாளுமன்றத்தில் இரண்டு மொழியாவது தெரிந்திருக்க வேண்டும். ஒரு மொழி தெரிந்திருந்தால் கஷ்டம்தான். ஆகையினால் செல்லும் இடங்களில் மொழி பெயர்ப்பாளரைக் கூட்டிக் கொண்டு செல்ல முடியாதுதானே. லஞ்சம் என்றால் என்ன, அபிவிருத்தி திட்டங்கள் என்றால் என்ன என்ற வித்தியாசம் தெரியாதவர் எப்படி நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கலாம்?

இத்தகைய கருத்துக்களால் தற்போது சிக்கல்கள் ஏற்பட்டிருக்கின்றன. அந்தச் சிக்கல்கள் எமக்கு அல்ல. இதனைக் கூறியவருக்குத் தான். அந்தச் சிக்கல்கள் என்ன என்பவை பற்றி ஊடகவியியலாளர்களான நீங்களே வெளியிடும் நிலைமை வரும். – என்றார்.

மேலும் தன்னுடைய விளம்பரத்திற்காக அப்பட்டமான பொய்யை அந்த நாடாளுமன்ற உறுப்பினர் கூறியுள்ளார் எனவும் அது மிகவும் கவலையளிப்பதாகவும் தெரிவித்த சரவணபவன், தாங்கள் உண்மையையே சொல்கின்றனர் எனவும் பொய்யே சொலவதில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## ஏ.இ...

(18ஆம் பக்கத் தொடர்ச்சி)

“சுராங்கனி சுராங்கனி சுராங்கனிக்கா மாலுகெனாவா” என்ற பாடல் மூலம் இந்தியாவில் பிரபல்யடைந்த இவர் ‘சிலோன் மனோகரன்’ எனவும் அழைக்கப்பட்டார்.

பாசநிலா, வாடைக்காற்று, புதியகாற்று போன்ற இலங்கைப் படங்களில் நடித்த இவர். சிவாஜிகணேசன், ரஜினிகாந், கமலஹாசன், தர்மேந்திரா மற்றும் மம்முட்டி ஆகிய நடிகர்களுடன் நடித்துள்ளார். ‘அத்திப் பூக்கள், ‘திருமதி செல்வம்’ ‘அஞ்சலி’ போன்ற தொடர் நாடகங்களிலும்; நடித்தார்

‘விரும்புகிறேன்’, ‘தொட்டி ஜெயா’. ’ஜேஜே’ போன்ற படங்களில் இவர் பாடியுள்ளார் – என்பது குறிப்பிடத்தக்கது.

இவரது இறுதிக்கிரியை நாளை சென்னையில் இடம்பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

டயானா பிளாஸ்ரிக் மீள்சுழற்சி

அனைத்து வகையான வாகனங்கள், மோட்டார் சைக்கிள் மற்றும் உடைந்த பிளாஸ்ரிக் பொருள்கள் 1, 2, 3 வருட கால உத்தரவாதத்துடன் சிறந்த முறையில் ஒட்டித் தரப்படும்

108, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 8680
077 592 5088

அன்பான அரச அலுவலர்களே!

‘தூய கரங்கள் - தூய நகரம்’ ‘Clean hands – Clean City’

பல்வேறு வழிகளிலும் எமது மக்களின் நலனுக்காய் உங்களை அற்பணித்து கடமையாற்றும் அரச ஊழியர்களே, இச்சமூகத்தில் மிகப்பெரிய கருத்துருவாக்கங்களை செய்து சமூக மாற்றத்திற்கான அடித்தளத்தை இடும் நீங்களும்தான் அரசியல் மாற்றத்திற்கும் காரணமாக அமைய வேண்டும் என்பது எங்கள் அன்பான வேண்டுகோள்.

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல் அபிவிருத்திக்கான தேர்தலாக இருந்தாலும் இது **பிரிக்கப்பட்ட வடக்கு கிழக்கில் பௌத்தத்திற்கு முன்னுரிமை கொடுத்து ஒற்றை யாட்சியை வலியுறுத்தும் இடைக்கால அரசியல் அமைப்பிற்கு** ஆதரவு தேடுவதாகவே அமையப்போகிறது என்பதே உண்மை. இதற்கு ஆதரவு தேடும் முகமாகவே தமிழ்த்தேசிய கூட்டமைப்பு உள்ளடங்கலான அரசின் பங்காளி கட்சிகள் யாவும் இத்தேர்தலில் களமிறங்கியுள்ளன என்பதை நாம் உணரவேண்டும்.

எனவே உங்கள் மனசாட்சியின் கதவுகளை உரக்கத்தட்டி இப்பெரும் ஆபத்தினை உணர்ந்து எமக்கு வாக்களித்து அரசியல் பேரம்பேசுகின்ற ஒரு சக்தியாக எதிர்காலத்தில் எமது அரசியல் இயக்கத்தை உருவாக்குவீர்கள் என்பது எங்களுடைய அசையாத நம்பிக்கை.

அதுமட்டுமல்லாது **‘தூய கரங்கள் - தூய நகரம்’** என்ற தொனிப் பொருளில் இம்முறை உள்ளூராட்சித்தேர்தலை எதிர்கொள்கின்ற நாம் புலம்பெயர் தமிழ் உறவுகளின் நிதி உதவியுடன் தாயகத்தில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ள காத்திருக்கின்றோம். தமிழர் அரசியலில் புதிய இரத்தத்தினை பாய்ச்சி, புதிய சிந்தனையுடன் நமக்கான அரசியலை முன்னெடுக்க எம்மோடு இணைந்து எமது கரங்களை பலப்படுத்த எமக்கு வாக்களிக்குமாறு அன்போடு வேண்டுகின்றோம்.

**அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் சைக்கிள் சின்னத்தில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், தமிழ்தேசிய மக்கள் முன்னனி, சம உரிமை இயக்கம் மற்றும் நம்பிகள் நல்வாழ்வுக் கழகம்** என்பவற்றின் கூட்டான தமிழ் தேசியப் பேரவைக்கு வாக்களித்து எமக்கும் ஒரு சந்தர்ப்பத்தை வழங்கித்தான் பாருங்கள்.

நன்றி

கஜேந்திரகுமார் காங்கேசர் பொன்னம்பலம்

ஜீ.ஜீ.பொன்னம்பலம்
பொதுச்செயலாளர்
அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்
"காங்கிரஸ் இல்லம்"
120, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.



அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சின்னத்தில்
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடன்
தமிழ்த் தேசியப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## தமிழர் தலைமையின் கவனிப்புக்கு!

தற்போதைய அரசமைப்பு - நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமைக்கு வழி செய்யும் யாப்பு - தயாரிக்கப்பட்டு நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட போது நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் ஒரு தமிழரே இருந்தார். தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமான அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம்தான் அவர்.

இப்போது, சுமார் நான்கு தசாப்த காலத்தின் பின்னர் புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கான முயற்சி எடுக்கப்படும் போதும் தமிழர் ஒருவரே நாட்டின் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கின்ற நிலைமை உள்ளது.

அன்றைய எதிர்க்கட்சித் தலைவரான அமிர்தலிங்கத்துக்கு வலதுகரமாக விளங்கிய இரா.சம்பந்தனே இன்று தமிழர்களின் தலைவர் என்ற அந்தஸ்துடன் எதிர்க் கட்சித் தலைவராக விளங்குகின்றார்.

இந்த இரண்டு எதிர்க்கட்சித் தலைவர்கள் நிலையிலும் ஒரு முக்கிய வேறுபாடு உண்டு.

அன்றைய அரசமைப்பு உருவாக்க முயற்சியில் அன்றைய எதிர்க்கட்சித் தலைவர் - தமிழர் தலைவர் - பங்கேற்கவில்லை. அந்த நடவடிக்கையைப் புறக்கணித்து, அதில் தாங்கள் சம்பந்தப்படவேயில்லை என்பதை அவர் வெளிப்படுத்தி நின்றார்.

இன்றைய எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தனோ இந்த அரசமைப்பு உருவாக்க முயற்சியில் முழுதாகத் தம்மை ஈடுபடுத்தி, அதில் அர்ப்பணித்து நிற்கின்றார்.

இங்குதான் இந்தப் பிரச்சினையின் முக்கிய அடிப்படை ஒன்று - அம்சம் ஒன்று - சுட்டிக்காட்டப்பட வேண்டியதாக இருக்கின்றது.

சுதந்திர இலங்கைக்கான சோல்பரி யாப்பினதோ -

அல்லது அதற்கு பின்னர் 1972 இல் தேசிய அரசுப் பேரவை மூலம் உருவாக்கப்பட்ட இலங்கையின் குடியரசு அரசமைப்பினதோ -

அல்லது கடைசியாக 1978 இல் கொண்டு வரப்பட்ட தற்போதைய நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறைக்கான அரசமைப்பினதோ -

உருவாக்கங்களில் தமிழர் தரப்பு முழுமையாகப் பங்கேற்கவில்லை என்பது கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

தமிழர்களின் விருப்பம் இன்றி, எண்கணித எண்ணிக்கையில் தாங்கள் பெரும்பான்மை என்பதை வைத்துக் கொண்டு, அதை ஜனநாயக மாண்பாகக் காட்டிக் கொண்டு, அதனடிப்படையில் இந்த அரசமைப்புக்கள், இந்தத் தீவின் தமிழர்களின் மீது பெரும்பான்மைச் சிங்களவர்களினால் வல்வந்தமாகத் திணிக்கப்பட்டன என்பதே அதுவாகும்.

தமிழர் மீது பலவந்தமாகத் திணிக்கப்பட்ட ஓர் அரசாட்சி முறையின் கீழ் அவர்கள் அடக்கப்பட்டு வருகின்றார்கள் என்ற நிலைமைதான், இதுவரை காலமும் தமிழர்களின் உரிமைப் போராட்டத்துக்கு சர்வதேச ஆதரவு கிட்டுவதற்கான அடிப்படையாகவும், மூலமாகவும், நியாயமாகவும் இருந்து வருகின்றது என்பது மறுக்கப்பாலதன்று.

இப்போதைய புதிய அரசமைப்பு முயற்சியில் தமிழர்களின் ஜனநாயகப் பிரதிநிதிகள் என்று கூறிக் கொள்ளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், அதன் தலைமையும் முழு அளவில் - முழு ஈடுபாட்டுடன் - பங்கு பற்றி வருகின்றன. அந்த அரசமைப்பு உருவாக்க முயற்சிகள் குறித்து முழு அளவில் திருப்திகரமான பிரதிபலிப்பை அத்தலைமை வெளிப்படுத்தி வருகின்றமையும் மூடி மறைக்கக் கூடிய ஒன்றல்ல.

ஏற்கனவே இப்பத்தியில் நாம் சில தடவைகள் சுட்டிக் காட்டியபடி, இப்படி புதிய அரசமைப்பு முயற்சியில் தமிழர் தலைமை நேரடியாகப் பங்களித்து, ஈடுபாடு காட்டி, சம்பந்தப்பட்டு வருவதால், இவ்விடயத்தில் தமிழர்கள் ஒன்றுக்கு இரண்டு தடவை எச்சரிக்கையாகவும், அவதானமாகவும் இருப்பது அவசியமானதாகிறது.

தமிழர் தரப்பும் சேர்ந்து, பங்களித்து, ஈடுபட்டு, ஓர் அரசமைப்பை உருவாக்கி, நிறைவேற்றினால், அதன் பின்னர் எமது நியாய பூர்வமான உரிமைக்கான போராட்டத்துக்குரிய அடிப்படைகளும் - அவற்றுக்கான நியாயங்களும் - அடைக்கப்பட்டுவிடும் என்பதுதான் அது. அதனை எந்த நிலையிலும் மறந்துவிடக் கூடாது.

எங்கள் மீது, எமது இணக்கமின்றி, திணிக்கப்பட்ட ஓர் அரசமைப்பினால் நாம் ஆளப்படுகிறோம் - ஆட்சி செய்யப்படுகின்றோம் - என்பதால் அந்த ஆட்சி முறைமைக்கு எதிரான எமது போராட்டத்துக்கு அடிப்படை இருப்பதாகக் கருதி அதை ஏற்று வந்தது சர்வதேசம்.

இனிமேல், நாமும் சேர்ந்து, இணங்கி, பங்களித்து, ஓர் அரசமைப்பைக் கொண்டு வந்து விட்டோம் என்றால், அதற்குப் பின்னரும் அந்த முறைமைக்கு எதிராக நாம் போராட முடியாது. போராடினாலும் அதனை சர்வதேசம், நியாயமான ஒன்றாக ஏற்றுக் கொள்ளமாட்டாது. அத்தகைய போராட்டத்தின் பின்னால் ஒரு தர்க்க ரீதியான நியாயப்பாடு இருப்பதாக அனைத்துலகம் ஒப்புக் கொள்ளாது.

ஆகவே, தென்னிலங்கையோடு, இணங்கிப்பேசி, அதன் மூலம் ஓர் அரசியல் தீர்வையும் உள்ளடக்கிய புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்குத் துணை போகின்ற நமது தமிழ்த் தலைமை, இவ்விடயத்தில் ஒன்றுக்கு இரண்டு தடவைகள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதை, மீண்டும் ஒரு தடவை இப்பத்தியில் வலியுறுத்திக் கூறிவைக்க விரும்புகிறோம்.

# அரசு போதிய நிதியை வழங்காததால் வடக்கில் அபிவிருத்திப் பணிகள் முடக்கம்

## முதலமைச்சர் விக்னேஸ்வரன் குற்றச்சாட்டு



கொழும்பு, ஜன. 23

அரசு போதிய நிதியை வழங்காததால், வடக்கு மாகாண சபையின் பெரும்பாலான அபிவிருத்தித் திட்டங்கள் முடங்கிப் போயுள்ளன என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ. விக்னேஸ்வரன் குற்றம் சாட்டியுள்ளார்.

கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

2016ஆம் ஆண்டு வடக்கு மாகாண சபை 1200 கோடி ரூபாவைக் கோரியிருந்தது. ஆனால், மத்திய அரசு 250 கோடி ரூபாவை மாத்திரமே, 2017 ஆம் ஆண்டில் வழங்கியிருந்தது.

மத்திய அரசு நிதியை வழங்கும் போது, எதற்காக இந்த நிதியைச்செலவிடவேண்டும் என்றும் கூறுகிறது. இந்த நிதியை எதற்காக செலவிடுவது என்று தெரிவு செய்யும் உரிமையும் எமக்கு இல்லை.

வடக்கு மாகாணம் முழுவதற்கும் ஒரே ஒரு தீயணைப்புப் படைப்பிரிவு தான் உள்ளது. அண்மையில் கிளிநொச்சியில் ஏற்பட்ட தீயை அணைக்க, ஒரு மணிநேரம் பயணம் செய்ய வேண்டியிருந்தது. அவர்கள் அங்கு சென்ற போது எல்லாம் எரிந்து சாம்பராகியிருந்தன.

நாங்கள் நிதியைக் கோருகின்ற போது, வடக்கு மாகாண சபைக்கு சிறப்பு கவனிப்பை வழங்க முடியாது என்று மத்திய அரசு கூறுகிறது. ஆனால், எமது பிரதேசம் போரால் பாதிக்கப்பட்டது. இது உண்மை. எமக்கு சிறப்பு கவனிப்பு தேவை. ஏனைய மாகாணங்களுடன் வடக்கை ஒப்பிட முடியாது.

வடக்கு மாகாணசபைக்கு கனேடியத்தமிழர்கள் 50 ஆயிரம் டொலர் நிதியை வழங்க முன்வந்தனர். ஆனால், முதலமைச்சர் நிதியம் இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை. அதனால் அந்த நிதியைப் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளது.

முதலமைச்சர் நிதியத்தை ஆரம்பிப்பதற்கான அனுமதியை வழங்காமல் மத்திய அரசும் மாகாண ஆளுநரும் இழுத்தடித்துக் கொண்டிருக்கின்றனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# பொருளாதார நெருக்கடி இருந்த போதும் அரசை வெற்றிகரமாக முன்னெடுத்தோம்

## பிரதமர் ரணில் பெருமிதம்



கொழும்பு, ஜன. 23

கடும் பொருளாதார பிரச்சினைகளுக்கு மத்தியிலும் கடந்த மூன்று ஆண்டுகளாக பொருளாதாரத்தையும் அரசையும் சிரமங்களுடன் வெற்றிகரமாக முன்னெடுத்துச் சென்றோம் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

குருநாகல் நிக்கவரெட்டிய பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

முன்னாள் ஜனாதிபதி போர் முடிந்த பின்னர், நாட்டை முன்னேற்றி, வேலைவாய்ப்புப் பிரச்சினையைத் தீர்ப்பதாக கூறினார்.

எனினும், பிரச்சினைகளை தீர்க்கவில்லை. இருந்த பிரச்சினைகள் மேலும் உக்கிரம் அடைந்தன. பெருமளவில் கடனைப் பெற்றனர். கடனைத் திரும்பச் செலுத்த நாட்டின் வருமானம் போதுமானதாக இருக்கவில்லை.

கடும் பொருளாதாரப் பிரச்சினைக்கு மத்தியில் நாங்கள் அரசைப் பொறுப்பேற்றபோது, எங்களால் அரசை முன்னெடுத்துச் செல்ல முடியாது என மஹிந்த ராஜபக்ஷ எண்ணினார்.

ஒரு வருடத்தில் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து, அரசாங்கம் கவிழும், அவர் ஆட்சியை பிடிக்கலாம் எனக் கருத்தினார். தற்போது நாடு பொருளாதார ஸ்திரத்தன்மையில் உள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இலங்கையின் கனேடிய உயர் ஆணையாளர் கிழக்கு கடற்படை கட்டளைத் தளபதியுடன் சந்திப்பு



இலங்கையின் கனேடிய உயர் ஆணையாளர் டேவிட் மெகினோன் கிழக்கு கடற்படை கட்டளை தளபதி ரியர் அட்மிரல் நிமல் சரத்சேனவைச் சந்தித்துள்ளார்.

கிழக்கு கடற்படைக் கட்டளை தலைமையகத்தில் இந்த சந்திப்பு அண்மையில் இடம் பெற்றது.

இந்தச் சந்திப்பில் இரு தரப்பு முக்கியத்துவம் வாய்ந்த பல் வேறுபட்ட விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப் பட்டது.

இந்த நிகழ்வை நினைவு கூரும் வகையில் நினைவுச் சின்னங்கள் பரிமாறிக் கொள் ளப்பட்டன.

## கவனயீனமாக வாகனம் செலுத்தியவருக்கு 5 வருட சிறை!

பாதசாரிகள் கடவையி னூடாக பாதையை கடக்க முயற்சித்த சிறுமி மற்றும் தாய் ஆகியோர் மீது கவனயீனமான முறையில் வாகனத்தை செலுத்தி காயத்திற்குள்ளாக்கி உயிரிழக்கச் செய்தமை தொடர்பில் குற்றம் சாட்டப்பட்டவருக்கு 5 வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள் ளப்பட்ட வேளையில் கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி கிஹான் குலதுங்க இந்த மூலம் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பிரபல இசை குழுவொன்றின் உறுப்பினரான லசித பிரியசாந்த த சில்வா என்ற நபருக்கே இவ்வாறு தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த நபருக்கு ஒன்றரை லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## நாளை

24.01.2018
புதன்கிழமை
நட்சத்திரம்: அச்சுவினி பி.ப.4.39 வரை
திதி : ஸப்தமி பி.ப. 12.21வரை
சுபநேரம் : 5.06 – 6.36
இராகுகாலம்: 12.36 – 2.06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடன்களை முகாமை செய்ய புதுச் சட்டம் இயற்றும் அரசு!

கொழும்பு, ஜன. 23

அரசின் கடன் மட்டம் 9,387 பில்லியனால் அதிகரித்துள்ளது. இந்த நிலையில், இலங்கைக்குள்ளும் வெளியிலுமான கடன்களை அதிகரிக்க ஏற்பாடு செய்யவும், பொதுக் கடனை முகாமை செய்யவும் செயற் படுகடன் முகாமைத்துவ சட்டமொன்று இயற்றப்படவுள்ளது என அரச தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.



அரசின் நிதித் தேவைகள் மற்றும் கடன்களை மீளச் செலுத்துவதற்கான கடப்பாடு என்பவற்றை சாத்தியமான குறைந்த செலவில் நடுத்தர மற்றும் நீண்டகால தவணையில் அது தொடர்பான அபாயம் தொடர்பான கவனத்துடன் எட்டுவதை உறுதிப்படுத்துவதும் இதன் இலக்காகவுள்ளது.

இந்த நிலையில், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சராகவுமுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சரவைக்கான தனது சுற்றறிக்கையில், கடன் பேண் தகைமை யானது 2016 ஆம் ஆண்டில் அரசாங்க வருமானத்தில் 76 சதவீதமாக உள்ள நிலையில் அது தேசிய ரீதியில் கவலை தரும் ஒன்றாகவுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

அரசின் கடனை திருப்பிச் செலுத்துவதில் இதற்கு முன் ஒருபோதும் இல்லாத வகையில் தனக்குரிய கடப்பாட்டிலிருந்து வழுவாத போதும் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய முக்கிய எந்தவோர் அபாய நிலையையும் தடுப்பதற்காக சரியான கடன் சீர்திருத்த முறையொன்றை ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது.

புதிய சட்டமானது புதிய தீர்மானமொன்றின் மூலம் குறிப்பிட்ட நிதியாண்டு காலப் பகுதியில் பணத்தை அதிகரிப்பதற்கான அங்கீகாரத்தை வழங்குவதற்கு நாடாளுமன்றத்துக்கு அனுமதியளிக் கிறது.

ஆனால், அந்தப் பணத் தொகை அதற்கு முன்னரான நிதி வரு டத்தின் இறுதியிலான மொத்த நிலுவையிலுள்ள கடனின் 10 சத வீதத்திற்கும் அதிகமாக இருக்கக் கூடாது.

இந்தக் கடனானது அரசாங்க பொது கடன்களுக்கான மீள் நிதியிடல் மற்றும் முற்பண நிதியிடல் நோக்கங்களுக்காக நாணய சட்ட விதி, உள்நாட்டு திறைசேரி சட்டமூல கட்டளைச் சட்டம் மற்றும் பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணைகள் கட்டளைச்சட்டம் என்பன உள்ளடங்கலான சம்பந்தப்பட்ட சட்டங்களிலுள்ள நிபந்தனைகளுக்கு அமைவாகவே அதிகரிக்கப்படும்.

இந்தச் சட்டமூலம் விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேசமயம், அரசானது பிரேரிக்கப்பட்ட பொத்துஹர - ஹலகெதர மத்திய அதி வேகப்பாதை நிர்மாணிப்பதற்கான கடனுக்குத் தகுதி பெறுவதற்காக ஜப்பானிய வங்கியொன்றுக்கு 14 பில்லியன் ரூபா காப்புறுதி தவணைக் கட்டணத்தைச் செலுத்தக் கோரப்பட்டுள்ளது எனவும் மேற்படி பாதை நிர்மாணத்திற்கான கடன்தொகை இலங்கையின் கடனை மீளச் செலுத்துவதற்கான இயலுமை குறித்து மதிப்பீடு செய்யப்பட்ட பின்னர் தீர் மானிக்கப்படவுள்ளது என்றும் அரச தரப்பு அதிகாரிகள் கூறுகின்றனர். (க)

# கடந்த ஆண்டில் 3,078 பேர் பலி:

## 2,910 வாகன விபத்துக்களில்

கொழும்பு, ஜன. 23

கடந்த ஆண்டில் 2910 வாகன விபத்துக்கள் நிகழ்ந்துள்ளன. அவற்றில் 3078 பேர் உயிரிழந்துள்ளனர் என வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை தெரிவித்துள்ளது.

இந்த விபத்துக்களில் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்களே அதிகளவில் உயிரிழந்துள்ளனர் என்றும் அதன் எண்ணிக்கை 998 ஆக காணப்படுகிறது.

அதேவேளை, விபத்துக்களில் 935 பாதசாரிகள் உயிரிழந்துள்ளனர் என வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வீதி விபத்து



காரணமாக ஒருநாளைக்கு 10 பேர் வீதம் உயிரிழக்கின்றனர் என்றும் 20 பேர் அங்கவீனர்களாகின்றனர் எனவும் வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி 2017 ஆம் ஆண்டில் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்கள் மற்றும் பாதசாரிகளின் உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்க கவனயீனமற்ற செலுத்துகை, கூடுதல் வேகம், வீதி சமிக்ஞைகள் தொடர்பில் கவனமின்மை போன்றவையே காரணம் என வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(க)

# மகேந்திரனை சிங்கப்பூரில் கைது செய்ய நம் நாட்டுச் சட்டத்தால் முடியும்

**சட்டமா அதிபர் தெரிவிப்பு**

கொழும்பு, ஜன. 23

சிங்கப்பூரில் உள்ள முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனை எந்தவேளையிலும் கைது செய்வதற்கு இலங்கைக்கு முடியும் என சட்ட மா அதிபர் ஜயந்த ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

அர்ஜுன் மகேந்திரன் இலங்கைப் பிரஜை அல்லாது போனாலும், சிங்கப்பூர் பிரஜையாக இருக்கும் நிலையில் அவரைக் கைது செய்வதற்கு தற்போது இலங்கையில் உள்ள சட்ட ஏற்பாடுகள் போதுமானவையாக உள்ளன எனவும் இதன்படி, அவரைக் கைது செய்ய முடியும் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார். (க)



# மன்னார்– வவுனியா வீதியில் விபத்து!



இருவர் காயம்

வவுனியா, ஜன. 23

மன்னார் - வவுனியா பிரதான வீதியில் பட்டானிச்சூர் பகுதியில் ஓட்டோவுடன் மோட்டார் சைக்கிளொன்று மோதியதில் இருவர் காயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை 5 மணிக்கு இடம்பெற்ற இந்த விபத்தில் காயமடைந்த இருவரில் ஒருவர் வவுனியாவைச் சேர்ந்தவரென பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (க)

# யாழில் பல பிரதேசங்களிலும் பனிப்பொழிவு நிலவுமாம்!

கொழும்பு, ஜன. 23

இலங்கையின் கிழக்கு மாகாணம் மற்றும் ஊவா மாகாணம் ஆகியவற்றில் நிலவும் வறட்சியான கால நிலையில் சிறு மாற்றம் நிகழக்கூடும் என்று இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் வட மத்திய மாகாணத்தின் பொலன்னறுவை மாவட்டத்திலும் ஓரளவு மழை பெய்யலாம் என மேற்படி திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேலும், மத்திய மாகாணம் மற்றும் சப்பிரகமுவ மாகாணம் ஆகியவற்றில் சில இடங்களில் பிற்பகல் 2 மணியின் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும் எனவும் வடக்கு மாகாணத்தின் அனைத்துப் பகுதிகளிலும் காலை மற்றும் இரவு வேளைகளில் குளிரான கால நிலை நிலவும் எனவும் தெரிவித்துள்ளதோடு காலை வேளைகளில் நாட்டின் சில பகுதிகளில் பனிமூட்டம் காணப்படும் என்று திணைக்களம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, யாழ்ப்பாணத்தின் பல பிரதேசங்களிலும் பனிப்பொழிவு நிலவிவரும் நிலையில், இரவு மற்றும் அதி



காலை வேளைகளில் 22 பாகை செல்சியஸ் வெப்ப நிலை நிலவி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். மாவட்டத்தின் வழமையான சராசரி வெப்ப நிலை 35/27 பாகை செல்சியஸ் எனும் நிலையில் இருக்கின்றமை குறிப்பிடத்தக்க தாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் விடயத்தில் கண்மூடித்தனமாக செயற்படுவோரை ஓரங்கட்ட வேண்டும்



## முன்னாள் விவசாய அமைச்சர் துரைராஜசிங்கம்

மட்டக்களப்பு,ஜன.23

தமிழ் மக்களை மேலும் வேதனைக்கு உட்படுத்தும்வகையில்கண்மூடித்தனமாகச் செயற்படுவோரை ஓரங்கட்ட வேண்டும் என இலங்கைத்தமிழரசுக்கட்சியின் பொதுச்செயலாளரும் முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சருமான கி.துரைராஜசிங்கம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாநகர சபை தேர்தலில் போட்டியிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான சிவம் பாக்கியநாதனின்தேர்தல் அலுவலகத்திறப்பு விழாவும் பரப்புரைக் கூட்டமும் அண்மையில் நடைபெற்றனஅதில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விட்டுச் சென்றாலும் புதியவர்களை மக்கள் உருவாக்கிக் கொண்டே இருப்பார்கள். யார் சென்றாலும் அவர்கள் கைவிடப்பட்டவர்களாகவே கருதப்படுவார்கள்.

தமிழ்மக்களின்தொடர்ச்சியான ஆணையைப் பெற்றிருப்பது தமிழ் தேசியக் கூட்டமைப்பு. தற்போது நாடாளுமன்றத்தில்புதியஅரசமைப்பு உருவாக்கம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. நாங்கள் கூறிக் கொண்டிருக்கும் விடுதலை என்னும் சொல்லுக்கான அடைவு புதிய அரசமைப்புமூலம் கிடைக்கும்

இந்த அரசமைப்பு ஆக்கத்திற்காகத் தமிழர்களின் பிரதிநிதிகளுக்குக் தற்போதுதான் சமமான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்தநிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களைப் பலப்படுத்த வேண்டியது எமது கடமையாகும்.

ஆனால், நடைமுறையில் இல்லாத ஒரு சொர்க்கத்தைக் காண்பதற்காக எம்மைவிட்டு சென்றவர்கள், இப்போது இடைக்கால அறிக்கையின் மாயையை உடைத்தெறிதல் என்ற மகுடத்தோடு ஒரு செயற்பாட்டை ஆரம்பித்துள்ளார்கள். இதனால் ஏற்படப்போகும் விளைவுகள் என்ன என்பதை நாங்கள் பார்க்க வேண்டும்.

ஆனால், அவ்வாறு எதுவும் செய்யாமல் தற்போது செயற்படும் நிலைமை மிகவும் துன்ப கரமானது. இந்த நிலை தமிழ் மக்களை இன்னும் வேதனைக்குள்ளேயே தள்ளும். இவ்வாறு கண்ணை மூடிக் கொண்டு செயற்படுபவர்களை மக்கள் ஓரங்கட்டுவதைத் தவிர வேறு வழியில்லை என்று தெரிவித்துள்ளார்.

# அமைச்சர் ரிஷாத்தின் தேர்தல் கூட்டம் தேர்தல் அதிகாரிகளால் இடைநிறுத்தம்

மட்டக்களப்பு, காத்தான்குடி நகர சபைக்கு போட்டியிடும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் வேட்பாளர்களை ஆதரித்து நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அமைச்சர் ரிஷாத்தின் கூட்டம் தேர்தல் அதிகாரிகளினால் இடைநிறுத்தப்பட்டமையின் காரணத்தினால் அப் பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

கூட்டம் அனுமதிக்கப்பட்ட நேரத்தையும் தாண்டிச்சென்றது எனக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் அடிப்படையில் தேர்தல் அதிகாரிகளால் கூட்டம் இடைநிறுத்தப்பட்டுள்ளது. காத்தான்குடி நகரசபைத் தேர்தலில் போட்டியிடும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் வேட்பாளர்களுக்கான பரப்புரை கூட்டமும் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிட்டு வைக்கும் நிகழ்வும் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றன.

காத்தான்குடி நகரசபைக்கு போட்டியிடும் வேட்பாளர் ரி.எல்.ஜவ்பர்கான் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில், அமைச்சர் ரிஷாத் பதியுதீன் மற்றும் பிரதியமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றியிருந்தனர்.

இந்த நிகழ்வில் அனுமதிக்கப்பட்ட நேரத்திற்கு மேலதிகமாக கூட்டம் நடைபெற்ற நிலையில் அங்கு வந்த தேர்தல் திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட உதவி ஆணையாளர் சுசீலன் கூட்டத்தை இடைநிறுத்துமாறு பணித்ததைதொடர்ந்து அங்கு பதற்ற நிலைமை ஏற்பட்டது.

உதவி தேர்தல் ஆணையாளருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் அடிப்படையில் கூட்டம் இடைநிறுத்தப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# மர்மமான முறையில் உயிரிழந்த யானை



மட்டக்களப்பு, ஜன.23

மட்டக்களப்பு, போரதீவுப் பற்றுப் பிரதேசத்துக்குட் பட்டதிக்கோடை பகுதியில் உள்ள காட்டுப் பகுதியில் மர்மமான முறையில் உயிரிழந்த நிலையில் யானை ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

வன ஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகள் இதனை இரவு மீட்டுள்ளனர். உயிரிழந்த யானைசுமார்35வயதுமதிக் கத்தக்க ஆண் யானை எனவும், யானை எவ்வாறு உயிரிழந்தது என்பது தொடர்பான பரிசோதனைகளை மேற்கொள்ளவுள்ளோம் எனவும் பரிசோதனையின் பின்னரே இறப்புக்கான காரணம் தெரியவரும் எனவும், வன ஜீவ ராசிகள் பாதுகாப்புத் திணைக்கள சுற்றுவட்டப் பெறுப்பாளர் ஏ.ஏ. ஹலீம் தெரிவித்துள்ளார்.






# கிழக்கின் அபிவிருத்திப் பணிகளுக்கு ஹிஸ்புல்லாஹ்வே முழுப் பொறுப்பு!

## மைத்திரியின் இணைப்புச் செயலர் கூறுகிறார்



கிழக்கின் அபிவிருத்திப் பணிகளுக்குப் பொறுப்பான தலைமைத்துவத்தைஇராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ்குக்கே ஜனாதிபதி வழங்கவுள்ளார் என வட மத்திய மாகாண முன்னாள் முதலமைச்சரும், ஜனாதிபதியின் இணைப்புச்செயலாளருமான பேசல ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

காத்தான்குடியில் கடந்த சனிக்கிழமை இரவு நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் பின்னர் கிழக்கு மாகாணத்தில் பெரியளவில் அபிவிருத்திப் பணிகளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னெடுக்கவுள்ளார். கடந்த ஜனாதிபதித்தேர்தலில்ஒட்டுமொத்த முஸ்லிம்களும் மைத்திரிபால சிறிசேனவுக்கு வாக்களித்தமையாலேயே அவர் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

அதேபோன்று, முஸ்லிம் மக்களின் ஆதரவினாலேயேஅவர்ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராகவும் நியமிக்கப்பட்டார். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் மாத்திரமே சிங்களம், தமிழ், முஸ்லிம் மக்களிடையே நல்லிணக்கம், ஒற்றுமையை ஏற்படுத்த முடியும். நாட்டில் பிரிவினைவாதம் தலைதூக்கி தெற்கில் சிங்கள அடிப்படைவாதமும், வடக்கில் தமிழ் அடிப்படை வாதமும் அதிகரித்துள்ள நிலையில், அதனை நிவர்த்தி செய்து நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தக் கூடியவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மாத்திரமே.

2020 இன் பின்னரும் 2025 வரை ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேனவே தொடர்ந்தும் இருப்பார். அதுவரை காலம் இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் இந்தப் பிரதேசத்தின் அபிவிருத்திகளுக்குப் பொறுப்பானவராக இருப்பார் என அவர் மேலும் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் அதிபரை அவமதித்த விவகாரத்தால் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு நெருக்கடி!

கொழும்பு, ஜன. 23

பதுளை தமிழ்ப் பெண்கள் பாடசாலை அதிபரை முழந்தாளிட்டு மன்னிப்புக் கோர வைத்த ஊவா மாகாண முதலமைச்சருக்கு எதிராக விசாரணைகள் தொடங்கப்பட்டுள்ளன.

அதேவேளை, மாகாணக் கல்வி அமைச்சர் பதவியில் இருந்து அவர் நேற்றுமுன்தினம் விலகினார்.

தமது பரிந்துரைக் கடிதம் ஒன்றுடன் சென்ற மாணவியை பாடசாலையில் சேர்த்துக் கொள்ள மறுத்த பதுளை தமிழ்ப் பெண்கள் பாடசாலை அதிபர் பவானியை, ஊவா மாகாண முதலமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க, முழந்தாளிட்டு மன்னிப்புக் கோர வைத்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பான செய்திகள் வெளியானதும், அதனை மறுத்த ஊவா முதலமைச்சர், இந்தப் பொய் செய்தியை பரப்பிய ஜே.வி.பி மாகாண சபை உறுப்பினருக்கு எதிராக 50 கோடி ரூபா இழப்பீடு கோரி வழக்குத் தொடரப் போகின்றேன் எனக் கூறியிருந்தார்.

அதேவேளை, பாடசாலை அதிபரையும், மறுப்புத் தெரிவித்து அறிக்கை வெளியிட மாகாணக்கல்வி அதிகாரிகள் நிர்ப்பந்தித்திருந்தனர். இதையடுத்து அவரும் அழுத்தங்களுக்குப் பணிந்து முதலமைச்சர் தம்மை முழந்தாளிட்டு மன்னிப்புக் கோர வைக்கவில்லை என்று கூறியிருந்தார்.

எனினும், பாடசாலை அதிபர் தமக்கு ஏற்பட்ட அவமானத்தை சில நாள்களுக்கு முன்னர் நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் மற்றும் உயர் கல்வி அதிகாரிகளிடம் கண்ணீருடன் வெளிப்படுத்தினார்.

இந்த நிலையில், ஊவா மாகாண முதலமைச்சர் பதவி விலக வேண்டும்



என்று ஆசிரியர் தொழிற்சங்கம் வலியுறுத்தியிருந்ததுடன், தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவும் விசாரணைகளை ஆரம்பித்திருந்தது.

உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறவுள்ள சூழலில் ஊவா முதலமைச்சருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் தீவிரமடைந்த நிலையில், இந்தச் சம்பவம் குறித்து சிறிலங்கா சுதந்திரக் கட்சி உள்ளக விசாரணைகள் நடத்தும் என்றும் இந்தச் சம்பவத்தைக் கண்டிக்கின்றோம் எனவும் அமைச்சர் சுசில் பிரேம ஜெயந்த கூறியிருந்தார்.

இந்த நிலையில், நேற்று முன்தினம் ஊவா மாகாண முதலமைச்சர் தசநாயக்க, மாகாணக் கல்வி அமைச்சர் தான் பதவியில் இருந்து விலகுகின்றேன் என அறிவித்தார்.

தமக்கு எதிரான குற்றச்சாட்டுகள் குறித்த விசாரணைகள் முடியும் வரை கல்வி அமைச்சர் பதவியிலிருந்து விலகுகின்றேன் என அவர் கூறியுள்ளார்.

அதேவேளை, இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை நடத்தி நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நேற்று முன்தினம் பொலிஸ் மா அதிபர் பூஜித ஜெயசுந்தரவுக்குப் பணித்துள்ளார்.

## உள்ளூராட்சித் தேர்தலில் வாக்களிப்பது எப்படி?

கொழும்பு, ஜன. 23

இம்முறை நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் எவ்வாறு வாக்களிப்பது. இது தொடர்பாக தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய விளக்கமளித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வாக்காளர்களுக்கு விநி யோகிக்கப்படும் வாக்காளர் அட்டையில் போட்டியிடும் கட்சிகளின் பெயர்கள் மற்றும் சின்னங்கள் சுயேச்சை குழுக்கள் என்பனவற்றை அடையாளம் காண்பதற்கான சின்னங்கள் குறியீடுகள் மாத்திரமே அச்சிடப்பட்டுள்ளன.

வேட்பாளர்கள் அல்லது தொகுதிகளின் பெயர் அல்லது இலக்கங்கள் குறிப்பிடப் படவில்லை.



வாக்களிக்கும் போது நீங்கள் விரும்பும் கட்சியின் பெயர் சின்னம் அல்லது குழுக்கள் ஆகிய சொற்களை அறிந்து கொள்வதற்கும் குறியீடு செய்வதற்கு ஒதுக்கப்பட்டுள்ள பகுதிக்கு கீழ் பகுதியில் ஒரே புள்ளடி மாத்திரமே இட வேண்டும்.வாக்காளர் அட்டையில் வாக்குச் சீட்டில் வேறெந்த குறியீடும் இடக்கூடாது.

அவ்வாறு குறியீடு இடப்படுமாயின் வாக்காளர் அடையாளம் காண்பதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சியாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## மக்களின் வாழ்க்கைச் சுமையைக் குறைக்க நாடு முழுவதும் 100 நடமாடும் வாகனசேவை!

கொழும்பு, ஜன. 23

பொதுமக்களின் வாழ்க்கைச் சுமையைக் குறைக்கும் நோக்கில் அத்தியாவசியப் பொருள்களை நிவாரண விலையில் வழங்குவதற்காக நடமாடும் வாகனசேவை நாடுமுழுவதிலும் மேற்கொள்ளப்படவுள்ளது.

எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் 100 நடமாடும் வாகன சேவை நாடு முழுவதிலும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன என



கூட்டுறவு மொத்த வர்த்தக கூட்டுத்தாபனத்தின் தலைவர் மொஹமட் றிஸ்வான் ஹமீட் தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதிலும் உள்ள 700 வாராந்த சந்தைகளை உள்ளடக்கிய வகையில் முன்னெடுக்கப்படவுள்ள இந்த திட்டம் சிவில் படையினருடன் இணைந்து மேற்கொள்ளப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## தபால் மூல வாக்கு பெறுபேறுகள் தனியாக அறிவிக்கப்படமாட்டா!

இம்முறை நடைபெறும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் புதிய தேர்தல் நடைமுறைக் கமைவாக இடம்பெறவுள்ளது.

இதன் காரணமாக தபால் மூல மான வாக்களிப்புக்கள் குறித்த பெறுபேறுகள் தனியாக வெளியிடப்படமாட்டா என்று மேலதிக தேர்தல் ஆணையாளர் எம். எம். முஹம்மட் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இதற்கமைவாக வாக்களிப்பு மத்திய நிலையம் அல்லது அதனுடன் தொடர்புபட்ட பிரதேசத்தில் முதன்மையாகக் கொண்ட இடத்தை காண வாக்களிப்பு



மத்திய நிலையத்தில் தபால் மூல வாக்குகள் எண்ணப்படும்.

இதன்போது அந்தத் தொகுதிக்கு உட்பட்ட தேர்தல் பெறுபேறுக்கு அமைவாக தபால் மூல வாக்குகள் ஒன்றுசேர்க்கப் படும் . அடுத்த மாதம் 10 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தபால் மூலமான வாக்களிப்பு நேற்று ஆரம்பமானது.

இலங்கைபொலிஸ் அதிகாரிகள், தேர்தல் அலுவலக மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலக அதிகாரிகளுக்கான தபால்மூல வாக்களிப்பு நேற்று இடம்பெற்றது.

இம்முறை தபால் மூலம் வாக்களிப்பதற்காக தகுதி பெற்றோரின் எண்ணிக்கை சுமார் 5 லட்சத்து 60 ஆயிரம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## இரட்டை பிரஜா உரிமை வழங்கும் வேலைத்திட்டம் அடுத்த மாதம் ஆரம்பம்

கொழும்பு, ஜன. 23

இரட்டை பிரஜா உரிமை வழங்கும் வேலைத்திட்டம் அடுத்தமாதம் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது என குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் ஹெட்டியாரச்சி தெரிவித்துள்ளார்.



இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த வருடத்தில் 31 ஆயிரம் பேருக்கு இரட்டைப் பிரஜா உரிமை வழங்கப்பட்டுள்ளது.

இரட்டை பிரஜா உரிமைக்காக இது வரையில் 3 ஆயிரத்திற்கு மேற்பட்டோர் விண்ணப்பித்துள்ளனர்.

16 வயதிற்கு மேற்பட்ட மற்றும் 60 வயதிற்கு உட்பட்ட பிரஜைகளுக்கு கடவுச் சீட்டைப் பெற்றுக் கொள்வதற்கு கைவிரல் அடையாளம் தற்போது பெற்றுக் கொள்ளப்படுகிறது.

வெளிநாடுகளில் உள்ள பிரஜைகளுக்கு இலங்கை பிரஜா உரிமையைப் பெற்றுக் கொள்வதற்கு அல்லது தமது கடவுச்சீட்டைப் புதுப்பிப்பதற்கு இணையத் தளத்தின் ஊடாக வசதிகள் விரைவாக செய்து கொடுக்கப்படும் என்றும் குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் குறிப்பிட்டுள்ளார்.

## நவீன உலகிற்குப் பொருத்தமான புதிய வகையில் கடவுச்சீட்டுகள்!

நவீன உலகிற்குப் பொருத்தமான வகையில் இந்த வருடத்தில் கடவுச் சீட்டுக்கள் அறிமுகப்படுத்தப்படும் என்று குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் ஷமிந்த ஹெட்டியாரச்சி தெரிவித்துள்ளார்.

இதற்குத் தேவையான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நாளாந்தம் கடவுச் சீட்டுக்களைப் பெற்றுக் கொள்வதற்காக சுமார் 2 ஆயிரம் பேர் வருகை தருகின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.



இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்–

ஒருநாள் சேவைக்கு மேலதிகமாக பொதுவாக இரண்டு வாரங்களில் கடவுச் சீட்டை வழங்குவதற்கான நடவடிக்கைகளும் இடம்பெற்று வருகின்றன. பிறப்புச் சான்றிதழ் மற்றும் தேசிய அடையாள அட்டையுடன் வரும் நபர்களுக்கு வெளியார் துணையின்றி கடவுச் சீட்டை பெற்றுக் கொள்ள முடியும். இதற்காக தமது அதிகாரிகளின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹட்டன் பொலிஸ் நிலையத்தில் தபால் மூல வாக்களிப்பு இடம்பெற்றது

எதிர்வரும் பெப்ரவரி 10 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு நேற்று ஆரம்பமானது.

அதன்படி, ஹட்டன் பிரதேசத்தின் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு, நேற்று ஹட்டன் பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்றது.

பவ்ரல் அமைப்பு உட்பட சிவில் அமைப்புகள் மற்றும் ஹட்டன் பொலிஸ் நிலையத்தின் தலைமையக பொலிஸ் பரிசோதகர் மொஹமட் ஜெமில் கண்காணிப்பில் நடைபெற்ற இந்ததபால் மூல வாக்களிப்பில், ஹட்டன் பொலிஸ் நிலைய பொலிஸ் உத்தியோகத்தர்கள் பலர் வாக்களித்தனர்.

## தினசரி ராசி பலன்
(23.01.2018)

*2018 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் தைத் திங்கள் 10 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை ஷஷ்டித்திதி மாலை 4.40 மணி வரை பின்னர் ஸப்தமி.நட்சத்திரம்: உத்தரட்டாதி காலை 8.08 மணி வரை பின்னர் ரேவதி. அமிர்தயோகம் முழுவதும். இன்று ஷஷ்டி விரதம்*

**ராகுகாலம்** *-மாலை 3.16 மணி முதல் 4.43 மணி வரை*

**சுபநேரம்** *- பகல் 11.06 மணி முதல் 12.36 மணி வரை*

**திவசம் செய்ய வேண்டிய திதி**- *தை மாத வளர்பிறை ஷஷ்டி.*

**பிறந்த நட்சத்திர வழிபாடு:** *ரேவதி.*

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம்** யோசனையான நாள். வருமானம் குறையும் குடும்பத்தில் சலசலப்பு உண்டாகும். நிதானம் தேவை. உடல் அசதி, மனச் சோர்வு உண்டாகும். எதிரிகள் தொல்லை இருக்கும்.

**ரிஷபம்** மேன்மையான நாள். பொருளாதார தேவைகளைப் பூர்த்தி செய்யும். பிரிந்த உறவுகள் மீண்டும் இணையும் சந்தர்ப்பம் உண்டாகும். வியாபாரத் தொழில் மேன்மை அடையும்.

**மிதுனம்** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் சுமாராக இருக்கும். செலவினங்கள் அதிகரிக்கும். குடும்பத்தில் நிம்மதி குறையும். பயணங்களைத் தவிர்க்கவும். அலைச்சல்கள் கூடும்.

**கடகம்** யோகமான நாள். பணம் தாராளமாகப் புழங்கும். ஏற்றுமதி, இறக்குமதி லாபம் தரும். புதிய தொழில் வாய்ப்புக்கள் அமையும். வாகன வசதிகள் கூடும். தொழில் வளம் கூடும்.

**சிம்மம்** துன்பமான நாள். வருமானம் குறையும். குடும்பத்தில் உட்பூசல்கள் காணப்படும். உறவினர்கள் நண்பர்கள் பாராமுகம் காட்டுவார்கள். பாடுபட்டதன் பலன் குறையும்.

**கன்னி** சமபலன்கள் காணப்படுகின்றன. வரவும், செலவும் சரிசமமாக இருக்கும். சுபச் செலவுகளும் உண்டாகும். எடுக்கும் முயற்சிகள் தாமதமடையும். வியாபாரத்தில் சம லாபம் கிடைக்கும்.

**துலாம்** ஆக்கபூர்வமான நாள். பணப்புழக்கம் திருப்தியைத் தரும். தூரதேசத்துத் தகவல்களால் நன்மை உண்டாகும். குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும். புகழும், செல் வாக்கும் கூடும்.

**விருச்சிகம்** நன்மையான நாள். நிதி நிலைமை வளமாக இருக்கும். புதிய நட்பு ஏற்படும். சகோதர உதவிகள் கிட்டும். மகான்களின் ஆசிகள் கிட்டும். உறவு பலப்படும். தூரதேசப் பயணம் அனுகூலமாகும்.

**தனுசு** சஞ்சலமான நாள். பொருளாதாரம் நலிவுறும். உடல் அசதி, மனச் சோர்வு ஏற்படலாம். குடும்பத்தில் நிம்மதி குறையும். எதிரிகளின் தொல்லை இருக்கும்.

**மகரம்** விருத்தியான நாள். தனவரவு கூடும். குடும்ப ஒற்றுமை பலப்படும். உறவினர்களால் உதவி கிடைக்கும். வியாபாரத்தில் நல்ல அபிவிருத்தி காணப்படும். செய்யும் தொழில் விருத்தியடையும்.

**கும்பம்** யோகமான நாள். பொருளாதாரம் உயர்வடையும். குடும்ப மகிழ்ச்சி பெருகும். புதிய வாகனம் வாங்குவர், வீட்டு வேலைகளைச் செய்து புதுப்பித்துக் கொள்வது நடக்கும்.

**மீனம்** உயர்வான நாள். பொருளாதார நிலையில் உயர்வு உண்டாகும். விடா முயற்சியும், தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். தேகாரோக்கியம் சிறப்படையும். சகோதரர் வரவால் நன்மை உண்டாகும்.

**சந்திராட்டமநாள்: பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் சுபகருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.**

# இலங்கையிடமிருந்து காரைக்கால் மீனவர்களை விடுவியுங்கள் என சுஷ்மாவிடம் கோரிக்கை!

இலங்கை அரசால் கைது செய்து சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் காரைக்கால் மீனவர்களை விடுவிக்க வேண்டும் என வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜிடம் கண்ணீர் விட்டு கதறி அழுதபடியே மீனவர்களின் குடும்பத்தினர் மனுகொடுத்தனர்.

காரைக்காலில் 'பாஸ்போர்ட்' (கடவுச்சீட்டு) சேவை மையம் திறப்பு விழா நிகழ்விற்கு வந்த மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜ், நிகழ்ச்சி முடிந்து மேடையை விட்டு இறங்க முயற்சித்தார்.

அப்போது திடீரென காரைக்கால் மாவட்ட மீனவப் பெண்கள் சிலர் அவரை சூழ்ந்து கொண்டனர்.

தீபாவளிக்கு முன்பு கடலுக்கு மீன்பிடிக்க சென்ற காரைக்காலைச் சேர்ந்த 10 மீனவர்களை இலங்கை கடற்படை கைதுசெய்து சிறையில் அடைத்தது அவர்களை மீட்கவேண்டும்.

இதுபோன்ற கைது சம்பவம் இனி நடக்காமல் இருக்க வழிவகை செய்ய வேண்டும். மேலும், கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் காரைக்கால் மேடு பகுதியைச் சேர்ந்த 6 இளம் வயது மீனவர்களை, போதைப் பொருள் கடத்தினார் என்ற பொய்யான குற்றச்சாட்டைக் கூறி இலங்கை கடற்படையினர் கைது செய்து சிறை வைத்துள்ளனர்.

அவர்களையும் விடுவிக்க வேண்டும் எனக் கோரிக்கையுடன் கூடிய மனுவைக் கொடுத்து கதறி அழுதனர்.

நிகழ்ச்சியில் மீனவர்களைச் சந்தித்தது திட்டமிடாத வகையில் திடீரென ஏற்பட்டதால், அவர்களது அழுகுரலுக்கு நடுவில் பதில் எதுவும் கூறமுடியாமல் சற்று நேரம் அமைதிகாத்து நின்ற மத்திய அமைச்சர் பின்னர் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது எனக் கூறிவிட்டுச் சென்றுள்ளார்.

# தோட்ட நிர்வாகத்திற்கு எதிராக நோர்வூட் பகுதியில் போராட்டம்!



நோர்வூட், ஜன. 23

நோர்வூட் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வெஞ்சர் தோட்டத்தில்,தோட்ட நிர்வாகத்தினருக்கு எதிராக நேற்று அந்தப் பகுதி மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தோட்ட காரியாலயத்திற்கு முன்பாக நேற்றுக் காலை ஒன்றுதிரண்ட மக்கள் தமது எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இந்தத் தோட்டத்தில் தொழிலுக்காகப் பயன்படுத்தப்படும் டிராக்டர் மற்றும் லொறிகள் மிகவும் பழமையடைந்தது எனவும் போக்குவரத்து பாவனைகளுக்கு உதவாதவை எனவும் குறிப்பிட்ட மக்கள், இதன் காரணமாக அப்பகுதியில் விபத்துக்கள் ஏற்படுகின்றன எனத் தெரிவித்து எதிர்ப்பு நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இவ்வாறு சேவையில் ஈடுபடுத்தப்படும் வாகனங்களுக்கு பயிற்சி குறைவான சாரதிகளைப் பணியில் நிர்வாகத்தினர் அமர்த்துகின்றனர் எனவும் இதன் காரணமாக அண்மையில் அப்பகுதியில் டிராக்டர் விபத்து ஒன்றும் இடம்பெற்றது எனவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள்

சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த வாகனங்களில் தமது தொழிலை மேற்கொள்ளும் மக்கள் தினமும் உயிர் அச்சுறுத்தலுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளதாகவும், அதற்கு மத்தியிலேயே தொழிலை மேற்கொள்ள வேண்டியுள்ளது எனவும் அவர்கள் விசனம் தெரிவித்தனர்.

மேலும், இவ்வாறான அசம்பாவிதங்களைத் தடுக்க, அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் இதன்போது கோரிக்கை விடுத்தனர்.

இதனைத் தொடர்ந்து போராட்ட இடத்திற்குச் சென்ற தொழிற்சங்கப் பிரதிநிதிகள் மற்றும் தோட்ட நிர்வாகத்தினர் உள்ளிட்டோர் மக்களுடன் பேச்சில் ஈடுபட்டமையின் பின்னர் ஆர்ப்பாட்டக்காரர்கள் தற்காலிகமாக தமது போராட்டத்தைக் கைவிட்டுச் சென்றனர்.

# நாளை மின் தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன் காலை 8 மணியிலிருந்து மாலை 5மணி வரை

**யாழ்ப்பாணப் பிரதேசத்தில்**-

அல்லைப்பிட்டி, மண்கும்பான், மண்டைதீவு, சோளாவத்தை, வங்களாவடி, மண்கும்பான் தேசிய நீர்வழங்கல் வடிகால் சபை, மண்கும்பான் கடற்படை முகாம், மண்டைதீவு கடற்படை முகாம் ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** -

மதவுவைத்தகுளம், தவசிக்குளம், குட்செட்றோட், தோணிக்கல், பண்டாரிக்குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளனர். (இ)

# வழிகாட்டல் அறிமுக நிகழ்வு

அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தால் நடத்தப்படவுள்ள 2018 ஆம் ஆண்டுக்கான சைவப்புலவர் மற்றும் இளம் சைவப் புலவர் பரீட்சைக்குத் தோற்றவுள்ள பரீட்சார்த்திகளுக்கான வழிகாட்டல் அறிமுக நிகழ்வு எதிர்வரும் சனிக்கிழமை வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இவ் வழிகாட்டல் அறிமுக நிகழ்வுக்கு, பரீட்சைக்கு விண்ணப்பித்த அனைத்துப் பரீட்சார்த்திகளையும் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல் வகுப்புகள் பிரதி சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை மேற்படி பாடசாலையில் இடம்பெறவுள்ளது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர்
Kalaikkathir



# சிங்களக் குடியேற்றங்கள் மூலம் வடக்கு, கிழக்கில் தொடர்ந்து நிகழும் இன அழிப்பு!

தமிழர் பிரதேசங்களில் காலாகாலமாக மாறிமாறி வரும் அரகளால் தொடர்ந்து சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பாரம்பரிய தமிழர் பிரதேசங்கள் சத்தம் சந்தடியின்றி சிங்கள அரசுகளால் கபளீகரம் செய்யப்படுகின்றன; செய்யப்பட்டு வருகின்றன. இவ்வாறான குடியேற்றங்களால் வடக்கு, கிழக்கில் தொடர்ந்து பெரும் இன அழிப்பு நடந்து வருகின்றது என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

– இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வீ. விக்னேஸ்வரன்.

வாராந்தம் தாம் வழங்கும் வாரத்துக்கொரு கேள்வி' பகுதிக்கு இவ்வாரம் கொழும்பில் இருந்து கிடைத்திருக்கும் கேள்விக்கு முதலமைச்சர் பதிலளித்துள்ளார்.

அவரது பதிலின் சாராம்சம் நேற்றைய ‘காலைக்கதிரில்’ முதற் பக்கச் செய்தியாக வெளிவந்திருந்தது.

அந்தக்கேள்வியும் முதலமைச்சரின் விரிவான – முழுமையான பதிலும் வருமாறு–

**கேள்வி**- தமிழ்க் கட்சிகள், ஏன் நீங்களும் கூட, வட மாகாணத்தில் சிங்கள மக்கள் குடிகொள்ளப் பார்க்கின்றார்கள், எமது பாரம்பரியம் அழியப் போகின்றது என்றெல்லாம் குரல் எழுப்புகின்றீர்கள். தமிழராகிய நாம் பெருவாரியாக கொழும்பில் குடியிருக்கின்றோமே அது சிங்களப் பாரம்பரியத்தை அழிப்பதாக அர்த்தம் கொள்ள முடியாதா? நீங்கள் உங்கள் கூக்குரல்களால் கொழும்பில் வசிக்கும் எம்மையெல்லாம் அவதிக்குள்ளாக்கின்றீர்கள் என்பதை ஏன் புரிந்து கொள்ள மாட்டீர்கள்?


**பதில்** - நியாயமான கேள்வி! ஆனால் புரிந்துணர்வற்றது. ஒரு காலத்தில் அதுவும் என் சீவிய காலத்தில் தமிழ் மக்கள் நாடு முழுவதும் பரந்து வாழ்ந்தார்கள். காணிகள் வைத்திருந்தார்கள், கடைகள் வைத்திருந்தார்கள், கோயில்கள் கட்டி வழிபட்டு வாழ்ந்தார்கள். இது வெள்ளையர் ஆண்ட காலத்திலும் சிங்களம் மட்டும் சட்டம் 1956 இலும் ஆண்டில் வரும் வரையிலும் இருந்த நிலை.

1958ம் ஆண்டு இனக்கலவரம் எம்முட் பலரை தெற்கிலிருந்து விரட்டியது. அதன்பின் 1961,1977,1983 என்று பல கலவரங்கள் தெற்கில் இருந்த தமிழ்மக்களை இருந்த இடந்தெரியாமல் விரட்டின. காணி பூமிகளை, ஆதனங்களை எல்லாம் பறிகொடுத்துவிட்டு எம்மவர் தெற்கைவிட்டு நீங்கினார்கள். தமிழ் மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த பிரதேசங்கள் வடக்குக் கிழக்கே என்பதை அரசாங்கமே ஏற்றுக்கொண்டு கப்பல்கள் மூலம் தெற்கில் வாழ்ந்த தமிழ் மக்களை வடக்குக் கிழக்கு நோக்கி அனுப்பி வைத்தது.

கொழும்பில் வாழ்ந்து வந்த என் தந்தையாரின் தம்பியார் எரிந்துகொண்டிருந்த தமது வீட்டை விட்டுவிட்டு உடுத்த உடுப்புடன் குடும்பத்துடன் வெளியேறி மூன்று நான்கு நாள்களின் பின் கப்பலில் வந்து மானிப்பாயில் உறவினர்களின் வீட்டில் தஞ்சம் புகுந்தார். இப்படி எத்தனையோ ஆயிரம் பேர்! பலர் வெளி



நாடுகள் சென்றார்கள். எனவே, தென்னாட்டில் வாழ்ந்த தமிழர்கள் தொடர்ந்து அடித்து விரட்டப்பட்டனர். அதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். அடுத்தது –



**கொழும்பு நகரம்**
**சிங்கள நகர் அல்ல**

கொழும்பு ஒரு சிங்கள நகர் அல்ல. அது பல் இன, பல் சமய, பன்மொழி பேசும் மக்கள் வாழும் நகரம். நாட்டின் தலைநகரம். பாதுகாப்புக் கருதி முன்னரும், யுத்தத்தின் போதும், அதன் பின்னருங் கூட வட கிழக்குத் தமிழ் மக்கள் கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் காணிகள் வாங்கி வீடு கட்டி வந்திருப்பது தமது தேவைகளின் நிமித்தம் பலவித சொந்தக் காரணங்களின் நிமித்தமே. அவர்கள் தமது சொந்தப் பணத்தில், இல்லையென்றால் வங்கிகளிலோ வேறெங்கிருந்தோ கடன் எடுத்தே வீடுகள் கட்டினார்கள்.

ஆகவே, கொழும்பு நகரம் டச்சுக்காரர் காலத்தில் இருந்து, ஆங்கிலேயர் காலத்தில் இருந்து சிங்கள நகர் அல்ல. பல்லின மக்களின் வாழ்விடம். அங்கு தமிழ் மக்கள் பாதுகாப்பு, கல்வி, சீதோஷ்ணநிலை , வேலைத்தள அண்மை போன்ற பல்வித தனிப்பட்ட காரணங்களுக்காகத் தமது சொந்தப் பணத்தில் வீடுகட்டி குடியிருந்து வந்தார்கள். ஆனால், அவ்வாறு வாழ்ந்து வந்த தமிழர்கள் அரசாங்க அனுசரணையுடன் 1958 இலும் 1983லும் அடித்துத் துரத்தப்பட்டார்கள் என்பதை நாம் மறக்கக் கூடாது.

ஆனால், வடகிழக்கு மாகாண சிங்களக் குடியேற்றங்கள் அப்படிப் பட்டனவா?

1971 - 1972 அளவில் நான் திருகோணமலை சென்ஜோசப்ஸ் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றிய அருட் தந்தை சம்பா (இத்தாலியர்) அவர்களைப் பார்க்கப் போயிருந்தேன். நான் சென்ற நேரத்தில் சிறிமாவோ அம்மையார் காலத்தில் புதிதாகத் திறக்கப்பட்ட திருகோணமலையை அடுத்த சிங்களக் குடியேற்றங்களில் ஒன்றைப் பார்வையிட அவர் ஆயத்தமாகிக் கொண்டிருந்தார்.

**ஒரு சிங்களவர்**
**விவரிப்பு**

அங்குள்ள கத்தோலிக்க மக்கள் சிலர் உதவி கேட்டு அவருக்குத் தெரியப்படுத்தியதால் அவர்களுக்கு உதவிபுரிய ஆயத்தமாகிக் கொண்டிருந்தார். நான் போகவும் ஏன் நீங்களும் வாருங்களேன் என்றார். சென் றேன். அங்கு பல சிங்களக் குடியேற்ற மக்கள் மிகுந்த கஷ்டமான சுழ்நிலை யில் வாழ்ந்துவருகின்றமையைக் கண்டேன். போஸ்ட் மாஸ்டர் என்று தன்னை அடையாளப் படுத்திய சிங்கள அன்பர் ஒருவர் என்னுடன் சிங்களத்தில் அளவளாவினார். என்பெயரைக் கேட்கவில்லை. என் பேச்சுச் சிங்களத்தில் தமிழர் சிங்களம் பேசும் சாயல் தெரியவில்லை போலும்!

என்னை சிங்களவர் என்றே எண்ணி கிட்டத்தட்டப் பின்வருமாறு கூறினார். சேர்! நீங்கள் கொழும்பில் இருந்து வருகின்றீர்கள். எங்களை மாத்தறையில் இருந்து எமது அரசியல் வாதிகள் பலாத்காரமாக இங்கு குடியிருக்க அழைத்து வந்துள்ளார்கள். எமக்கு பலதையும் தருவோம் என ஆசைகாட்டியே இங்கு கொண்டு வந்தார்கள்.



பறி போகின்றன
**எம்மவர்கள்**
**நிலங்கள்**

ஆனால் அவர்கள் அதைச் செய்யவில்லை. கிணறு வெட்டவில்லை, வீடுகள் கட்டித்தரவில்லை, உணவுப்பொருள்கள் அனுப்பவில்லை. நுளம்பு மருந்து அடிக்கவில்லை. சும்மா இந்த வறண்ட காட்டுக்குள் கொண்டுவந்து விட்டு விட்டுப் போய் விட்டார்கள். வெய்யிலைப் பாருங்கள். மரஞ்செடி கொடி எல்லாம் கருகி இருப்பதைப் பாருங்கள். தண்ணீர் கொண்டுவர பலமைல்கள் செல்ல வேண்டும். தமிழர்கள் இடங்களை நாங்கள் ஆக்கிரமிக்க வேண்டும் என்று கூறித்தான் கொண்டு வந்தார்கள்.

நாமும் சிங்கள இனத்துக்கு சேவை செய்யப்போகின்றோம் என்று இங்கு வந்தோம். எமக்குக் கொடுத்த வாக்குறுதிப்படி எதனையுமே வழங்கவில்லை. என்னை போஸ்ட்மாஸ்டர் வேலை செய்யச்சொல்லியுள்ளார்கள். ஆனால், அதற்கான வசதியைச் செய்து தரவில்லை. நீங்கள் கொழும்புதானே? இதையெல்லாம் போய் அவர்களுக்குச் சொல்கின்றீர்களா? என்று கேட்டார். தொடர்ந்து பேசியவை இத் தருணத்தில் தேவையில்லாதபடியால் கூறாது விடுகின்றேன்.

**அரசியல்வாதிகளின்**
**பலாத்காரத்தால் வந்தனர்**

ஆனால், நான் தெரியப்படுத்தும் விடயம் என்னவென்றால் சிங்கள மக்கள் தாங்களாக தன்னிச்சையாக வடகிழக்குக்கு வரவில்லை. கல்வி தேடி வரவில்லை, தமக்கான காணிதேடிக் கூட வரவில்லை, சீதோஷ்ணம் நாடி வரவில்லை. அரசியல் வாதிகளின் பலாத்காரத்தின் நிமித்தம் வந்தார்கள் அல்லது ஆசைகாட்டியதால் வந்தார்கள். அரசாங்க அனுசரணைகள் கிடைக்கும் என்ற ஆவலினால் உந்தப்பட்டு வந்தார்கள். அவர்கள் அப்படியிருந்தும் கஷ்டப்பட்டு தொடர்ந்திருந்ததால் இன்று ஜெயந்திபுர, அசோகபுர, சிரிமாபுர என்றெல்லாம் புரங்கள் வளர்ந்து விட்டன. இவ்வாறுதான் சிங்களக் குடியேற்றங்கள் ஆரம்பித்தன.

சில காலத்தின் பின்னர் அரசாங்க அனுசரணைகள் அவர்களுக்குக் கிடைத்தன என அறியவந்தேன். அருட் தந்தை சம்பா போன்றவர்களின் தொடர்பாடலினால் அவை பெறப்பட்டன என்று அறிந்தேன். அவர் மனிதாபிமான அடிப்படையில் அவற்றைப் பெற்றுக் கொடுத்தார்.

**வித்தியாசத்தை**
**உணர முடிகின்றதா?**

ஆகவே, உங்களிடம் நான் கேட்பது தமிழர்கள் தெற்கில் வந்து வசிப்பதற்கும் சிங்களவர்கள் வடக்கில் வந்து வசிப்பதற்கும் இடையில் ஒரு வித்தியாசத்தை உங்களால் உணர முடிகின்றதா என்பதையே? தமிழர்கள் தமது சொந்தப் பணத்தில் நாட்டின் தலை நகரத்தில் வீடு வாங்கி அல்லது வீடு கட்டி வாழ்ந்து வருகின்றார்கள். அவர்களின் இடமாற்றங்களுக்குப் பல பிரத்தியேகக் காரணங்கள் இருந்தன, இருக்கின்றன.

ஆனால், சிங்களவர்கள் ஆசைகாட்டியோ அல்லது பலவந்தத்தின் பேரிலோ அரசாங்கத்தால் அல்லது சிங்கள அரசியல்வாதிகளால் கொண்டுவரப்பட்டு தமிழ் மக்கள் காலாதிகாலமாக வாழ்ந்த இடங்களில் திட்டமிட்டு குடியேற்றப்பட்டு அரச அனுசரணையுடன் படையினர் பாதுகாப்புடன் வாழ்ந்து வருகின்றார்கள். ஒன்று தனிப்பட்டவர் குடியிருப்பு மற்றையது திட்டமிட்ட அரச குடியேற்றம்.

முன்னையோர் அரச அனுசரணை எதுவுமின்றி சொந்தப் பணத்தில் கொழும்பில் வாழ வந்தவர்கள். மற்றையோர் திட் டமிட்டு தமிழர் தாயகத்தைத் தம்வசமாக்க பலவந்தமாகக் கொண்டுவரப்பட்டு குடியேற்றப்பட்டவர்கள்.

**விரட்டப்பட்டு விட்டனர்**
**10 லட்சத்துக்கு மேற்பட்டோர்**

ஆகவே பின்னையோரின் குடியேற்றம் எமது பாரம்பரியத்தை அழிக்க வென்று திட்டமிட்டு இயற்றப்படுகின்ற செயற்பாடு. எம்மை நாட்டின் பல பாகங்களிலும் இருந்து விரட்டி அடித்து விட்டு காலாதிகாலமாக நாம் வாழ்ந்து வரும் இடங்களையும் கையகப்படுத்த அரசாங்கத்தால் நிகழ்த்தப்பட்டுவரும் நடவடிக்கை. (19 ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


காலைக்கதிர் Kalaikkathir






தொகுப்பு: பொன்.வேணுகிருஷ்ணா

அமெரிக்க தலையீட்டை சட்ட விரோதமான ஆக்கிரமிப்பாக சிரிய அரசாங்கம் கண்டனம் செய்கின்ற நிலையில், சிரியாவில் எஞ்சியுள்ள ரஷ்ய படைகளைத் தவிர கூடுதலாக, அந்நாட்டில் முழுமையாக 2,000 துருப்புக்களை நிலைநிறுத்துவதை சமீபத்தில் அமெரிக்கா ஒப்புக்கொண்



டுள்ளது. அதேவேளையில் அவற்றை திரும்பப் பெறுவதற்கான நோக்கம் எதுவுமில்லை என்றும் குறிப்பிட்டுக் காட்டுகிறது. துருக்கி அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட ஆவணங்கள், சிரிய பிராந்தியத்திற்குள் குறைந்த பட்சம் ஒரு டசின் தளங்களை பென்டகன் அமைத்துள்ளதை சுட்டிக்காட்டுகின்றது.

துருப்புக்களைத் திரும்பப் பெறும் அடிப்படையிலான மொஸ்கோவின் வழிகாட்டுதலை அது பின்பற்றாது என்பதை தெளிவுபடுத்தும் போது, வெளிப்படையான அவநம்பிக்கையுடன் புட்டினின் அறிவிப்புக்கு பென்டகன் விடையிறுத்தது.

அவர்களது படைகளை அகற்றுவது என்பது பெரும்பாலும் உண்மையான துருப்பு குறைப்புக்களுடன் தொடர்புடையவை அல்ல என்பது பற்றிய ரஷ்ய கருத்துக்களையும், மேலும் அவை சிரியாவில் அமெரிக்காவின் முன்னுரிமைகளை பாதிக்காது, என்பதையும் பென்டகன் செய்தித் தொடர்பாளர் மஜ். அட்ரியன் ரான்கினே-கால்லோவே கூறினார்.

அமெரிக்க துருப்புக்கள், ISIS ஐ இராணுவ ரீதியாக முற்றிலும் தோல்வியுறச் செய்யும் நோக்கத்தில் போராடும் உள்ளூர் படைகளுக்கு ஆதரவளித்து, விடுவிக்கப்பட்ட பிராந்தியத்தை ஸ்திரமாக்கும் வகையிலும், இடம்பெயர்ந்து சென்ற சிரியர்களையும் அகதிகளையும் திரும்பிவர அனுமதிக்கும் வகையில் சிரியாவில் தொடர்ந்து செயலாற்றும் என்று செய்தித் தொடர்பாளர் கூறினார்.

**ரஷ்ய படைகளைத் திரும்பப் பெறுவதற்கு இரண்டாவது முறையாக புடின் அறிவித்துள்ளதை இது குறிப்பிடுகிறது. 2016 மார்ச்சில், சிரியாவில் மாஸ்கோவின் பணி ஒட்டு**



**மொத்தமாக நிறைவேற்றப்பட்டது, என்பது அந்நாட்டில் உள்ள ரஷ்ய இராணுவ படையின் முக்கிய பகுதியை வெளியேற்றும் சாத்தியத்தை உருவாக்கும் என்று ரஷ்ய ஜனாதிபதி அறிவித்தார். இருப்பினும், குறிப்பாக, கிழக்கு அலெப்போவில் இஸ்லாமிய கிளர்ச்சி படைகளைத் தோற்கடிக்கும் போராட்டத்தில் ஈடுபடுவதை முன்னிட்டு, அடுத்தடுத்த மாதங்களில் ரஷ்யாவின் தலையீடு தீவிரமடைந்தது.**



அமெரிக்க மற்றும் மேற்கத்திய பெருநிறுவன செய்தி ஊடகங்கள், ரஷ்யாவின் குண்டுவீச்சு நடவடிக்கைகளால் ஏற்பட்ட பொதுமக்கள் இறப்புக்களுக்காக அதனை கண்டனம் செய்து ஒரு பரப்புரை பிரசாரத்தை மேற்கொண் டது. அதே வேளையில், அல்-கொய்தாவின் சிரிய தொடர்புடைய கூட்டணியில் இயங்கும் சிஐஏ ஆதரவிலான கிளர்ச்சியாளர்களின் பெரும்பகுதியை உள்ளடக்கி, அரசாங்க எதிர்ப்புக்கு எதிரானதாக விவரிக்கப்பட்ட தாக்குதல் இலக்குகளைக் கொண்டிருப்பது குறித்தும் மொஸ்கோவை வொஷிங்டன் கண்டனம் செய்தது.




சிரிய-ஈராக்கிய எல்லைகளின் இரு பக்கங்களிலும் அமெரிக்கா அதன் சொந்த வான் போரை அதிகரித்துவரும் நிலைமை, மிக அதிக எண்ணிக்கையிலான இறப்புக்களுக்கு இட்டுச்செல்வது, பொதுமக்களின் இறப்புக்கள் குறித்த ஊடகங்களின் கவலையை விரைவாக சிதறடித்தது.

மொஸ்கோவும் வொஷிங்டனும் சிரியாவில் அவர்களது தலையீடுகள் குறிப்பாக ISIS போன்ற பயங்கரவாதத்தை எதிர்க்கும் நோக்கம் கொண்டது என்று கூறுகின்ற போதிலும், யதார்த்தம் என்னவென்றால் அவர்கள் வேறுபட்ட மற்றும் முற்றிலும் எதிர்மாறான நோக்கங்களைக் கொண்டுள்ளனர். அமெரிக்க ஏகாதிபத்தியத்தை பொறுத்தவரை, 2011 முதல் தற்சமயம் வரையிலான அதன் இலக்கு, டமாஸ்கஸில் ஓர் அமெரிக்க கைப்பாவை அரசாங்கத்தைத் திணிக்கும் வகையில் ஆட்சி மாற்றத்திற்கு வழி வகுத்ததோடு, மூலோபாய ரீதியாக சிரியாவின் இரு முக்கிய நட்பு நாடுகளான ஈரான் மற்றும் ரஷ்யாவின் பிராந்திய செல்வாக்கைப் பலவீனப் படுத்தி வருகிறது.



**சிரியாவில் அல் கொய்தாவுடன் இணைந்த மற்றும் ISIS போன்ற இஸ்லாமிய போராளிகளுடன் தொடர்புடைய அல்-நுஸ்ரா முன்னணி அமைப்பு ஆதிக்கம் செலுத்திய கிளர்ச்சியாளர்களின் ஊக்குவிப்பு, நிதி மற்றும் ஆயுத உதவி மூலமாக இந்த இலக்கை அடைவதற்கான முயற்சி ஒரு தோல்வியில் முடிவடைந்தது.**



அதனைத் தொடர்ந்து, ISIS இற்கு எதிரான போரில், சிரிய குர்திஷ் போராளிகளான YPG இன் கிட்டத்தட்ட ஒட்டு மொத்தமான ஒரு பிரதிநிதி படையை உள்ளடக்கிய, சிரிய ஜனநாயகப் படைகளுக்கு (Syrian Democratic Forces-SDF) ஆதரவளிக்கும் சாக்குப் போக்கில் அந்த நாட்டில் வொஷிங்டன் தனது நேரடி இராணுவத் தலையீட்டை நிலையாக அதிகரித்து வருகிறது.

இருப்பினும், BBC மற்றும் SDF இன் முன்னாள் தலைமை செய்தித் தொடர்பாளர் மூலமாக சமீபத்தில் வெளியிடப்பட்ட அறிவிப்பைப் போன்று, சிரிய அரசாங்க துருப்புக்களின் முன்னேற்றத்திற்கு எதிராக அவர்களை திசை திருப்ப முற்றுகையிடப்பட்ட நகரங்களில் இருந்து ISIS படைகளை வெளியேற்ற பென்டகனும் அதன் பிரதிநிதிகளும் மீண்டும் மீண்டும் ஏற்பாடு செய்துள்ளனர்.

மொஸ்கோவின் தலையீட்டின் நோக்கம் மத்திய கிழக்கில் அதன் முக்கிய அரேபிய நட்பு நாட்டை தாங்கிப் பிடிப்பதாகும். அசாத்தின் ஆட்சியை தூக்கியெறியும் எதிர்பார்ப்பும் மற்றும் அமெரிக்க கைப்பாவை அரசாங்கத் திணிப்பும் மேற்கு ஐரோப்பாவை நோக்கிய ஓர் எரிகுழாய் திட்டத்தை செயற்படுத்த சிரிய நிலப்பகுதியை கத்தார் அணுகும் வகையிலான ஓர் உடன்பாட்டிற்கு வழிவகுக்கும் என்பதும் முக்கிய கவலையாக இருந்தது.

ரஷ்யாவின் மிகப்பெரிய நிறுவனமான காஸ்பரோம் மற்றும் புட்டின் பிரதிநிதித்துவப்படுத்தும் ஆளும் முதலாளித்துவ தன்னலக்குழுக்களின் இலாப நலன்களை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் அத்தகைய உடன்பாட்டிற்கான கத்தார் முடியாட்சியின் கோரிக்கையை அசாத் நிராகரித்து விட்டார். (கேள்வி தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் நாடறிந்த இலக்கியச் செம்மல் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ். கம்பன் என்றால் ஜெயராஜ் என்று எண்ணுமளவுக்கு இலக்கியக் கம்பனாய் உருவெடுத்தவர் அவர். அவருடைய இலக்கிய அனுபவத் தொகுப்பு இங்கு தினசரி தொடராகப் பிரசுரமாகின்றது. 'உன்னைச் சரணடைந்தேன்' என்ற அவரது தொகுப்பில் 'யாழில் கம்பன்' பற்றிய தொடர் பதிவு இது.



# உன்னைச் சரணடைந்தேன்

**கம்பவாரிதி ஜெயராஜின் இலக்கிய அனுபவப் பகிர்வு 75**

**ஐந்தாவது காரைநகர்க் கம்பன் விழா 21.01.1994**



நான்காவது இசை ஆராதனை 31.01.1994

**நான்காவது இசை ஆராதனை (31.01.1994)**

இந்நிகழ்வு 1994 ஜனவரி 31 ஆம் திகதி நடைபெற்றது. வழமை போல காலை, மாலை நிகழ்ச்சிகளாக இவ்விழா நிகழ்வுகள் நடைபெற்றன. இவ்விழாவுக்கு அப்போதைய பல்கலைக்கழகத் துணைவேந்தர், பொன்.பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் தலைமையேற்றார். எங்கள் கழக உறுப்பினரான ஸ்ரீ இரத்தினகுமார் அவர்களின் தந்தையும் பிரபல வயலின் வித்துவானுமான வி.கே.குமாரசாமி அவர்களுக்கு, இவ்விழாவில் 'இசைப்பேரறிஞர்' விருது வழங்கப்பட்டது. வழமை போல, காலை நிகழ்ச்சிகளில் நாதஸ்வர வித்துவான்களும், இசைக்கலைஞர்களும் கலந்து இசையாராதனை நிகழ்த்தினர். காலை, மாலை நிகழ்வுகளில் அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி, அறிஞர் கே.கே.சோமசுந்தரம், பேராசிரியர் நந்தி ஆகியோர் கலந்து உரையாற்றினர். மாலை நிகழ்வுகளில் திரு. வி.கே.குமாரசாமி அவர்களின் வயலின் கச்சேரியும் நாதஸ்வர வித்துவானான எம்.பி.நாகேந்திரனின் பாட்டுக் கச்சேரியும் மூன்று தலைமுறை வித்துவான்களான, எஸ்.கணபதிப்பிள்ளை, எல்.திலகநாயகம்போல், வர்ணா.ராமேஸ்வரன் ஆகிய, மூவரும் இணைந்து வழங்கிய இசைக்கச்சேரியும் நடைபெற்றன. வி.கே.குமாரசாமி அவர்களுடையபிள்ளைகள்அனைவரும் சேர்ந்து, இவ் விழாவில் தியாகராஜசுவாமிகளின் பஞ்சரத்தினக் கீர்த்தனைகளை ஒரு நூலாய் வெளியிட்டு அனைவருக்கும் இனாமாய் வழங்கினர். இவ்விழா நிகழ்ச்சிகளில் என்.கே. பத்மநாதனும், பொன்.சுந்தரலிங்கமும் கலந்து கொள்ளவில்லை.

* * *

**வி.கே.குமாரசாமி, புவனசுந்தரி தம்பதியர்**

ரத்தினகுமாரின் பெற்றோர்களான இவர்களுக்கும், கழகத்தின் வளர்ச்சியில் பெரும் பங்குண்டு. ரத்தினகுமாரின் தயாரான புவனசுந்தரி ஆளுமைமிக்க ஒரு பெண்மணி. ஆறு பிள்ளைகளைப் பெற்றெடுத்து ஒரு வித்துவானின் வருமானத்தில், வெற்றிகரமாகக் குடும்பத்தை நடத்தியவர் அவர். அந்த வீட்டின் பிள்ளைகள் அனைவரும் தாயின் கட்டுப்பாட்டிலேயே வளர்ந்தனர். ஆரம்ப காலத்தில் ரத்தினகுமார்எங்களோடு நெருங்கி இணைய முன்பும், இவர்கள் வீட்டுடன் எனக்கு உறவு இருந்தது. விளையாட்டாய் அக்காலத்தில் நான் கை ரேகை பார்க்கத் தொடங்க, அதுபிரபலமாகி ஒரு சாத்திரக்காரன் அளவுக்கு என் நிலை மாறியது. அப்போது ரத்தினகுமாரின் தாயார் என்னிடம் சோதிடம் கேட்க முயல்வார். பின்னாளில் ரத்தினகுமார் எங்களோடு முற்றாய் இணைந்து, கழக முயற்சியில் மூழ்கிய போது அம்மையார் அதைத் தவறாய் எடுக்கவில்லை. மற்றப் பிள்ளைகளை விட, அவருக்கு ரத்தினகுமாரின் மீது தான் அதிக அன்பு. அதனால் ரத்தினகுமாரின் முடிவுகளை அவர் மறுக்கமாட்டார். போகப்போக ரத்தினகுமார் கழகத்துள் கரைந்த போது, அவன் குடும்பத்தார் அதைப் பெரிய அளவில் விரும்பவில்லை. ஆனாலும், அத்தாயார் அது பற்றி என்னிடம் மனம் நோகும்படி ஒரு வார்த்தை கூடப் பேசியதில்லை. ரத்தினகுமார் தொடர்ந்து எங்களுடன் இருப்பதற்கு அவர் அனுமதித்தார். அவர் நினைத்திருந்தால் தனது ஒரு வார்த்தை மூலம் ரத்தினகுமாரை எங்களிடமிருந்து பிரித்திருக்கலாம். நான் அத்தாயாய் இருந்திருப்பினும் அதைத்தான் செய்திருப்பேன். ஆனால், அத்தாய் பெருந்தன்மையோடு அதனைச் செய்யவில்லை. ஒவ்வொரு வருடப்பிறப்பின் போதும் கம்பன் கோட்டத்திற்கு வந்து, பூசை அறையில் நூற்றியொரு ரூபாய் பணம் வைத்து கழகம் பெருக வேண்டும் என வேண்டிச் செல்வார். வி.கே.குமாரசாமி அவர்களும் எனது இசை ஆர்வத்தால் என்னை நேசித்தார். நானும், கழகமும் அப்பெற்றோருக்கு எத்தனையோ துன்பங்களைக் கொடுத்திருக்கிறோம். ஆனாலும், அவர்கள் கடைசி வரை எம்மை வெறுக்காமல் வாழ்த்தினர். பாரிசவாதத்தால் உடலின் ஒரு பகுதி இயங்காத கடைசி நிலையிலும் தன் ஆளுமை குன்றாமல் ஒற்றைக் கையால் சமையல் செய்து, தனித்திருந்து தன் கணவரைக் காப்பாற்றினார். அவ் அம்மையார் மரணப் படுக்கையில் கிடக்கையில் எனை அருகழைத்து, "அவனைக் கடைசி வரை கைவிடாமல் பார்த்துக் கொள்ளுங்கோ" என்று, அவர் சொல்லிச் சென்றதை நினைத்தால், இப்போதும் என் நெஞ்சுருகும். கழகத்தின் ஒரு சிறந்த விழுதை உருவாக்கிய வேர்கள். அவர்களைத் தக்காராக நிரூபிக்கும் எச்சமாய் நிற்கும் ரத்தினகுமார், இன்றும் கழகத்தின் காவலனாய்த் தன்னை அர்ப்பணித்து நிற்கிறான்.

* * *

**கழகத்தின் மூன்றாம் கட்டத் தொண்டர்கள்**

இக்காலத்தில் நிறைய இளைஞர்கள் கழகப் பணிகளில் ஈடுபட்டார்கள். அவர்களுள் முக்கியமான ஒரு சிலரைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன்.

*ஜெபரஞ்சன், சுரேன்:*

இவ்விருவரும் ரகுபரனோடு வந்து இணைந்தவர்கள். சுயநலம் பாராது கடுமையாய் கழகத்தில் உழைத்தவர்கள். அதிகம் பேசாதவர்கள். இவர்களுள் சுரேன், வைமன் ரோட்டில் சிலகாலம் எங்களுடனேயே தங்கியிருந்தான். அவனது பேச்சு, செயல் எதிலும் மிகையிராது. என் மனதிற்கு மிகவும் பிடித்த பிள்ளை. நல்லூர் வீதியில் கம்பன் விழாக்கள் நடக்கத் தொடங்கிய பிறகு, பேராளர்களுக்கு நாம் பெரு விருந்திடுவதாய் முன்பு சொல்லியிருக்கிறேன். அந்தப் பொறுப்பினை இவ்விருவரும் தான் பார்த்துக் கொள்வார்கள். மேடையிலோ அல்லது சபைகளிலோ தம்மை வெளிப்படுத்த வேண்டும் என்று, துளியும் எதிர்பாராதவர்கள். இருவரும் மிக அமைதியான நல்ல பிள்ளைகள். இடப்பெயர்வின் பின் இவர்கள் நெருக்கம் ஏனோ குறைந்து போயிற்று. ஜெபரஞ்சன் திருமணமாகி வெளிநாடு சென்று விட்டான். இங்கு வரும்போதெல்லாம் அன்போடு உறவு பேணுவான். சுரேன் திருமணமாகி வவுனியாவில் இருந்தாலும், நாம் கொழும்பு வந்த பிறகு அவனுடைய தொடர்பு ஏனோ குன்றிப் போயிற்று. இவ்விருவரது உண்மை உழைப்பையும், அன்பையும், கழகம் என்றும் மறவாது.

* * *

(தொடரும்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில்

# கொழும்பு மாவட்டத்தில் வாழும் தமிழர்கள் தங்களின் பலத்தை காண்பிக்கவேண்டும்!

### அமைச்சர் மனோ கணேசன் வலியுறுத்துகிறார்



எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் வாழும் தமிழ் மக்கள் தமது பலத்தைக் காண்பிக்க வேண்டும். தமிழ் மக்களின் பலத்தைக் காண்பிக்க வேண்டும் என்பதற்காகவே இந்தத் தேர்தலில் நாம் தனித்துப் போட்டியிடுகின்றோம்.

நாம் பலமாக இருந்தால்தான் பெரும்பான்மை கட்சிகளிடமிருந்து எதனையும் பெற்றுக் கொள்ள முடியும் என்று ஒருமித்த முற்போக்கு கூட்டணியின் தலைவரும் தேசிய சகவாழ்வு மற்றும் கலந்துரையாடல் அமைச்சருமான மனோ கணேசன் வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பு மாவட்டத்தில் தமிழர்களின் தலைநகராக கொச்சிக்கடையே திகழ்கின்றது. கொச்சிக்கடை வீரம் செறிந்தவர்கள் வாழும் பகுதியாகும். கொச்சிக் கடையை உள்ளடக்கிய வடகொழும்பிலேயே தமிழ் மக்கள் பெருமளவில் வாழ்கின்றனர்.

எனவே, கொழும்பு வடக்கில் வாழும் தமிழர்களும் ஏனைய பகுதிகளில் வாழும் தமிழ் மக்களும் எமது தனித்துவமான பலத்தைக் காண்பிக்கும் வகையில் வாக்களிக்க வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஊடகவியலாளர் மணி டன்ஸ்டனின் "இன்னும்பெயர் வைக்கல்ல'' எனும் நூல் வெளியீடு கொழும்பு டி. ஆர். விஜயவர்த்தன மாவத்தையில் அமைந்துள்ள தபால் திணைக்கள கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கொச்சிக்கடையானது என்னை நம்பும் மக்கள் வாழும் பகுதியாகும். அது எனது கோட்டையாகும். கொச்சிக் கடை தமிழ் வீரம் செறிந்த பகுதியாகத் திகழ்கின்றது. எனக்கும் தமிழ்செருக்குகாணப் படுகின்றது.

நான் எட்டியாந்தோட்டையில் பிறந்து களனி கங்கையின் தண்ணீரையும் கண்டியில் வளர்ந்து மகாவலி கங்கையின் தண்ணீரையும் குடித்து வளர்ந்தவன். எனக்கும் இத்தகைய தமிழ் வீரம் உள்ளது. உள்ளூராட்சித் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் நாம் தனித்து போட்டியிடுகின்றோம்.

ஐக்கிய தேசியக்கட்சியுடன் இணைந்தும் சில பகுதிகளில் தனித்தும் நாம் மலையகத்திலும் தென்பகுதியிலும் போட்டியிடுகின்றோம்.

கொழும்பு மாவட்டத்தில் நாம் எமது தனித்துவமான பலத்தைக் காண்பிக்க வேண்டும். பெரும்பான்மைக் கட்சிகள் நாம் கேட்பதையெல்லாம் தட்டில் வைத்து தரப்போவதில்லை. எமது பலத்தை காண்பித்தால்தான் அதற்கான சூழலை உருவாக்க முடியும்.

கொழும்பு மாநகரசபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் எனது நண்பருமான ரவூப் ஹக்கீம், ஸ்ரீலங்கா மக்கள் காங்கிரஸின் தலைவரும் நண்பருமான ரிஷாத் பதியுதீன் ஆகியோர் ஐக்கிய தேசியக் கட்சியினால் ஏமாற்றப் பட்டுள்ளனர்.

இறுதிநேரத்தில் அவர்களது வேட்பாளர்களது பெயர்கள் பட்டியலில் இருந்து வெட்டப் பட்டு வேறுபெயர்கள் சேர்க் கப்பட்டுள்ளன. முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க பெயர்களை வெட்டுவதில் கெட்டிக்காரர். அவர்தான் இந்த விடயத்தை மேற்கொண்டுள்ளார்.

இதேபோன்றே, ரவி கருணாநாயக்க எங்களது விடயத்திலும் செயற்பட எத்தனித்தார். அவர் சூரர்என்றால்நான்அதனைவிட சூரனாவேன். இதனால்தான் நாம் தனித்து போட்டியிடும் நிலை உருவானது. இவ்வாறு தனித்துப் போட்டியிட்டு நாம் எமது பலத்தை காண்பிக்க வேண்டும்.

தற்போது கொச்சிக்கடை உட்பட கொழும்பில் இந்திய தொலைக்காட்சிகளை தமிழ் மக்கள் பெரிதும் பார்வையிட்டு வருகின்றனர். இவ்வாறு படங்களையும் நாடகத் தொடர்களையும் பார்க்காது எதிர்வரும் 10 ஆம் திகதி அனைவரும் வாக்களிக்கச் செல்லவேண்டும்.

படத்தில் வரும் இந்திய நடிகர்களான விஜயோ, அல்லது சூரியாவோ, ஆரியாவோ உங்களுக்கு இங்கு பிரச்சினை வரும்போது வரப்போவதில்லை. ஆனால் மனோகணேசன் மட்டுமே உங்களது வீடுகளுக்கு உடனே வருவான்.

எனவே, இதனை உணர்ந்து கொச்சிக்கடை மக்கள் உட்பட கொழும்பு வடக்கு மக்கள் உட்பட கொழும்பு மாவட்ட தமிழ் மக்கள் உங்களது வாக்குகளை எமக்கு அளிக்க வேண்டும். நாம்தனித்துவமான பலத்துடன் இருந்தால் தான் நல்லது. எதனையும் சாதிக்க முடியும் என்றார் மனோகணேசன்.

## சென்.ஜேம்ஸ் மெய்வன்மைப் போட்டி

குருநகர், ஜன.23

யாழ்ப்பாணம் - குருநகர் சென்.ஜேம்ஸ் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்லமெய்வன்மைப் போட்டி எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு , பாடசாலை மைதானத்தில் அதிபர் கே.கலியுகம் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக புனித யாகப்பர் ஆலய பங்குத்தந்தை அருட்பணி ம.ரவிச்சந்திரன் கலந்து கொள்வார். (இ

### சிறுபான்மைச்சமூகத்தினருக்குபிரச்சினைகள்ஏற்பட்டால்

# தமிழ்ச் சமூகமும் முஸ்லிம் சமூகமும் ஒருமித்து குரல் கொடுக்க வேண்டும்

### அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு



சிறுபான்மைச்சமூகங்களுக்கு பிரச்சினைகள்வருகின்றபோது தமிழ்ச் சமூகமும், முஸ்லிம் சமூகமும் ஒருமித்து குரல் கொடுக்க வேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

மாணிக்கமடு மாயக்கல்லி மலையில் சிலை வைத்து, ஊடுருவல்கள் நடைபெறுகின்ற இந்தச் சூழ்நிலையில் இரு சமூகங்களும் ஒருமித்து பயணிப்பதற்கான அவசியம் ஏற்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இறக்காமம் பிரதேச சபையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக யானைச் சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மக்களின் பல்லினத் தன்மையைப்பேணுவதில்மாணிக்கமடு கிராமம் முக்கிய இடம் வகிக்கிறது. ஆனால், ஒரு சமூகம் இது எங்கள் நாடு என்கிறது.

மாணிக்கமடுவிலுள்ள தமிழர்களை யாரும் வந்தேறு குடிகளாக பார்க்கமுடியாது. மாயக்கல்லி மலையில் அத்து மீறி, சிலை வைக்கப்பட்டது இது தேசியளவில் பேசு பொருளாக மாறியுள்ளது.

தமிழர்களின் போராட்டங்களில் முஸ்லிம்கள் பங்கு கொள்ள வேண்டும். முஸ்லிம்களின் போராட்டங்களில் தமிழர்கள் பங்குகொள்ள வேண்டும். சிறுபான்மைக்கு பிரச்சினை வருகின்றபோது இரு சமூகங்களும் ஒருமித்து குரல்கொடுக்க வேண்டும்.

மேலும்,மாயக்கல்லி மலையில் இடம்பெறும் ஊடுருவல்களுடன் ஐக்கிய தேசியக் கட்சி அரசியல்வாதிகளும் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் எனத் தெரிவித்த ரவூப் ஹக்கீம், அவர்களைக் கட்டுப் படுத்துவதற்காகவே யானைச் சின்னத்தில் உள்ளூராட்சி சபை தேர்தலில் போட்டியிடுகின்றோம் எனக் குறிப்பிட்டார்.

## யாழ்.மாவட்ட வாக்காளர் நேற்று தபால் மூல வாக்களிப்பில் ஆர்வம்



யாழ்ப்பாணம், ஜன. 23

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தபால் மூல வாக்களிப்பு நேற்று நாடளாவிய ரீதியில் ஆரம்பமானது.

பொலிஸ் அதிகாரிகள், தேர்தல் அலுவலக மற்றும் மாவட்ட செயலக தேர்தல் அலுவலக அதிகாரிகளுக்கான தபால்மூல வாக்களிப்பு நேற்று இடம்பெற்றது.

இந்த நிலையில், யாழில் நேற்று அரசஉத்தியோகத்தர்கள் ஆர்வத்துடன் வாக்களித்தனர்.

யாழ்ப்பாண நிர்வாக மாவட்டத்தில் நான்கு லட்சத்து அறுபத்தெட்டாயிரத்து நானூற்றி எழுபத்தாறு பேர் வாக்களிப்பதற்கானதகுதி பெற்றுள்ளனர்.

இதில் தபால் மூல வாக்களிப்பில் 17 ஆயிரத்து 273 பேர் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, அடுத்த கட்ட தபால் மூல வாக்களிப்பு எதிர்வரும் 25 மற்றும் 26 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நாட்டில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது அவசியம் :பிரதமர்

கொழும்பு, ஜன.23

நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்துவதற்கான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளாம் எனபிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

புத்தளம், பொதுவடவன மகா விஹாரையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும், வெளிநாட்டு முதலீட்டாளர்களை எமது நாட்டிற்குள் கொண்டு வருவதற்கு நாட்டில் உள்ள உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது அவசியம் என்றும் பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. சுகமாக வாழ்வதற்குத் தூய காற்று, தூய நீர் என்பன ......................
(அவசியமாகின்றது / அவசியமாகின்றன)

8. 'ஈ மெயில்' என்பதன் தமிழ்ச் சொல்லை எழுதுக. ........................................

9. கீழே தரப்பட்ட கவிதையில் உள்ள வெற்றிடத்தைப் பூரணப்படுத்துக.

திறமை உள்ள மனிதரைச்
சேர்ந்த பொருள்கள் பயனுமே
...............................................
சிறப்பும் புகழும் பெற்றிடும்.


10. கீழே தரப்பட்டுள்ள கவிதையை வாசித்துக் கேட்கப்பட்டுள்ள வினாவுக்குரிய விடையைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
கல்லைச் சிற்பி கண்டான்
கல்லைக் கண்டும் சிற்பமாக்க
கல்லை மாற்றி அமைத்தான்
கண்ட மக்கள் போற்றினர்.

சிற்பியை மக்கள் ஏன் போற்றினர்?

..........................................................................................................

11. வட்டத்திற்குள் உள்ள எழுத்துக்களை ஒழுங்குபடுத்தி படத்திற்குரிய ஆங்கிலச் சொல்லை எழுதுக.

1) 2)




.................................... ....................................

12. தரப்பட்டுள்ள வாக்கியத்தின் கருத்தினை ஆங்கிலத்திற்கு மாற்றி, ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.
என்னால் பறக்க முடியும். ..........................................................

13. தரப்பட்டுள்ள ஆங்கில வாக்கியங்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.
1) Draw a circle ..........................................................
2) I am watering the plants. ..........................................................

14. கீழே தரப்பட்டுள்ள சிங்களச் சொற்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.
1) பிஹிய .......................... 2) ஹற(த்)தலிஹ ..........................

15. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுக.
அண்ணா கடைக்குப் போனார். ..........................................................


16. பின்வரும் நிகழ்வைத் தொடர்ந்து உமது அனுபவத்தை மூன்று வாக்கியங்களில் எழுதுக.
(ஒவ்வொரு வாக்கியத்திலும் ஆறு சொற்கள் இடம்பெறுவதுடன் சரியான எழுவாய் பயனிலை தொடர்பு காணப்பட வேண்டும்.)
நான் எனது பெற்றோருடன் காலை ஒன்பது மணியளவில் மிருகக்காட்சிச் சாலைக்குச் சென்று, அதனைப் பார்ப்பதற்கான நுழைவுச்சீட்டை எனது பெற்றோர் பெற்றுக்கொண்டனர். முதலில் ........

1) ..........................................................
..........................................................
2) ..........................................................
..........................................................
3) ..........................................................
..........................................................





28. இவ்வுருவின் சுற்றளவு





1) 120 cm
2) 240 cm
3) 320 cm

29. கீழ்வரும் கோட்டுப் படத்தின் உதவியுடன் கேட்கப்பட்ட வினாவுக்கான விடையைத் தெரிக.

| | | |
|---|---|---|
| 1 அப்பிள்<br>2 தோடை<br>2 மாம்பழம் | 2 அப்பிள்<br>2 தோடை<br>2 மாம்பழம் | 5 அப்பிள்<br>1 தோடை |
| ரூபாய் 125 | ரூபாய் 150 | ரூபாய் 155 |

இதன்படி நிஷாந் 5 அப்பிள்களை வாங்கிக்கொண்டு கடைக்காரரிடம் ரூபாய் 500 ஐக் கொடுத்தால் அவருக்குக் கிடைக்கும் மீதிப்பணம்
1) ரூபாய் 375 2) ரூபாய் 350 3) ரூபாய் 30

கீழே நகரம் ஒன்றில் உள்ள முக்கிய இடங்கள் பற்றிய வரைபடம் தரப்பட்டுள்ளது. வரைபடத்தை அவதானித்து 30ம் 31ம் வினாக்களிற்கு விடை தருக.





30. I என்ற இடத்தில் இருந்து புறப்பட்ட நிமலி L இனூடாக தபாற்கந்தோருக்குச் சென்றாள். பதிவுக் கடிதத்தை அனுப்பிவிட்டு வந்த வழியே திரும்பி 3 km பயணஞ்செய்த பின்னர் தான் முத்திரை வாங்க வேண்டும் என்ற நினைவு வந்தது. உடனடியாக திரும்பி தபாற்கந்தோர் நோக்கிச் சென்றாள். தபாற் கந்தோரில் முத்திரையை வாங்கிக்கொண்டு வந்த வழியே புறப்பட்ட இடத்திற்குத் திரும்பினாள். நிமலி மொத்தமாக எத்தனை கிலோமீற்றர் தூரம் பயணஞ்செய்தாள்?
1) 24 km 2) 23 km 3) 25 km

31. E என்ற இடத்திலிருந்து புறப்பட்ட ஒருவர் சந்தைக்குச் சென்று தமக்குத் தேவையான பொருட்களை வாங்கிய பின்னர் வைத்தியசாலைக்குச் சென்றார். அவர் தற்போது F இற்கு எத்திசையில் உள்ளார்?
1) வடமேற்கு 2) தென்கிழக்கு 3) வடகிழக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போத்தல்களிலுள்ள பானங்களின் மொத்த அளவுகள் கீழே தரப்பட்டுள்ளன. கேட்கப்பட்டுள்ள வினாக்களிற்குரிய விடையின் கீழ்க் கோடிடுக.






32. கூடியளவு பானத்தைக் கொண்டுள்ள போத்தல் எது?
1) B 2) C 3) D

33. சமமான அளவு பானங்களைக் கொண்டுள்ள போத்தல்கள் இரண்டு உள்ளன. அவை எவை?
1) AB 2) AC 3) BD


34. தோடம்பழ வியாபாரி ஒருவர் முக்கோண வடிவ இறாக்கையொன்றின் முதல் தட்டில் 1 பழமும், அடுத்த மூன்று தட்டுகளிலும் பழங்களை அடுக்கினார் எனின், அவ்விறாக்கையில் உள்ள பழங்களின் எண்ணிக்கை
1) 8 2) 9 3) 10

35. கீழே சதுரமுகியின் முகங்கள் தரப்பட்டுள்ளன. இதனை ஒட்டுவதன் மூலம் பெறப்படும் சதுரமுகியின் சரியான அமைப்பு யாது



1) 2) 3)


36. பின்வரும் உருவில் K, P, C, D, M ஆகிய நகரங்கள் வீதியால் இணைக்கப்பட்டுள்ள விதத்தை பின்வரும் படம் காட்டுகிறது. இங்கு C யிலிருந்து பயணத்தை ஆரம்பித்து அனைத்து நகரங்களுக்குச் செல்ல வேண்டிய ஒருவருக்கு மிக நீண்ட பாதையாக அமைவது,




1) CDKPM 2) CDMPK 3) CDKMP

37. பாலன் 5 மணித்தியாலத்தில் 100 கிலோமீற்றர் கற்களைச் செல்கிறான் எனின், அவன் சராசரியாக ஒரு கிலோமீற்றர் கல் செல்வதற்கு எடுக்கும் நேரம் எவ்வளவு?
1) 5 நிமிடம் 2) 4 நிமிடம் 3) 3 நிமிடம்

38. பின்வருவனவற்றில் எது மிகச் சிறிய விடையைக் கொடுக்கிறது?
1) 10 இன் கால்பகுதி 2) 40 இன் பத்திலொரு பகுதி 3) 9 இன் மூன்றில் ஒரு பகுதி

39. கேக் ஒன்றை 5 சமபகுதிகளாகப் பிரித்தால் ஒவ்வொரு துண்டின் நிறையும், அது 7 சமபகுதிகளாகப் பிரிக்கப்பட்டால் கிடைக்கும் ஒவ்வொரு துண்டின் நிறையையும் விட 80g நிறை கூடியதாகும். கேக்கின் நிறை யாது?
1) 700g 2) 1400g 3) 2100g

40. ஆண்டில் சில மாதங்கள் 31 நாட்களும் வேறு சில மாதங்கள் 30 நாட்களும் உள்ளன. அவ்வாறெனின் 30 நாட்களுள்ள மாதங்களின் எண்ணிக்கை யாது?
1) 4 2) 5 3) 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# கல்விக் கதிர் வெளியீடு

## புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்

வினாத்தாள் 7

தரம்-5 பிரபல ஆசிரியர் பகுதி II நேரம்- 1 மணித்தியாலம் 45 நிமிடம்

1. பின்வரும் பாடல்களை வாசிக்க.

அப்பா வைத்த மாமரமும்
எப்போதும் பழம் தருகிறது
அம்மா வைத்த முருங்கையுமே
அளவின்றிக் காய்க்கிறது

மாமா நட்ட மிளகாயும்
மலிவாகக் காய்க்கிறது
அண்ணன் வைத்த மாதுளையோ
கிண்ணம் போல பழுக்கிறது

கேட்கப்பட்ட வினாக்களுக்குரிய விடைகளைப் பாடல்களிலிருந்து தெரிந்தெடுத்துப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

1. 'கனி' என்பதன் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக.
......................................................................................................
2. பாடல்களில் இடம்பெறும் எதிர்ப்பாற் சொற்கள் இரண்டையும் எழுதுக.
......................................................................................................
3. அளவின்றிக் காய்ப்பது எது?
......................................................................................................
4. மிளகாய் எப்படிக் காய்க்கிறது?
......................................................................................................
5. இங்கு இடம்பெறும் உவமானம் எது?
......................................................................................................
6. விசிறி என்னும் உயிர்க்குறி மாத்திரம் இடம்பெறும் ஒரு சொல்லை இரண்டாவது பாடலில் இருந்து தெரிந்தெடுத்து எழுதுக.
......................................................................................................

2. வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.
1. அரசன் தனது .............................. ஆராய்ந்து முடிவெடுத்தான். (பிரச்சனைகளை / பிரச்சினைகளை)
2. சிபிச்சக்கரவர்த்தி புறாவிற்காகத் தன்னையே .............................. முன்வந்தான். (அர்ப்பணிக்க / அற்பணிக்க)
3. கடைகளில் இடப்படும் குப்பைகளை .............................. மன்ற ஊழியர்கள் சேகரிக்க வருவர். (உள்ளூராட்சி / உள்ளுராட்சி)

3. பின்வரும் பழமொழிகளைப் பூர்த்தி செய்க.
1. உப்பிட்டவரை ..............................................
2. குப்பையிற் கிடந்தாலும் ..............................................

4. வெற்றிடத்துக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.
1. கழுதை கத்தும் என்பது போல குதிரை .................. (கனைக்கும் / கக்கரிக்கும்)
2. வைரநெஞ்சன் என்னும் மரபுத்தொடரின் பொருள் .................. ஆகும். (பொறாமை / பகை)
3. நாம் பெரியவர்களுடன் எட்டிக்குப்போட்டியாய் நடந்துகொள்ளக் கூடாது. எட்டிக்குப்போட்டி என்பதன் கருத்து .................. ஆகும். (விதண்டாவாதம் / விடாமுயற்சி)
4. வழக்கில் குற்றம் சாட்டப்படுபவன் என்னும் தொடர் குறிக்கும் தனிச்சொல் .................. ஆகும். (வாதி / பிரதிவாதி)

வெற்றிடத்துக்குப் பொருத்தமான வினைச்சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.
5. செய்தித்தாள் செய்திகளையும் தகவல்களையும் படங்களுடன் ........................ (தருகின்றது / தருகின்றன)
6. சுற்றுலாவுக்கான எல்லா ஏற்பாடுகளும் பூர்த்தியாக்கப்பட்டு ........................ (இருந்தது / இருந்தன)

# ஆப்கனில் வெடிகுண்டுத் தாக்குதலில் 8 பேர் சாவு!

காபுல்,ஜன.23

ஆப்கானிஸ்தானின் ஹெராத் மாகாணத்தில் நடைபெற்ற வெடிகுண்டுத் தாக்குதலில் அப்பாவிப் பொதுமக்கள் 8 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாகச் சாவடைந்தனர்.

ஆப்கானிஸ்தான் நாட்டின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள ஹெராத் மாகாணத்தில் வேலை செய்வதற்காக ஒரு வாகனத்தில் 10இற்கும் மேற்பட்டோர் பயணம் செய்து கொண்டிருந்தனர்.

குல்ரான் மாவட்டம் அருகே வந்த போது, அந்த வாகனத்தின் மீது வெடிகுண்டுத் தாக்குதல் நடந்தது. இந்த திடீர் தாக்குதலில் அதில் பயணம் செய்த அப்பாவி பொதுமக்கள் 8 பேர் சம்பவ இடத்திலேயே உடல் சிதறிப் பலியாகினர்.

இதுதொடர்பாகமீட்புப்படையினர் கூறுகையில், ஹெராத் மாகாணத்தில் நடந்த வெடிகுண்டுத் தாக்குதலில் 8 பேர் பலியாகினர். மேலும் ஒருவர் படுகாயம் அடைந்து சிகிச்சை பெற்று வருகிறார். இந்தத் தாக்குதலுக்கு இதுவரை எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை எனத் தெரிவித்துள்ளனர்.




## நடத்துநர் எவரும் இன்றி சிங்கப்பூரில் பஸ் சேவை!

### ஏ.ரி.எம். கார்ட் வடிவில் அறவீடு



சிங்கப்பூர்,ஜன.23

சிங்கப்பூரில் நடத்துநர் இன்றி இயக்கப்படும் பஸ்களில் பயணம் செய்பவர்கள் டிக்கெட் கட்டணத்தை ஏ.டி.எம். கார்ட் வடிவில் இருக்கும் அட்டைகள் மூலம் செலுத்துகின்றனர்.

நவீன தொழில்நுட்பம் மூலம் மக்களுக்கு சேவை வழங்குவதில் சிங்கப்பூர் முன்னிலையில் உள்ளது. அங்கு நடத்துநர் இல்லாமல் பஸ்கள் இயக்கப்பட்டு வருகின்றன.

எனவே, பஸ்களில் பயணம் செய்பவர்கள் பஸ் கட்டணத்தை ஏ.டி.எம். கார்ட் வடிவில் இருக்கும் அட்டைகளை மூலம் செலுத்துகின்றனர். ஈஸி லிங்க் நிறுவனம் ஏ.டி.எம். வடிவிலான பஸ் அட்டைகள் வழங்கியுள்ளது.

அதைக் கொண்டு ஒவ்வொரு பஸ் நிலையத்திலும் உள்ள மீள்நிரப்பு இயந்திரங்களில் பணத்தைச் செலுத்தி அட்டையில் சேமித்துக் கொள்ள வேண்டும். பின்னர் பஸ்ஸில் ஏறும் போது அங்கு இருக்கும் எந்திரத்தில் இந்த அட்டையைக் காட்ட வேண்டும். அது நாம் ஏறிய இடத்தைக் குறித்துக் கொள்ளும்.

பின்னர் நாம் இறங்கும் போது மீண்டும் அட்டையை இயந்திரம் முன்பு காண்பிக்க வேண்டும். அப்போது நாம் பயணம் செய்த தூரத்துக்கான கட்டணம் பஸ் அட்டையில் இருந்து எடுத்துக் கொள்ளப்படும். அட்டையை எந்திரத்தின் முன் காட்டாமல் இறங்கினால் பஸ் கடைசியில் நிற்கும் இடத்துக்கான கட்டணம் வரை கழிக்கப்படும்.

## ஆப்கன் சொகுசு ஹோட்டல் தாக்குதல்; சாவு எண்ணிக்கை 43 ஆக அதிகரிப்பு

காபூல்,ஜன.23

ஆப்கன் தலைநகர் காபூலில் சொகுசு ஹோட்டலுக்குள் புகுந்து தீவிரவாதிகள் நடத்திய துப்பாக்கி சூட்டில் பலியானோர் எண்ணிக்கை 43 ஆக அதிகரித்துள்ளது என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஆப்கானிஸ்தான் தலைநகரான காபூல் நகரின் மையப்பகுதியில் உள்ள இன்டர்கொன்டினென்டல் என்ற சொகுசு ஹோட்டலின் சமையலறை வழியாக நேற்று முன்தினம் பின்னிரவு தீவிரவாதிகள் சிலர் நுழைந்தனர். அவர்கள் கண்ணுக்கு எதிரில் தென்பட்டவர்களைச் நோக்கி சரமாரியாகத் துப்பாக்கியால் சுட்டனர்.



13 மணிநேரம் நீடித்தது சண்டை

இந்தத் தாக்குதலில் ஹோட்டலின் ஒரு பகுதி தீக்கிரையானது. தகவலறிந்த பாதுகாப்புப் படையினர் அங்கு விரைந்து சென்று அங்கிருந்தவர்களை மீட்டுப் பாதுகாப்பான பகுதிக்கு அனுப்பி வைத்தனர். சுமார் 13 மணி நேரம் நீடித்த துப்பாக்கிச் சண்டையில், ஹோட்டலில் தாக்குதல் நடத்திய 4 தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இந்தத் தாக்குதலில் அந்த ஹோட்டலில் தங்கியிருந்த ஒரு வெளிநாட்டு பெண் உட்பட 6 பேர் பலியாகினர் என அரசு வட்டாரங்கள் முதல் கட்டமாகத் தெரிவித்தன.

இந்த நிலையில், தீவிரவாதிகள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் பலியானோர் எண்ணிக்கை 43 ஆக அதிகரித்துள்ளது. மேலும் பலர் உயிருக்கு ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனப் பாதுகாப்புப் படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

(ப)

## ட்ரம்ப் மன்னிப்புக் கோர வேண்டும்

இஸ்லாமாபாத்,ஜன.23

பாகிஸ்தான் பொய், வஞ்சகம் ஆகியவற்றைத் தவிர வேறு எதையும் அளித்ததில்லை எனத் தெரிவித்த கருத்துக்கு அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் மன்னிப்புக் கேட்க வேண்டும் எனப் பாகிஸ்தான் பிரதமர் வலியுறுத்தியுள்ளார்.

தீவிரவாத ஒழிப்பு மற்றும் நாட்டின் உட்கட்டமைப்பு என்ற பெயரில் அமெரிக்காவிடம் இருந்து பாகிஸ்தான் ஏராளமான நிதி உதவிகளைப் பெற்றுப் பயனடைந்து வந்துள்ளது.

ஆனால், தீவிரவாதிகளுக்கு எதிரான ஆக்க பூர்வமான நடவடிக்கை எதையும் பாகிஸ்தான் அரசு எடுக்கவில்லை என சமீப



பாக் பிரதமர் தெரிவிப்பு

காலமாக அமெரிக்க அரசு குற்றம் சாட்டி வருகிறது. பாகிஸ்தானுக்கு அளிக்கப்பட இருந்த சில நிதியுதவிகளும் சமீபத்தில் நிறுத்தி வைக்கப்பட்டன.

இந்த நிலையில், கடந்த 15 ஆண்டுகளில் பாகிஸ்தானுக்கு 3ஆயிரத்து 300கோடி டொலர்களை வாரி வழங்கிய அமெரிக்கத் தலைவர்களை பாகிஸ்தான் முட்டாள்களாக நினைத்து விட்டது என அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் ஆவேசமாகக் குறிப்பிட்டார்.

இவ்விவகாரம் தொடர்பாக 20 நாள்கள் வரை மௌனமாக இருந்த பாகிஸ்தான் பிரதமர் ஷாஹித் காகான் அப்பாசி, மேற்படி கருத்தைத் தெரிவித்த அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டு மன்னிப்புக் கேட்க வேண்டும் எனத் தனியார் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

## பிரேசிலில் 22 ஆண்டுகளாக மணல் கோட்டையில் வாழும் மன்னர்



ரியோடி ஜெனீரோ,ஜன.23

பிரேசில் நாட்டில் மன்னர் ஒருவர் கடற்கரையோரம் மணல் கோட்டை அமைத்து 22 ஆண்டுகளாக வாழ்ந்து வருகிறார்.

பிரேசில் தலைநகர் ரியோடி ஜெனீரோவில் பாரா டா திஜுகா பகுதியைச் சேர்ந்தவர் மார்சியோ மிஷயல் மடோலியாஸ் (44). இவர் இங்கு மன்னராக இருக்கிறார்.

ஆனால், இவர் கோட்டை கொத்தளங்களால் ஆன அரண்மனையில் வசிக்கவில்லை. மாறாக மணல் கோட்டையில் வசிக்கிறார். மணல் சிற்பங்கள் செய்வதில் வல்லவரான இவர் சிறு வயதில் இருந்தே கடற்கரையில் வாழ்ந்து வந்தார்.

எனவே இவருக்கு வேறு இடத்துக்குச் செல்ல மனமில்லை. கடற்கரையோரம் வசிக்க வேண்டுமானால் அதிக அளவு வீட்டு வாடகை கொடுக்க வேண்டியிருந்தது. எனவே அவரே தனக்காக அரண்மனையைக் கட்ட முடிவு செய்தார். மணல் சிற்பங்கள் செய்யும்திறன் படைத்த அவர் அழகான மணல் அரண்மனையைக் கட்டினார்.

அதில் கடந்த 22 ஆண்டுகளாக வாழ்ந்து வருகிறார். அது இடிந்து விழாமல் இருக்க அவ்வப்போது அரண்மனையின் மீது தண்ணீர் தெளித்துக் கொள்கிறார்.

இந்த மணல் கோட்டையை காண பலர் அங்கு வருகின்றனர். அவருடன் புகைப்படம் எடுத்துக் கொள்கின்றனர். அவர் தலையில் கிரீடமும் செங்கோலும் வைத்துள்ளார். அவரை அனைவரும் மன்னர் என்றே அழைக்கின்றனர். இருந்தாலும் மணல் கோட்டையும், சில புத்தகங்களுமே இவரது சொத்தாக உள்ளன.

(ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பா.ஜ.கவுடன் கூட்டணி வைத்தால் ரஜனியை மக்கள் ஏற்க மாட்டார்கள்

## வெற்றிவேல் பேட்டி

சென்னை,ஜன.23

பா.ஜனதாவுடன் ரஜனி கூட்டணி வைத்தால் மக்கள் ஆதனை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் புறக்கணிப்பார்கள் என்று வெற்றிவேல் கூறியுள்ளார்.

முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் சிகிச்சை வீடியோவை வெளியிட்டது தொடர்பாக தினகரன் ஆதரவாளரான வெற்றிவேல் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் முன் பிணை பெற்றுள்ள அவர் நேற்று பெரியமேடு அல்லிக்குளம் வளாகத்தில் உள்ள எழும்பூர் நீதிமன்றில் ஆஜரானார். அப்போது தினமும் முற்பகல் 10.30 மணிக்கு நீதிமன்றில் ஆஜராக வேண்டும் என்று வெற்றிவேலுக்கு உத்தரவிடப்பட்டது.

இதனை ஏற்றுப் பிணை பெற்ற வெற்றிவேல் நிருபர்களிடம் கூறியவை வருமாறு-

பா.ஜனதாவுடன் ரஜனி கூட்டணி வைத்தால் மக்கள் அதனை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் புறக்கணிப்



பார்கள். தற்போதைய சூழ்நிலையில் டி.டி.வி.தினகரன் தனிக் கட்சி தொடங்கினால் அவருக்கு வெளியில் இருந்து ஆதரவு அளிப்போம்.

அதாவது, கட்சியில் சேர்ந்தால் சட்டமன்ற உறுப்பினர்களின் பதவி பறிபோகும் என்பதால் இந்த முடிவை எடுத்துள்ளோம் என்று தெரிவித் துள்ளார். (ப)

# கவிஞர் வைரமுத்துவுக்கு விஜயகாந்த் கண்டனம்

ஸ்ரீவில்லிப்புத்தூர்,ஜன.23

ஆண்டாளைப் பற்றி இழிவாகப் பேசிய கவிஞர் வைரமுத்துவுக்கு தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளார்.

சிவகாசியில் பட்டாசு தொழிலை பாதுகாக்கக் கோரி தே.மு.தி.க. சார்பில் நேற்று ஆர்ப்பாட்டம் நடந்தது. அதில் தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் மற்றும் அவரது மனைவி பிரேமலதா ஆகியோர் கலந்து கொண்டு பேசினர்.

அதனைத் தொடர்ந்து, விஜயகாந்த் மற்றும் பிரேமலதா விஜயகாந்த் ஸ்ரீவில்லிப்புத்தூர் சென்று ஆண்டாள் தாயாரைத் தரிசனம் செய்தனர்.



அதன் பின்னர் தே.மு.தி.க தலைவர் விஜயகாந்த் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது ஆண்டாளைப் பற்றி இழிவாகப் பேசிய கவிஞர் வைரமுத்துவுக்கு எனது கண்டனங்களை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், வைரமுத்து மன்னிப்புக் கேட்க கோரி போராட்டம் நடத்தி வரும் சடகோப ராமானுஜ ஜீயருக்கு விஜயகாந்த் தனது ஆதரவையும் தெரிவித்துள்ளார். (ப)

## சிறையில் சசிக்கு சிறப்பு வசதிகள்:

# லஞ்ச குற்றச்சாட்டுத் தொடர்பாக ஊழல் தடுப்புப் படை விசாரணை?

பெங்களூர்,ஜன.23

சிறையில் சசிகலாவுக்கு சிறப்பு வசதிகள் செய்து கொடுக்க 2 கோடி ரூபா லஞ்சம் கொடுக்கப்பட்டது எனவெளியான குற்றச்சாட்டுத் தொடர்பான விசாரணைக்கு உத்தரவிட கர்நாடக அரசு முடிவு செய்துள்ளது எனக்கூறப்படுகிறது.

சொத்துக் குவிப்பு வழக்கில் பெங்களூர் பரப்பன அக்ரஹாரா சிறையில் அடைக்கப்பட்டுள்ள சசிகலாவுக்குச் சிறப்பு வசதிகள் செய்துதர சிறைத்துறை பொலிஸ் டி.ஜி.பி.யாக இருந்த சத்திய நாராயணராவுக்கு 2 கோடி ரூபா லஞ்சம் கொடுக்கப்பட்டது என ஐ.பி.எஸ். அதிகாரி ரூபா கடந்த ஆண்டு குற்றஞ்சாட்டி இருந்தார்.

இதுதொடர்பாக விசாரிக்க ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி வினய்குமார் தலைமையில் விசாரணைக் குழுவை கர்நாடக அரசு அமைத்தது. இந்தக் குழு விசா



ரணை நடத்தி அரசிடம் தாக்கல் செய்த அறிக்கையில்,லஞ்சம் பெற்றார் என ரூபா கூறிய குற்றச்சாட்டுகளுக்கான ஆதாரங்கள் இல்லை என்றும், இதுபற்றி ஊழல் தடுப்பு படை விசாரணைக்கு உத்தரவிடலாம் எனவும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது எனத் தகவல் வெளியானது.

தற்போது அந்த அறிக்கை உள்துறையின் கூடுதல் தலைமை செயலாளரிடம் இருக்கிறது.

இந்த நிலையில், விசாரணை குழு அளித்த அறிக்கையின்படி அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்க உள்துறை அமைச்சர் ராமலிங்க ரெட்டி தீர்மானித்துள்ளார் எனவும், இதனால் சசிகலாவுக்குச் சிறப்பு வசதிகள் செய்து கொடுக்க 2 கோடி ரூபா லஞ்சம் பெறப்பட்டது என ரூபா கூறிய குற்றச்சாட்டு தொடர்பாக ஊழல் தடுப்பு படை விசாரணைக்கு உத்தரவிட கர்நாடக அரசு முடிவு செய்துள்ளது எனத் தகவல் வெளியாகியுள்ளது.

இந்த ஊழல் குற்றச்சாட்டு விவகாரத்தில் ஏற்கனவே ஊழல் தடுப்புப் படையில் டி.ஐ.ஜி. ரூபா குற்றச்சாட்டுக் கொடுத்திருப்பதால் ஊழல் தடுப்புப் படை பொலிஸ் விசாரணைக்குக் கூடிய விரைவில் மாநில அரசு உத்தரவிடலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ப)

# பெப்.24 இல் மதுரையில் மாபெரும் பொதுக்கூட்டம்

தனது அரசியல் பிரவேசத்திற்கு வலுச் சேர்க்கும் விதமாக பெப்ரவரி 24 ஆம் திகதி அன்று மதுரையில் மாபெரும் பொதுக்கூட்டம் நடத்துவது என்று நடிகர் கமல் முடிவு செய்துள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

எதிர்வரும் பெப்ரவரி 21 ஆம் திகதியன்று ராமேஸ்வரத்தில் கலாம் இல்லத்தில் இருந்து அரசியல் பயணத்தை ஆரம்பிக்கவுள்ளேன், அன்றே தனது கட்சியின் பெயர் மற்றும் கொடியை அறிவிக்க உள்ளேன் என நடிகர் கமல் வார இதழ் ஒன்றில் தான் எழுதி வரும் கட்டுரைத் தொடரில் குறிப்பிட்டிருந்தார்.

இந்த நிலையில், மதுரை, ராமநாதபுரம், சிவகங்கை மற்றும் திண்டுக்கல் ஆகிய நான்கு மாவட்டங்களைச் சேர்ந்த தனது நற்பணி மன்ற நிர்வாகிகளை அவர் நேற்று ஆழ்வார்




பேட்டை அலுவலகத்தில் சந்தித்துப் பேசினார்.

அந்த ஆலோசனையின் முடிவில், தனது அரசியல் பிரவேசத்திற்கு வலுச் சேர்க்கும் விதமாக முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் பிறந்த தினமான பெப்ரவரி 24 ஆம் திகதி அன்று மதுரையில் மாபெரும் பொதுக்கூட்டம் நடத்துவது என்று நடிகர் கமல் முடிவு செய்துள்ளார். (ப)

# ஒரு வீத மக்களிடம் மட்டுமே நாட்டின் 73 வீத சொத்துக்கள்

நாட்டின் 73 சதவீத சொத்துக்கள்/வளங்கள், ஒரு வீத மக்களிடம் மட்டுமே உள்ளது. இது மக்களிடையே வருவாய் சமநிலை இல்லாத நிலையைக் காட்டுகின்றது என ஆய்வில் தெரியவந்துள்ளது.

சர்வதேச அமைப்பான ஒக்ஸ்போம் ஹவர்ஸ் இந்திய மக்களிடையே வருவாய் சமநிலை, சொத்துக்களின் வீதம் உள்ளிட்ட காரணிகளை அடிப்படையாகக் கொண்டு நடப்பாண்டில் ஆய்வு மேற்கொண்டது. இந்த ஆய்வறிக்கை தற்போது வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, இந்தியாவின் 73 வீத சொத்துக்கள்/வளங்கள், ஒரு வீத மக்களிடம் தான் உள்ளன.

இதற்கு வருவாய் சமநிலை இல்லாததே முக்கிய காரணம். கார்மென்ட்ஸ் துறையில் பணியாற்றும் கடை நிலை ஊழியர், அத்துறையின் அதிக சம்பளம் வாங்கும் அதிகாரியை போல் உயர, அவருக்கு 941 ஆண்டுகள் பிடிக்கும் என்ற அதிர்ச்சித் தகவல் அதில் வெளியாகியுள்ளது.

இந்தியா மட்டுமல்லாது சர்வதேச அளவிலும் இதேநிலை தான் உள்ளது. (ப)

# இந்தியாவில் இருந்து மியன்மார் திரும்ப மறுக்கும் ரோகிங்யாக்கள்

அய்சால்,ஜன.23

மியன்மாரில் இருந்து இந்தியாவிற்கு வந்து தங்கியிருக்கும் அகதிகள் சுமார் ஆயிரத்து 400 பேர் நாடு திரும்ப மறுப்புத் தெரிவித்துள்ளனர்.

மியன்மாரில் இராணுவத்திற்கும் அரகான் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே கடந்த ஆண்டு நவம்பர் மாதம் கடும் சண்டை நடந்தது. அரகான்போராளிகளை இராணுவம் இரும்புக் கரம் கொண்டு அடக்கியது. இந்தப் பதற்றமான சூழ்நிலையில் இந்தியாவின் எல்லையை ஒட்டியுள்ள சின் மாநிலத்தைச் சேர்ந்த



ஏராளமான மக்கள், இந்தியாவிற்கு அகதிகளாக வந்து மிசோரம் மாநிலத்தின் லாங்ட்லாய் மாவட்டத்தில் தங்கியுள்ளனர். தற்போது அங்கு இயல்புநிலை திரும்பி உள்ள நிலையில், மிசோரம் மாநிலத்தில் தங்கியுள்ள ஆயிரத்து 400 இற்கும் மேற்பட்ட அகதிகளை திருப்பி அனுப்பும் நடவடிக்கையை இந்திய அரசு மேற் கொண்டு வருகிறது. ஆனால், அவர்கள் நாடு திரும்ப மறுப்பு தெரிவித்துள்ளனர்.

இதுபற்றி லாங்ட்லாய் மாவட்டப் பொலிஸ் அதிகாரி லால் சங்லுரா கூறியவை வருமாறு:-

மியன்மாரில் கடந்த ஆண்டு அரகான் கிளர்ச்சியாளர்களை இராணுவம் ஒடுக்கியபோது அங்கிருந்து நவம்பர் 25ஆம் திகதி மக்கள் தப்பிவந்து அகதிகளாக தங்கியிருக்கின்றனர். தற்போது அங்கு சண்டை முடிவுக்கு வந்துள்ளது. ஒரு மாத காலமாக எந்தத் துப்பாக்கிச் சத்தமும் கேட்கவில்லை. இருப்பினும் இராணுவம் மீதான பயம் காரணமாக தங்கள் கிராமங்களுக்குச் செல்ல மறுக்கின்றனர்.

இந்த அகதிகள் அனைவரும் இரண்டு குழுக்களாக நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டு உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அவர்களின் சொந்த ஊர்களில் அமைதி திரும்பியதும் அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 70 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு மும்முனை கிரிக்கெட்

இலங்கையின் 70ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு மும்முனை கிரிக்கட் போட்டிகளுக் கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தக்கிரிக்கெட் போட்டிக்காகவிடுக்கப்பட்ட அழைப்பை இந்திய, பங்களாதேஷ் அணிகள் ஏற்றுக் கொண்டுள்ளன என இலங்கை கிரிக் கட்டமைப்பின் தலைவர் திலங்க சுமதிபால தெரிவித்துள்ளார்.

ரி-20 கிரிக்கட் போட்டியாக நடைபெறவுள்ள இந்த மும்முனைக் கிரிக்கெட் போட்டிகள் எதிர்வரும் மார்ச் மாதம் 20ஆம் திகதி கொழும்பு ஆர்.பிரேமதாஸ சர்வதேச விளை யாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

இந்தப் போட்டியில் இந்தியா மற்றும் பங்களாதேஷின் முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் பலர் இதில் கலந்து கொள்ளவுள்ளமை குறிப் பிடத்தக்கது.




# 60 மீற்றர் ஓட்டத்தில் உலக சாதனை




அமெரிக்காவில் நடை பெற்ற தடகளப் போட்டியில், 60 மீற்றர் தூரத்தை 6.37 வினாடிகளில் கடந்து, கிறிஸ்டியன் கோல்மேன் உலக சாதனை படைத்துள் ளார்.

தெற்கு கரோலினா மாகா ணத்தில் உள்ள கிலெம்சன் பல்கலைக்கழகத்தில், 60 மீற்றர் தூர உள்ளரங்கு தட கள ஓட்டப் பந்தயம் நடை பெற்றது. இந்தப் போட்டியில் கலந்துகொண்ட ஜோர்ஜி யாவைச் சேர்ந்த கிறிஸ்டி யன் கோல்மேன், 6.37 வினாடிகளில் இலக்கை அடைந்து வெற்றி பெற்றார்.

இதன்மூலம் கடந்த 2001ஆம் ஆண்டு, அமெ ரிக்காவின் மெரிஸ் கிரினி யின் சாதனையை (6.39 Sec) முறியடித்துள்ளார்.

சுமார் 17 ஆண்டுகால சாதனையை கோல்மேன் தகர்த்துள்ளார்.

எனினும், இந்த சாத னையை தடகள சம்மேள னங்களுக்கான சர்வதேச சங்கம், மதிப்பீடு செய்ய வேண்டியுள்ளது எனத் தெரிவித்துள்ளது.

# நாடு திரும்புகிறார் மத்தியூஸ் தலைமை இனி சந்திமலிடம்!

பங்களாதேஷில் இடம்பெற்றுவரும் முத்தரப்புத் தொடரில் காயமடைந்த இலங்கை அணித் தலைவர் மத்தியூஸ் நாடு திரும்புகி றார்.இந்த நிலையில் தற்போது இடம்பெற்று வரும் முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் தொடரில் இலங்கை அணிக்கு தலைமை தாங்கவுள் ளேன் ஸ- தினேஸ் சந்திமல் தெரிவித்துள்ளார்.

முத்தரப்பு ஒருநாள் தொடரில் இலங்கை அணித் தலைவராக செயற்பட்டுவந்த மத்தி யூஸிற்குஏற்பட்ட காயத்தையடுத்து அவருக்குப் பதிலாக தினேஷ் சந்திமால் தலைவராக செயற்பட்டார்.

இந்த நிலையில், முத்தரப்பு தொடரின் எஞ் சிய போட்டிகளுக்கு சந்திமல், தானே தலைமை தாங்குவேன் எனத் தெரிவித்துள்ளார்.

ஸிம்பாப்வே அணிக்கு எதிராக நேற்று முன் தினம் இடம்பெற்ற போட்டியில் இலங்கை அணி 5 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றி ருந்தமை குறிப்பிடத்தக்கது. (ப)





# வெலிங்டன் ரி-20 போட்டியிலும் தொடரும் பாக். சோகக்கதை!

பாகிஸ்தானின் சோகக்கதை ரி-20 போட்டியி லும் தொடர்கிறது. முதல் ரி-20 போட்டியில் 105 ஓட்டங்களுக்குள் சுருண்டு தோல்வியடைந்துள் ளது பாக். அணி.

வெலிங்டனில் நடைபெற்று வரும் முதல் ரி-20 போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற நியூ ஸிலாந்து, பந்துவீச்சைத் தேர்வுசெய்தது. ஒரு நாள் போட்டியில் படுதோல்வி கண்ட பாகிஸ் தான் அணி, ரி-20 போட்டியிலாவது அசத்தும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், அதன் துடுப்பாட்டவீரர்கள் சொதப் பியமையால் பரிதாப நிலையே ஏற்பட்டுள்ளது. 38 ஓட்டங்களுக்குள் முதல் ஆறு விக்கெட்டு களை இழந்த பாகிஸ்தான் அணி, கடைசியில் 19.4 ஓவர்களில் 105 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது.

அதிகபட்சமாக, பாபர் அஸாம் 41 ஓட்டங்க ளும் ஹசன் அலி 23 ஓட்டங்களும் எடுத்தார் கள். மற்ற அனைத்து வீரர்களும் ஒற்றை இலக்க ஓட்டங்களில் ஆட்டமிழந்து ஏமாற்றம் அளித்தார்கள். நியூஸிலாந்தின் ரான்ஸ், சௌத்தி தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்கள்.

இந்த எளிதான இலக்கை 3 விக்கெட் இழப் புக்கு 15.5 ஓவர்களில் அடைந்தது நியூஸி லாந்து. முதலிரண்டு விக்கெட்டுகள் 8 ஓட் டங்களில் வீழ்ந்தாலும் அதன்பிறகு வந்த வீரர்கள் பொறுப்பாக விளையாடினார்கள். மன்ரோ கடைசிவரை ஆட்டமிழக்காமல் 49 ஓட்டங்கள் எடுத்தார். ப்ரூஸ் 26 ஓட் டங்களில் ஆட்டமிழந்தார். டெய்லர் 22 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார்.

3 போட்டிகள் கொண்ட ரி-20 தொடரில் நியூஸிலாந்து 1:0 என முன்னிலை வகிக் கிறது.சமீபத்தில் நடைபெற்ற 5 ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் தொடரில் பாகிஸ்தானை 5:0 என வெள்ளையடிப்பு செய்தது நியூ ஸிலாந்து. (ப)

# டோனியின் தலைமையில் விளையாடுவது பெருமை

மேற்கிந்தியத் தீவுகள் அணி யின் வெய்ன் பிராவோ, ஐ.பி. எல். போட்டியில் டோனியின் தலைமையின் கீழ் விளை யாடுகின்றமை மகிழ்ச்சியளிக் கிறது என்று தெரிவித்துள்ளார்.

வெய்ன் பிராவோ, ஐ.பி. எல்.போட்டியில் முதலில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்காக விளையாடினார். அதன் பிறகு, மும்பை இந்தி யன்ஸ் அணியில் விளை யாடினார்.

தற்போது, சென்னை சூப்பர் கிங்ஸ் அணி அதன் தடைக் காலம் முடிந்து, இந்த ஆண்டு விளையாடவுள்ளது. இந்த நிலையில், பிராவோ மீண்டும் சென்னை அணியில் விளை யாடவுள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறு கையில்-

சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்காக ஐந்து ஆண்டு கள் நான் ரசித்து விளை யாடினேன். அது தான் ஐ.பி. எல். போட்டியில் எனது சிறந்த காலகட்டமாகும்.

டோனி, விளையாட்டைப் புரிந்துகொள்வதற்கான வழி முறையை எனக்குக் கற்றுத் தந்தார். குறிப்பாக, ரி-20 போட்டிகளைப்புரிந்துகொள்ள உதவினார்.

டோனியைப்போல ஒரு வீரர் அணியில் இடம் பெறுகின் றமை மிகவும் சிறந்தது. ஏனெ னில், விளையாட்டின் போது ஏற்படும் அழுத்தத்தைக் குறைப்பதற்கான தன்மை அவரிடம் உள்ளது. எனவே, அவரின் தலை மையின் கீழ் மீண்டும் விளை யாடுவதில் மிகவும் மகிழ்ச் சியுடன் இருக் கிறேன் எனத் தெரிவித்துள் ளார். (ப)







# ஐஸ் கிரிக்கெட் போட்டியில் இலங்கை வீரர்களும்

உலகின் முன்னணி நட்சத்திர வீரர்கள் பங்கேற்கும் ஐஸ் கிரிக்கெட் போட்டி சுவிற் ஸர்லாந்தில் எதிர்வரும் பெப்ரவரி மாதம் இடம் பெறவுள்ளது.

சுவிற்ஸர்லாந்தின் அல்ப்ஸ் பனிமலைத் தொடரில் எதிர்வரும் பெப்ரவரி 8, 9 ஆம் திக திகளில் இரண்டு ரி-20 போட்டிகள் நடத்தப்பட உள்ளன. இந்த ஐஸ் கிரிக்கெட் போட்டியில் இலங்கையைச் சேர்ந்த மகேல ஜயவர்த்தன, லசித் மலிங்க, திலகரத்ன டில்சான் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கடல் மட்டத்தில் இருந்து 5 ஆயிரத்து 910 அடி உயரத்தில் உள்ள இப்பகுதியில் வித்தியாசமான முயற்சியாகப் பனிக்கட்டி மைதானத்தில் கிரிக் கெட் போட்டி நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆணைக்குழு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யன இன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என பிரதி சபாநாயகர் திலங்க சுமதிபால தெரிவித்துள்ளார்.

இதேவேளை பிணைமுறி ஆணைக்குழு அறிக்கை தொடர்பான அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பது தொடர்பிலான விசேட கட்சி தலைவர்கள் கூட்டம் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் நேற்றுக் காலை நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இடம்பெற்றது.

## பொலிஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாணயக்காரதெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

"பிணை முறி மோசடி விவகாரத்தில் ஜனாதிபதி உண்மையிலேயே குற்றவாளிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதாக இருந்தால், பிரதமர் வசமுள்ள அதிகாரங்கள் ஜனாதிபதியின் வசமாக்கப்பட வேண்டும்.

"பொலிஸ், நீதி மற்றும் லஞ்ச ஊழல் ஆணைக்குழு போன்ற அனைத்து அதிகாரங்களும்தற்போது பிரதமர் வசமே உள்ளன. அவை சுயாதீனமாகச் செயற்படுகின்றன எனக் கூறினாலும், அவைஅப்படிசெயற்படவில்லை.

அவ்வாறிருக்கையில் தன் மீதான குற்றச்சாட்டுகளைத் தானே விசாரிக்க எப்படி பிரதமர் முன் வருவார்? அது நடக்கப்போவதில்லை.குற்றவாளிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது உண்மையாயின் பொலிஸ் மற்றும்நீதித்துறைஅதிகாரங்களை ஜனாதிபதி தனது வசமாக்க வேண்டும். – என்றார் அவர்.

நாட்டின் பொருளாதார விடயங்களைக்கையாளும்பொறுப்பைத்தாமேஎடுத்துக்கொண்டிருக்கின்றார் என ஏற்கனவே ஜனாதிபதிஅறிவித்திருந்தமைதெரிந்ததே.

## அன்னப்பட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபையின் தலைவர் சி.வீ.கே. சிவஞானம். அன்னப்பட்சி, தண்ணீரையையும் பாலையும் பிரித்துப்பார்த்து எவ்வாறு பாலை எடுத்துக் கொள்கிறதோ அதே போன்று மக்களும் வேட்பாளர்களை ஆராய்ந்து கூட்டமைப்பினரைத் தெரிவு செய்வார்கள் என்றார்.

யாழ். மாநகர சபைக்கான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபன வெளியீட்டு நிகழ்வு நல்லூர் இளங் கலைஞர் மன்றத்தில் நேற்று நடைபெற்ற போது உரையாற் றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில் –

எங்களுக்கு இதுவரை வாக்களித்தவர்கள் எங்களை விட்டு விட்டுச் செல்லுமாறு கேட்கவில்லை. ஆனால் எங்களுக்கு வாக்குப் போடாதவர்களும், ஆதரிக்காதவர்களும், விமர்சித்தவர்களுமே இப்போது எங்களை விட்டுவிட்டு போகச் சொல்கின்றனர்.

எங்களை விட்டுவிட்டு போகச் சொல்பவர்கள் தாங்கள் என்ன செய்யப்போகின்றனர், அவ்வாறு எப்படி, எங்கே, என்ன செய்ய முடியுமென்பதை அவர்கள் கூறட்டும். அதுவே ஆரோக்கியமானதாக இருக்கும்.

அதனை விடுத்து, கட்சித் தலைவரையும் கட்சியின் உறுப்பினர்களையும் கட்சியையும் விமர்சிப்பதில் அர்த்தமில்லை. தேவையில்லாத வற்றைப் பேசி எமது மக்களையும் எம்மையும் குழப்பி வருகின்றனர். ஆகவே தான் நாம் எமது மக்களுக்கு உண்மையை எடுத்துக் கூறுகின்றோம். எங்கள் கட்சி இதுவரை காலத்தில் ஏமாற்றிச் செயற்பட்டது கிடையாது. ஆகவே மக்களும் சிந்தித்துச் செயற்பட வேண்டும். – என்றார் அவர்.

## இடைக்கால...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசிடம் இருந்து இரண்டு கோடி ரூபாவை வாங்கினார் என சிவசக்தி ஆனந்தன் வவுனியாவில் தெரிவித்திருந்தார்.

நாங்கள் அரசாங்கத்திடம் இரண்டு கோடி ரூபா பணத்தை வாங்கியமையை சிவசக்தி ஆனந்தன் நிரூபித்துக் காட்டுவாரா?

வவுனியாவில் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடுகின்ற ஈ.பி.ஆர்.எல்.எவ். எந்த வட்டாரத்திலும் வெல்லமாட்டார்கள். இந்த இடத்தில் நீங்கள் அதனைக் குறித்துவைத்துக்கொள்ளுங்கள். எமது தமிழ் மக்களை ஈ.பி. ஆர். எல்.எவ். கொலை செய்தமையையும், கொன்று குவித்தமையையும் மக்கள் மறந்து விடமாட்டார்கள்.

அப்படியிருக்க, வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களைக் கொண்டு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராகப் போராட்டத்தை மேற்கொண்டவர் சிவசக்தி ஆனந்தன்தான். – என்றார் சிறிதரன்.

## ஈ.பி.டி.பி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என ஈழ மக்கள் ஜன நாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலை முன்னிட்டு வவுனியா பூந்தோட்டம் பகுதிக்கு விஜயம் மேற்கொண்டிருந்த தேவானந்தா அப்பகுதி மக்களுடனான சந்திப்பில் கலந்துரையாடுகையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் –

ஒவ்வொரு காலகட்டங்களிலும் – குறிப்பாக தேர்தல் காலங்களில் மட்டுமல்லாது – தமது சுயநலன்களுக்காகவும் சுயலாபங்களுக்காகவும் இதர தமிழ் அரசியல் வாதிகளும் சில தமிழ் ஊடகங்களும் திட்மிட்ட வகையில் எம்மீது சேறு பூசி வருகின்றன.

இவ்வாறு அவர்கள் எம்மீது சேறுபூசிகளங்கத்தை ஏற்படுத்துவதன் நோக்கம் எமது தேர்தல் வெற்றியை மழுங்கடிப்பதே ஆகும். அந்தவகையில்தான் எம்மை நோக்கி இந்த தேர்தல் காலங்களில் இவ்வாறான பொய்ப்பரப்புரைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்குப் பின்னணியில் சக தமிழ் அரசியல்வாதிகளும் மறைமுகமாக செயற்பட்டு வருகின்றார்கள்.

கடந்தகாலங்களில் நாட்டில் நடைபெற்ற பல்வேறு கொலைச் சம்பவங்கள் எம்மைத் தொடர்புபடுத்தி சில ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டிருந்தன. ஆனால் தற்போது நீதிமன்ற விசாரணைகளுக்கூடாக கொலைகளுக்கான குற்றவாளிகள் யார் என்பதை வரலாறு தெளிவுபடுத்தி வருகின்றது.

நாங்கள் செய்யாத குற்றங்களுக்காக வீணான அவமானங்களை தாங்கி நிற்கின்றோம். இந்த இடத்தில் இவ்வளவு பெருந்தொகையான மக்களை நாம் காணுகின்றபோது நிச்சயம் இது ஏனைய தமிழ் அரசியல் வாதிகளுக்கு பேரிடியாக இருக்கும் என்பது நம்பமுடிகின்றது.

அந்தவகையில் உங்களுடைய எண்ணங்கள் நிச்சயம் நிறைவேறும். அதற்கு மக்களாகிய நீங்களே பொறுப்பேற்றுக்கொள்ளவும் வேண்டும். நீங்கள்முன்வைத்துள்ள கோரிக்கைகள்யாவற்றையும் நிறைவேற்றுவதற்கு எம்மால் நிச்சயம் முடியும். நம்பிக்கையே வாழ்க்கை என்ற வகையில் உங்கள் வாக்குகளை எமக்கு வழங்கி உங்கள் வாழ்வியலை ஒளிமயமான வளமானதாக மாற்றுங்கள் என்றும்அவர் மேலும் தெரிவித்தார்.

## கூட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் யாழ்.மாநகர சபைக்கான தேர்தல் விஞ்ஞாபன வெளியீடு நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் நேற்று நடைபெற்றபோது அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலையே சித்தார்த்தன் மேற்கண்டவாறுதெரிவித்தார். அங்குஅவர் மேலும் தெரிவித்தவை வருமாறு :-

யாழ் .மாநகரசபையின் தேர்தல்விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளமை போன்று அதனை நிறைவேற்றினால்யாழ்மாநகரம் மிக அழகாகவும் சுபீட்சம் நிறைந்ததாகவும் இருக்கும். அதற்கேற்றவாறு அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

அரசியல் தீர்வைப் பெற்றுக் கொள்கின்ற அதேநேரத்தில், அபிவிருத்தியையும் முன்னெடுக்கவேண்டும். அத்தோடு மக்களுடைய வாழ்வாதாரத்தையும் வாழ்வையும் வளப்படுத்திக் கொள்ளவேண்டும்.

இவ்வாறு பல விடயங்களை யாழ்.மாநகர சபை செய்து ஏனைய சபைகளுக்கு முன் மாதிரியாக இருக்கவேண்டும். இவ்வாறான செயற்பாடுகளுக்கு அரசிடமிருந்து நிதி பெற்றுக் கொள்கின்றபோது அதனை லஞ்சம் என்றும் சிலர் கூறு வார்கள். ஏனெனில் அரசியலுக்காக எதனையும் கூறலாம் என்ற நிலைப்பாடு தற்போது வந்து விட்டது.எனினும்நாம்அபிவிருத்தியோடுசேர்ந்ததாக எமது உணர்வுகளும் உரிமையும் மழுங்கடிக்காத – விட்டுக்கொடுக்காத – வகையில் அரசியல் தீர்வையும் நோக்கிப் பயணிக்க வேண்டும்.

இதற்கு நாம் எமது பலத்தை உறுதிசெய்து கொள்ளவேண்டும். ஏனெனில் தமிழ் மக்களின் பலம் ஒற்றுமையில் தான்உள்ளது. ஆகவே எமது பலம் குறைந்தால் தமிழ் மக்களின் பலமும் குறைந்து விடும்.

புலிகளின் காலத்தில் பலமாக இருந்த தமிழ் மக்களுக்கு புலிகளின் பின்னர் எவ்வாறு பலம்குறைந்ததோஅதேபோன்ற நிலைமையே கூட்டமைப்பின் பலம் குறைந்தாலும் தமிழ் மக்களுக்கு நேரும் என்ற நிலைமை உள்ளது. புலிகளிற்கு பின்னரான காலத்தில் தமிழ் மக்களின் பலமாகக் கூட்டமைப்பிற்கே எமது மக்கள் ஆணையை வழங்கி வந்திருக்கின்றனர்.

இன்றைக்கு தமிழ் மக்களின் பலமாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே இருக்கின்றது. கூட்டமைப்புதான் அரசாங்கத் துடனும் சர்வதேசத்திலும் பேரம் பேசும் சக்தியாக இருக்கின்றது. ஆகவே கூட்டமைப்பை மக்கள் பலப்படுத்துவதனூடாக தம்மையும் பலப்படுத்திக் கொள்ளமுடியும்.

இவ்வாறு கூட்டமைப்பு பலமான அமைப்பாக இருப்பதனூடாகவே தொடர்ந்து அரசியற் தீர்வு மற்றும் அபிவிருத்தி என்ற பாதையில் சிறப்பாக பயணிக்க முடியுமெனச் சித்தார்த்தன் மேலும் தெரிவித்தார்.

## யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நோக்கி' எனும் தொனிப் பொருளில் யாழ் மாநகர சபைக்கான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் நேற்றுமாலை வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

இத்தேர்தல்விஞ்ஞாபனத்தை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை. சேனாதிராசா வெளியிட்டு வைக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றாகிய புளொட் அமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் பெற்றுக் கொண்டார்.

இந்நிகழ்வில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன், வடக்குமாகாண சபை உறுப்பினர்களான ஆர். ஜெயசேகரம், பா. கஜதீபன், ஆ.பரஞ்சோதி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாநகரசபை வேட்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்களும் கலந்து கொண்டனர்.

இத்தேர்தல் விஞ்ஞாபனத்தில் அழிக்கப்பட்ட மாநகரசபைக் கட்டடத்தை மீண்டும் அதே இடத்தில் புதுப்பொலிவுடன் அனைத்து வசதிகளையும் கொண்டதாக அமைத்தல், சாத்தியமான வழிமுறைகளின் கீழ் மாநகரம் முழுவதிற்கும் சுத்திகரிக்கப்பட்ட குடி தண்ணீர் விநியோகம், நிலத்தடி நீர்மாசடைவதைத் தடுக்கும் வகையில் மலக்கழிவு அகற்றலுக்கான பாதாள சாக்கடைத் திட்டம், மாநகர திண்மக் கழிவகற்றல் முறைமை நவீன தொழிநுட்பமுறையில் வினைத்திறனுடன் செயற்பட்டு நகரம் சுத்தமாகப் பேணப்படுதல், மாநகருக்கு நவீன தொழில்நுட்ப முறைமையில் வடிகால்அமைப்பு, மாநகர எல்லையினுள்காணப்படும்போக்குவரத்து நெரிசலுக்கான உடனடித் தீர்வு,முன்னைய நிர்வாகங்களில் இடம்பெற்ற முறைகேடுகள், ஊழல், மோசடிகளுக்கு உடனடி விசாரணை உள்ளிட்ட பல விடயங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. (உ)

## 4 சிங்கள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரைத் தாக்கிய குற்றச்சாட்டிலேயே அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக முகாமைத்துவ பீட 4ஆம் வருட சிங்கள மாணவர்கள் இருவருக்கு 3ஆம் வருட சிங்கள மாணவர்கள் கடந்த வியாழக் கிழமை இரவு பல்கலைக்கழகத்துக்கு முன்பாக வைத்து தாக்குதல் நடத்தினர் என்று கூறப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் தாக்குதலுக்குள்ளான மாணவர்கள், கோப்பாய்பொலிஸாரிடம்முறைப்பாடு செய்தனர். அவர்கள் இருவரும் காயங்கள் ஏற்படாத போதும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனர்.

இந்த நிலையில் விசாரணைகளை மேற்கொண்ட கோப்பாய் பொலிஸார், தாக்குதலுக்குள்ளான மாணவர்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் 4 சிங்கள மாணவர்களைக் கைது செய்தனர். அவர்கள் நேற்று யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்டனர்.

மாணவர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி மன்றில் பிணை விண்ணப்பம் செய்தார். ஆயினும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு இடையேயான மோதல்கள் தற்போது அதிகரித்து வருவதால், விசாரணைகளை முன்னெடுக்கும் வகையில் 4 மாணவர்களையும் வரும் 25ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்ப்பாணம் நீதிவான் சி.சதீஸ்தரன் உத்தரவிட்டார்.

## ஏ.இ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனோகரன் நேற்று இரவு 7.30 மணியளவில் சென்னையில் காலமானார் என அவரது உறவினர்கள்தெரிவித்துள்ளனர்.

இலங்கையின் புகழ்பெற்ற பொப்பிசை பாடகரான இவர் சுமார் 250 படங்களில் நடித்துள்ளார். தமிழ், சிங்களம் உட்பட 5 மொழிகளில் பாடியுள்ளார்.

பக்கம் 03 >>>

## தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளார்.

ஜனநாயக ரீதியில் சுதந்திரமான தேர்தலை தேர்தல்கள் ஆணைக்குழு நடத்துவதற்கு நீதிமன்றம் ஒத்துழைப்பு வழங்கும் வகையில் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நியாயதிக்கத்துக்குட்பட்ட பகுதிகளில் பாரதூரமான குற்றச்செயல்கள் தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நபர்களுக்கு தேர்தல் முடிவடையும்வரை பிணை வழங்க முடியாது'' – என்றும் அவர் தெரிவித்தார்.

54 கிலோ கஞ்சா போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேகநபர் மற்றும் கோழி இறைச்சிக்குள் போதைப்பொருளை மறைத்து சிறைச்சாலைக்குள் கொண்டு சென்ற குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர் ஆகியோர் சார்பில் யாழ்ப்பாணம்மேல்நீதிமன்றில்தனித்தனியே பிணை விண்ணப்பங்கள்தாக்கல்செய்யப்பட்டிருந்தன.

அந்த இரண்டு பிணை விண்ணப்பங்களும் நேற்று விசாரணைக்கு வந்த போதே யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி இந்தக்கட்டளையைவழங்கினார்.

மேல் நீதிமன்ற நீதிபதி தமது கட்டளையில் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

போதைப்பொருள் வழக்கு, கொலை வழக்கு, கொலை முயற்சி வழக்கு, வன்புணர்வு, வாள்வெட்டுவழக்குமற்றும்சமூக விரோதகுற்றச்சாட்டுவழக்குகள் அனைத்துக்குமான பிணை விண்ணப்பங்கள் தேர்தல் முடியும்வரை அனுமதிக்கமுடியாது.

இந்தக்குற்றச்செயல்களுக்கு தேர்தல் காலங்களில் பிணை வழங்குவது தேர்தல் வன்முறைகளை அதிகரிக்கச் செய்யும் செயற்பாடாக அமைந்துவிடும். ஜனநாயக ரீதியில் வன்முறையற்ற தேர்தலாக அமைவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு சட்ட விதிமுறைகளை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கின்றது. இந்தச் சூழ்நிலையில் தேர்தல் வன்முறைகள் கூடுதலாக உள்ளன.

பாரதூரமான குற்றச்சாட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கும் நபர்களைபிணையில்விடுவதனால் தேர்தல்வன்முறைகள்அதிகரிக்கக்கூடியசூழ்நிலைமக்கள்முன்னிலையில் ஏற்பட்டுவிடும்.

பாரதூரமான குற்றச்சாட்டுக்களுக்கு தேர்தல் காலத்தில் பிணை வழங்குவது தேர்தல் வன்முறையை அதிகரிக்கச் செய்கின்றசூழ்நிலைஇருப்பதாக மன்று கருதி உள்ளூராட்சிசபைகளுக்கான தேர்தல் முடியும் வரை பிணை வழங்க முடியாதென மன்று கட்டளையிடுகின்றது. தேர்தல் முடிவடைந்த பின்னர்பிணைமனுக்கள்மன்றால் பரிசீலனைக்கு எடுக்கப்படும் எனமன்றுகட்டளையிடுகின்றது.

தேர்தல் நெருங்க நெருங்க வன்முறைகள் அதிகரிக்கக் கூடிய சூழ்நிலை காரணமாக – யாழ்ப்பாண மாவட்டத்தில் இதுவரைதேர்தல்வன்முறைதொடர்பாக பதியப்படாத போதும் – பொலிஸ் உத்தியோகத்தர்கள் தேர்தல் கடமைகளில், தேர்தல் கூட்டங்களில், தேர்தல் சட்டவிதிகளின்படி கடமைப் பொறுப்பில் ஈடுபடுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

இந்த நிலையில் குற்றவியல் வழக்குகளான கொள்ளை, ஒரு சில வாள்வெட்டுக்கள், திருட்டு மற்றும் அண்மையில் தனியாக வீட்டில் இருந்த வயோதிபப் பெண்ணைகொலைசெய்தமை தொடர்பான குற்றங்கள் நடைபெற்றுள்ளமையை மன்று கவனத்தில் எடுத்து, தேர்தல் கடமைகளில் பொலிஸார் ஈடுபடுவதற்காக அவர்களுக்கு ஒத்துழைக்கும் வகையில் குற்றச்செயல்கள் நடைபெறாது கட்டுப்படுத்துவதற்கு பாரதூரமான குற்றச் செயல்களில் ஈடுபட்ட நபர்களுக்குபிணைவழங்கமுடியாத சூழ்நிலை இருப்பதை மன்று சுட்டிக்காட்டுகின்றது.

மேல் நீதிமன்ற நியாயதிக்கத் துக்குட்பட்ட நபர்கள், தேர்தல் வன்முறையில் கைது செய்யப்பட்டால், அவர்கள் வாக்காளராக இருந்தால்என்ன, வேட்பாளராக இருந்தால்என்ன? அவர்களை தேர்தல் முடியும்வரை விளக்கமறியலில் வைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். பிணை வழங்க முடியாது – என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களக் குடியேற்றங்கள் மூலம்...

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

எம்முள் 10 லட்சத்துக்கு மேற்பட்டவரை நாட்டில் இருந்து விரட்டியாகிவிட்டது. தொடர்ந்து எமது பூர்வீக நிலங்கள் என்று இதுவரை அடையாளப்படுத்தப்பட்டு வந்த எமது நிலங்களை ஆக்கிரமிக்கும் செயலே இந்த அரச குடியேற்றம். இதை எம் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். தன்னிச்சைக்குந் தான்தோன்றியான அரசியலிடைக்கும் இருக்கும் வேற்றுமையை அறிந்து கொள்ள வேண்டும்.

**இன்று நடைபெறும் குடியேற்ற நிகழ்வுகள் பற்றி ஒரு வார்த்தை**

வவுனியாவில் கொக்கச்சான்குளம் என்ற பாரம்பரியமாகத் தமிழர் வாழ்ந்து வந்த ஒரு கிராமம் இருந்தது. அங்கு சில சிங்களக் குடும்பங்களும் அண்மைக் காலங்களில் வாழ்ந்து

## அரசு ஆசை காட்டியதால் ஓடி வந்தவர்கள் தான் சிங்களக் குடியேற்றவாசிகள்!

வந்தன. அவர்கள் யாவரும் விவசாயிகள். போர்க் காலத்தின் போது தமிழ் மக்கள் இராணுவத்தினரால் விரட்டியடிக்கப்பட்டனர். சிங்களக் குடும்பங்கள் விடுதலைப் புலிகளால் விரட்டியடிக்கப்பட்டன.

**அம்பாந்தோட்டையில் இருந்து 1,000 சிங்களக் குடும்பங்கள்**

போர் முடிந்த பின் மிக அண்மையில் சிங்கள மக்கள் அங்கு இராணுவத்தினரால் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர். சுமார் ஆயிரம் சிங்களக் குடும்பங்கள் அம்பாந்தோட்டையில் இருந்து அங்கு கொண்டுவந்து இராணுவத்தினரால் குடியேற்றம் செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் விரட்டியடித்த குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் என்று கூறமுடியாது. எவ்வாறெனினும் வெளிப்படைத்தன்மையுடன் அவர்களின் உறவு முறை எதுவும் ஆராயப்படவில்லை.

திடீரென கோக்கச்சான் குளம் கொளபஸ்வெவ என்று பெயர் மாற்றம் செய் யப்பட்டுள்ளது. மேலும் சிங்கள மக்கள் கொண்டு வரப்பட்டுக்கொண்டே இருக்கின்றார்கள். சுமார் 1,000 சிங்களக் குடும்பங்களைச் சேர்ந்தோரே வெகு விரைவில் குடியேற்றப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

மணலாறு என்று முன்னர் காலாதிகாலமாக எம்மால் அழைக்கப்பட்டுவந்த இடந்தான் தற்போதைய வெலிஓயா. முல்லைத்தீவைச் சேர்ந்த இந்த இடத்தில் 3,000 தமிழ் மக்கள் பேர்மிட் பெற்று அல்லது உரித்தாவணங்கள் பெற்று வாழ்ந்து வந்தார்கள். போரின்போது அவர்கள் இடம்பெயர நேரிட்டது. பலர் தென்னிந்தியா சென்றிருந்தார்கள். திரும்பிவந்து பார்த்தால் அவர்களின் காணிகளுக்கு அரசாங்கம் புதிய உரித்துப் பத்திரங்களை வழங்கி 3,000க்கும் மேலான குடும்பங்கள் அங்கு குடியிருந்தமையைக் காண முடிந்தது.

**தமிழ்க் கிராமம் சிங்கள கிராமமாகியது**

இப்போது அது சிங்களக் கிராமமாக மாறி விட்டது. சுமார் 2,500 ஏக்கர் காணியை இவர்கள் பிடித்துள்ளார்கள். அனுமதிப்பத்திரங்கள் இருந்த மக்களின் காணிகளை பிறருக்கு அரசாங்கம் கையளிக்கும் போது அவற்றிற்கு அனுமதிப்பத்திரங்கள் ஏற்கனவே வழங்கியிருந்ததை அறியாமலா சிங்கள மக்களுக்கு அவற்றைக் கொடுத்தது? இவை திட்டமிட்ட செயல்களின் வெளிப்பாடுகள் அல்லவா? இனப்பரவலை மாற்ற எடுக்கும் முயற்சிகள் அல்லவா? இது சம்பந்தமாக அண்மையில் இயற்றப்பட்டுவரும் திட்டந்தான் திவுல்ஓயாத் திட்டம். அது பற்றிய முழு விவரங்களை எதிர்பார்த்திருக்கின்றேன்.

இன்னும் பல இடங்கள் சிங்கள ஆக்கிரமிப்புக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றன. முள்ளிக்குளம் மன்னாரில் இருக்கும் ஒரு கிராமம் . அதனைக்கடற்படையினர்கையகப்படுத்திஅங்கிருந்தவர்களை விரட்டிவிட்டு கடற்படையினரின் குடும்பங்களுக்குக் கொடுத்துள்ளார்கள். அங்கு வாழ்ந்த 2000க்கு மேற்பட்ட குடும்பங்கள் காடுகளுக்குள் குடிசை அமைத்து வாழ்ந்து வருகின்றனர் என்று தெரியவருகின்றது.

**முன்னர் இருந்தவர்களின் வாரிசுகளாம்**

மேலும் மன்னார் மதவாச்சி வீதியில் ஆங்காங்கே சிங்களக் குடும்பங்கள் கொண்டு வரப்பட்டு குடியிருத்தப்பட்டுள்ளன. மடுரோட்டில் நூற்றுக்கு மேற்பட்ட குடும்பங்களும் முருங்கனில் சுமார் ஐம்பது குடும்பங்களும் மீள்குடியேற்றம் என்ற பெயரில் குடியமர்த்தப்பட்டுள்ளார்கள். முன்னர் இருந்தவர்களின் வாரிசுகள் என்கின்றது அரசாங்கம். இந்தக் குடும்பத்தினர் அவர்களுடன் எவ்வாறு உறவுமுறை கொண்டாடுகின்றார்கள் என்பது புரியாத புதிராக இருக்கின்றது. சில வருடங்களுக்கு முன்னர் வன்னியில் காணி தேவையெனில் உடனே மனுச் செய்க என்ற ஒரு சிங்கள விளம்பரம் நாட்டின் பல பாகங்களிலும் ஒரு தொலைபேசி இலக்கத்துடன் பிரபல்யமாய் இருந்தது.

ஒரு பௌத்த பிக்கு கொடுத்த விளம்பரம் அது என்று கூறப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் வந்தவர்களோ இவர்கள் என்பதை நான் அறியேன். ஆனால் தகுந்த சட்ட ஏற்பாடு களின் அடிப்படையில் அவர்கள் வந்தவர்கள் அல்லர்.

**நாவற்குழியில்...**

மேலும், யாழ்ப்பாணம் நாவற்குழியில் 120 சிங்களக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கு படையினரும், தெற்கில் இருந்து வந்து பௌத்த பிக்குமாரும் உதவிகள் அளித்து வருகின்றனர்.

முல்லைத்தீவு தண்ணீர்முறிப்புக் குளத்திலும் சிங்களக் குடியேற்றம் நடைபெற்று வருகிறது. இவற்றைவிட பாலதீவு, இரணைதீவு ஆகியன முற்றாகப் படையினர் வசம். முல்லைத்தீவில் 650 ஏக்கர் காணியை கடற்படை நிரந்தரமாகக் கேட்கின்றார்கள். மன்னாரை அண்டிய தீவுகளும் அவர்கள் கைவசம். அவற்றை வைத்துப் பணம் உழைக்கின்றது கடற்படை.

போர் முடிந்த இடத்தில் 450 ஏக்கர் காணி ஏற்கனவே இராணுவத்தினர் கைவசம். மேலும் எமது சுற்றுலா மையங்கள் மத்தியின் கைவசம். சுற் றுலா உணவகங்கள் விடுதிகள் தென்னவர் கைகளில். A9 பாதையில் கடைகள் பல தென்னவர் கைகளில்.

ஆகவே, சிங்களப் பாரம்பரியம் அழிவு நிலையில் உள்ளதா தமிழர் பாரம்பரியம் அழிவு நிலையில் உள்ளதா? நீங்களே கூறுங்கள். மேலும் விவரங்கள் வேண்டும் என்றால் என்னால் உங்களுக்கு அனுப்ப முடியும்.

அடுத்து நீங்கள் உங்கள் பாதுகாப்புப் பற்றி கரிசனை எழுப்புகின்றீர்கள். இந்தியா சென்று திரும்பியவர்கள் தாம் வாழ்ந்து வந்த மணலாறு காணிக்குச் சென்றபோது அங்கு வேற்று இன மக்கள் குடியிருந்தமையைப் பார்த்தபோது அவர்களுக்கு ஏற்பட்ட மனோநிலையைச் சிந்தித்தீர்களா?

முள்ளிக்குளத்தில் கடற்படையினர் தமது கிராமம் முழுவதையுமே கையகப்படுத்தி தம்மைக் காடுகளில் தஞ்சம் புக வைத்தபோது அவர்களின் வேதனையை நீங்கள் சிந்தித்தீர்களா? பௌத்தர்கள் இல்லாத இடத்தில் பௌத்த கோயில்கள் கட்டப்பட்டு படையினர் அனுசரணையுடன் தங்கள் காணிகளில் குடியிருக்கும் புத்த பிக்குகளை அவற்றின் சொந்தக்காரர்கள் காணும் போது அக்காணிச் சொந்தக் காரர்களுக்கு ஏற்படும் மன வேதனையை உணர்ந்தீர்களா? எத்தனையோ மன வேதனைகளை எமது மக்கள் அனுபவித்து வருகின்றார்கள்.

ஆனால் உங்களுக்கு நடக்கக்கூடும் என்று நீங்கள் அச்சப்படும் விடயங்கள் பெரிதாகிவிட்டன. இன்னுமொரு '58 அல்லது '83 கொழும்பில் நடக்க வாய்ப்பில்லை. எமது பிரச்சினைகள் இப்பொழுது உலகைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. நடந்தால் அவை பற்றி நடவடிக்கை எடுக்க பன்னாடுகள் காத்திருக்கின்றன.

எமது நாட்டின் பொருளாதாரம் மிகக் கேவலமானநிலையில் இருக்கின்றது. ஆகவே அரசாங்கம் இன்னொரு '58 ஐயோ 83 ஐயோ வர விடாது. கலவரங்களை அடக்கப் போதுமான இராணுவம் இப்போது தயார் நிலையில் உள்ளது. உங்களின் பயம் நியாயமற்ற பயம்.

ஆனால், எமது வடகிழக்கு மக்களின் அல்லல்களும் அல்லாடல்களும் அவர்களால் அனுபவிக்கப்பட்டுவரும் இன்றைய நிலை. தயவு செய்து சுய நலத்துடன் சிந்தித்து நடந்துகொள்வதைத் தவிர்ப்பீர்களாக! நாம் எமது நிலங்கள், மொழி, கலாசாரம், பாரம்பரியம், மதஸ்தலங்கள் பறிபோகப் போகின்றன என்று பட படத்துக் கொண்டிருக்கின்றோம்.

நீங்கள் உங்கள் தற்போதைய சொகுசு நிலை நீடிக்குமா என்ற எண்ணத்தில் இருக்கின்றீர்கள். உண்மையை உணர்ந்து கொள்ளப்பாருங்கள்! பெரும்பான்மையினர் அமைதியாக வாழ நடைபெற்று வருவதைப் புரிந்து கொள்ளுங்கள்.- எனக் கூறியுள்ளார் முதலமைச்சர். ★

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கற்பிட்டிக் கடற்கரையில் ஒதுங்கிய பெரியளவிலான டொல்பின் மீன்!



புத்தளம், ஜன. 23

புத்தளம், கற்பிட்டி கடற்கரையில் பெரியளவிலான டொல்பின் மீன் ஒன்று இறந்த நிலையில் கரை ஒதுங்கியுள்ளது.

நேற்று அதிகாலையில் இது கரை ஒதுங்கியுள்ளது என அந்தப் பகுதி மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த டொல்பின் மீன் 10 அடி நீளமும் 4 அடி அகலமும் கொண்டுள்ளதென கற்பிட்டி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சுறா இனத்தை சேர்ந்த இந்த டொல்பின் மீன், டொல்பின் மீன்களை விடவும் புத்திகூர்மையானதென தெரிவிக்கப்படுகின்றது.

பெரிய அலைகளில் சிக்கி டொல்பின், கரையொதுங்கி இருக்கலாம் எனவும், விஷ தன்மை காரணமாக உயிரிழந்திருக்கலாம் எனவும் மீனவர்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (க)

# பள்ளிமுனையில் மீன்வாடி எரிந்து உபகரணங்கள் நாசம்



மன்னார், ஜன. 23

மன்னார், பள்ளிமுனை கடற்கரையில் அமைந்துள்ள மீன் வாடி ஒன்று தீயில் எரிந்தமையால் சுமார் எட்டரை லட்சம் ரூபா பெறுமதியான மீன்பிடி உபகரணங்கள் சேதமாகியுள்ளன என பாதிப்பு அடைந்தவர் மன்னார் பொலிஸில் முறையீடு செய்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் இடம்பெற்றுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் பள்ளிமுனை கடற்கரையோரப் பகுதியில் அமைந்துள்ள மீன்வாடி ஒன்று இரவு 11 மணியளவில் தீப்பற்றி எரிவதைக் கண்டவர்கள் அந்தத் தீயை அணைக்க முற்பட்ட போதும் அந்த வாடி முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது. இருந்தபோதும் அயல் மீன் வாடிகளுக்கு இந்த தீ பரவாமல் பாதுகாக்கப்பட்டுள்ளது.

இந்த மீன்வாடிக்குள் இருந்த 15 குதிரை வலு மற்றும் 25 குதிரை வலுக் கொண்ட இரு வெளிக்கள இயந்திரங்களும், மீன்பிடி வலைகளும் மீன்பிடி உபகரணங்கள் உட்பட சுமார் எட்டரை லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் எரிந்துள்ளன என பாதிப்புக்குள்ளான மீனவர் யேசுதாசன் சந்தியோகு பிகிராடோ மன்னார் பொலிஸில் முறையீடு செய்துள்ளார்.

இதைத் தொடர்ந்து மன்னார் பொலிஸார் இது விடயமாக தீவிர விசாரணையில் ஈடுபட்டு வருகின்றனர். (சு-112)

# அமைச்சர் பழனி திகாம்பரத்துக்கு விசேட அதிரடிப்படை பாதுகாப்பு!



அமைச்சர் பழனி திகாம்பரம் உள்ளிட்ட சில அரசியல்வாதிகளுக்கு விசேட அதிரடிப் படையின் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலை முன்னிட்டே இவர்களுக்கு விசேட அதிரடிப் படையினரின் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த பாதுகாப்பு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 11 ஆம் திகதி வரையில் வழங்கப்படவுள்ளதுடன், ஜனாதிபதி, முன்னாள் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருக்கும் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் கூறப்படுகிறது.

மேலும், அமைச்சர்களான பழனி திகாம்பரம், ரவூப் ஹக்கீம், சாகல ரத்நாயக்க, சரத் பொன்சேகா, ராஜித சேனாரத்ன, தலதா அத்துகோரள, திலக்மாரப்பன, ரிஷாத் பதியுதீன் உள்ளிட்ட சிலருக்கே பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





வங்கக் கடலில் காவியமான கிட்டு, குட்டிசிறி உட்பட பத்து வேங்கைகளின் 25 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வும், ஜனவரி மாதம் வீரச்சாவடைந்த அனைத்து மாவீரர்களுக்குமான வீரவணக்க நிகழ்வும் நேற்று முன்தினம் லண்டன் சரேயில் - சுட்டனில் நடைபெற்றது. பிரித்தானியா தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டாளர்களான ஜெயதீபன் மற்றும் கஜேந்திரகுமாரின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில் மாவீரர்களின் உருவப்படத்திற்கு அஞ்சலி செலுத்தப்படுவதையும், கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம்.












யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் 50 மாணவர்களுக்கு 5 வருடத்துக்கு மாதாந்தம் 5 ஆயிரம் ரூபா உதவியைக் கல்விச் செயற்பாடுகளுக்காக வழங்கும் புலமைப் பரிசில் நன்கொடை கடந்த ஞாயிறன்று பலாலி பாதுகாப்பு தலைமையகத்தில் யாழ்ப்பாணத் தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராய்ச்சி தலைமையில் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.01.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.